அறைவு 04 இயம் 02 August 08-14, 2015
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
# மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 24 விலை : 30.00







## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

# “அனல்மின் நிலையத்தை எதிர்ப்போம்”



தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பெற்றுக்கொள்ளும் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர்

திருகோணமலை சம்பூரில் உருவாக்கப்படும் அனல் மின் நிலையத்தை எதிர்க்கும் வெளிப்படையான தனது அறிவிப்பை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) வல்வெட்டித்துறையில் உள்ள ரேவடி விளையாட்டுக் கழக கடற்கரை மைதான பிரதேசத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்-தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் வெளியிடப்பட்ட அவர்களது தேர்தல் விஞ்ஞாபனமானது தமிழரின் இருப்பைச் சிதைத்து அதனைக் கேள்விக் குறியாக்கும் செயற்பாடுகள்....... தமிழர் தாயகமெங்கும் நடைபெறுவதை......

21

### தமிழ் மக்கள் நல்லதொரு வெற்றியை (20) ஈட்டித் தந்தால்தான்

# “2016ல் தமிழர்களுக்குத் தீர்வு”

## த.தே.கூவின் கனடா கூட்டத்தில் சம்பந்தன் நிபந்தனை



“தமிழ் பேசும் மக்கள் வடக்கு, கிழக்கில் இம்முறை நல்லதொரு வெற்றியை ஈட்டித் தரவேண்டும். அப்படித் தருவார்களானால் 2016 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை நிச்சயம் பெற்றுத்தருவோம். எமது இலக்கு 20 ஆசனங்களாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

21

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாகக்

## கருணா அம்மான் பிரசாரம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே தமிழ் மக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என் கருணா அம்மான் என்றழைக்கப்படும் வீ.முரளீதரன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள -தாகப் பதிவு இணையச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் “தேசிய கட்சிகளுக்கு வாக்களித்து

21

## ஆதரவாளர்களை முடக்க முயற்சி

### முதன்மை வேட்பாளர் ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் அ.இ.தமிழ்க் காங்கிரஸ் செயற்பாட்டாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் நடவடிக்கைகளை முடக்கும் முயற்சிகள் நடைபெறுவதாக அக்கட்சியின் முதன்மை வேட்பாளரான இரா. ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்தார். முடக்க முனையும் இச் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்துள்ள அவர் இவ்வாறான அரசியற் செயற்பாடானது கீழ்நிலை அரசியற் செயற்பாடு ஆகும் எனவும் தெரிவித்தார்.

21

# “தேர்தலைப் புறக்கணிப்போம்”



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எதிர் வரும் பொதுத் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

திருமதி. ஆஷா வின் தலைமையில் கடந்த 4ம்

21

# மூதூர் படுகொலை நினைவேந்தல்




மூதூரில் படுகொலை செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டர்களின் 9ம் ஆண்டு நினைவேந்தல் கடந்த 4ம் திகதி அனுட்டிக்கப்பட்டது.

மலைமுரசின் முன்னாள் ஆசிரியரும் அ.இ. தமிழ்க் காங்கிரசின் திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.ஸ்ரீஞானேஸ்வரன் இவரது அலுவலகத்தில் அக்கட்சியின் செயற்பாட்டாளர்களில் ஒருவரான குகன் ஆகியோர் இந் நினைவேந்தலில் ஈடுபட்டனர்.

மூதூர் நகரத்தை மூன்று நாட்களாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப் புலிகள் 2006ம் ஆண்டு ஒகஸ்ட மாதம் 4ம் திகதியன்று நகரப்பகுதியை விட்டு வெளியேறியதை அடுத்து அக்ஸன் பெய்ம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள் பதினேழுபேர் அவர்களது பணிமனையில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட இரண்டு நாட்களின் பின்னரே அவர்களின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டு

21




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## தீர்விற்கான உறுதிமொழியும் நிபந்தனையும்!

தமிழரின் பிரச்சனைக்கான தீர்வு என்னவென்பதைக் கண்டறிவதற்கான முயற்சிகள் பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட வருகின்றன.

அம்முயற்சிகள் பெரும்பாலும் முரண்படும் தரப்புகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் ஏதொ ஒரு புள்ளியில் அம் முயற்சிகள் முறிவடைந்திருப்பதைக் காண முடிகின்றது. அதற்கான காரணங்கள் பலவாக இருந்தாலும் மிகப் பிரதானமான காரணம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் தரப்புக்களிற்குத் தமது பிரச்சனை என்னவென்பதைச் சரியாக அடையாளப்படுத்த முடியாதிருப்பதைக் கருதலாம்.

தமிழர்களின் பிரச்சனையின் அடித்தளமானது அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதாலெழுந்ததா? அல்லது அவர்களின் இருப்பே கேள்விக்குறியாக்கப் பட்டுக்கொண்டிருப்பதால் எழுந்ததா?

அதிகாரம்தான் தமிழர்களின் பிரச்சனைக்கான அடித்தளமாக இருந்திருந்தால் என்றோ அதிகாரப் பகிர்வு நோக்கித் தமிழர்கள் பயணித்திருப்பார்கள். அல்லது அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்பட்ட வாய்ப்புக்களை எல்லாம் அவர்கள் தெளிவாகப் பயன்படுத்தியிருப்பார்கள்.

தமிழர்களின் இருப்பானது கேள்விக்குறியாக்கப்பட்ட சிதைக்கப்படுவதுதான் தமிழர்களின் பிரச்சனைக்கான அடித்தளம் என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைத்திருநாட்டில் ஒரு தேசிய இனமாக தமிழர்கள் அங்கீகரிக்கப்படுவதற்கான அனைத்துத் தகுதிகளும் அந்த இனத்திற்கு உண்டு.

அந்தத் தகுதிகளை ஒவ்வொன்றாகச் சிதைப்பதை நோக்கமாகக் கொண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதால் அதனால் எழுகின்ற காயம் புறையோடிக்கொண்டேயிருக்கின்றது.

இந்நிலையில் தமிழர்களின் அரசியல் தலைமைத்துவத்தை இந்தத் தேர்தலுக்கு முன்னரான கடந்த 10 வருடங்களாகத் தக்க வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழரின் தீர்வைப் பெற்றுத் தருவதற்கான காலக்கெடுவை(2016) தமிழர்களுக்குத் தெரிவித்துள்ள அதேவேளை அவ்வாறு அக்காலக் கெடுவிற்குள் தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமாயின் 20 ஆசனங்களை மக்கள் வாக்குகளின் ஊடாகப் பெற்றுத்தரவேண்டும் என்ற நிபந்தனையும் விதித்திருப்பது சிந்திக்கத்தக்கது.

முதலாவது இவ்வாறு தமிழர்களிற்கான தீர்வைப் பெற்றுத்தருவதற்குத் தமிழர்களிடமே நிபந்தனையொன்றைத் தமிழ்த் தரப்பு விதிப்பது சரியானதா என்ற கேள்வி எழுகின்றது.

இரண்டாவது புறையேறிப்போயிருக்கும் தமிழர்களின் பிரச்சனையை வெறும் 16 மாதங்களில் தீர்த்துக்கொள்ள முடியுமா? அவ்வாறு தீர்வைக் காண்பதற்கான அடிப்படைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளனவா?

20 ஆசனங்களைப் பெற்றுக்கொடுத்தால் தான் 2016ல் தீர்வைப் பெற்றுத் தரலாம் என்றால் அனைவிட ஆசனங்கள் குறைந்தால் என்ன நடக்கும்? ஆசனங்களின் எண்ணிக்கைதானா தமிழர்களின் பிரச்சனையைத் தீர்க்கும் கருவி?

கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பிற்கு உட்பட்டிருக்கும் தமிழ் இனத்தினைக் காப்பதற்கு தனியொரு மக்கள் பிரதிநிதியால் இறுதிவரை போராட முடியாதா?

ஆசனங்கள் குறைவாகக் கிடைக்கும் பட்சத்தில் தாம் வழங்கிய உறுதிமொழியான 2016 தீர்வு என்ற உறுதிமொழியையிட்டுக் கவலைகொள்ளத் தேவையில்லை என்பதை தமிழ்த் தலைமைகள் விளங்கிக் கொண்டுள்ளன. தீர்வை நம்பி வாக்களிக்கும் நாம் வாயடைத்துப் போகும் காலம் மிக விரைவில் வரும். அதனைப் புரிந்து கொள்வோமா?

## பொது விவாத மேடைக்கு அழைப்பு

திருகோணமலை உப்புவெளி அப்சரா விடுதியில் ஈழத் தமிழர் செயலகத்தின் திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் செய்தியாளர் மாநாடு ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட ஈழத் தமிழர் செயலகத்தின் திருகோணமலை செயற்பாட்டாளர்கள் பிலிப் முருகையா, பிலிபையா ஜோன்சன் ஆகியோர் கருத்து தெரிவித்திருந்தனர்.

இலங்கை தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்பன தமிழ் மக்களின் தீர்வு விடயமாக தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்விரு கட்சிகளும் தங்கள் நிலைப்பாட்டை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது. எனவே இவ்விரு கட்சிகளும் ஒரு பொது விவாதத்திற்கு மக்கள் முன்வந்து அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடை பகிர வேண்டும்.

பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு இன்னும் 11 தினங்கள் உள்ளன. எதிர்வரும் 12ம் திகதி இவ்விரு கட்சிகளுக்கும் நாம் ஒரு பொது விவாதத்திற்கு அழைப்பு விடுக்க உள்ளோம். அதன்போது கட்சியின் தலைவர்கள் மக்களது கருத்துக்களுக்கு சரியான விளக்கம் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.




## தேசிய விவசாய ஆய்வரங்கு - 2015



தேசிய விவசாய ஆய்வரங்கு – 2015 கடந்த 05-08-2015 கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் வெகு சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நல்லையா மண்டபத்தில் நடத்தப்பட்டது. "எதிர்காலத்திற்கான உணவுப்பாதுகாப்பு: சவால்களும் சந்தர்ப்பங்களும்" எனும் தலைப்பில் நடைபெற்ற இவ் ஆய்வரங்கில் பேராதனை பல்கலைக்கழகம் வயம்ப பல்கலைக்கழகம், ரஜரட்டைப் பல்கலைக்கழகம் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், விவசாய ஆய்வு மையம் மற்றும் பனை அபிவிருத்தி சபை என்பனவற்றிலிருந்து ஆய்வாளர்களினால் 19 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. இவற்றின் ஒரு அம்சமாக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாயத்திற்கான பட்டப்பின் கற்கைகள் கல்வியகத்தினூடாக (PGIA) திரு.சு.சிவசங்கரன் அவர்களால் "திருகோணமலை வடக்குப் பிரதேசத்தின் வெங்காயப் பயிர்ச்செய்கையில் நீர்ப்பாசனத்தின் வினைத்திறன்" தொடர்பான ஆய்வுக் கட்டுரையும், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திரு.T.சுமந்திரன் அவர்களால் "தம்பலகாமக் குடாவில் மட்டி எடுப்பதில் பயன்படுத்தப்படும் உள்ளக அறிவுகள்" தொடர்பான ஆய்வுக்கட்டுரையும் எமது பிரதேசம் சார்பாக சமர்ப்பிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## "ஒற்றுமையை ஏற்படுத்துவது எனது கடமை"

### சரத் பொன்சேகா

ஜனநாயகக் கட்சியின் தேர்தல்ப் பரப்புரைக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, முன்னாள் இலங்கை கிரிக்கட் அணி வீரரும் ஊடகவியலாளருமான சஜீவ ரணத்துங்க மற்றும் திருகோணமலைக்கான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் மாலா நந்தனி ஆகியோர் பங்கேற்றனர்.



சமூக ஒற்றுமைப்பாட்டை வளர்ப்பதற்காக நாங்கள் இங்கு வருகை தந்தோம். திருகோணமலை நகரமானது அன்று முதல் இன்று வரை மூவின மக்களும் சமாதானமாகவும் சமத்துவத்துவமாகவும் வாழ்ந்துவருகின்ற ஒரு நகரமாக விளங்குகின்றது.

அந்தவகையில் இவ்விடத்திலுள்ள மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் சமத்துவத்-தினையும் கட்டியெழுப்புவது எமது கடமை என இங்கு உரை நிகழ்த்திய சரத் பொன்சேகா தெரிவித்தார்.

## மஸ்ஜித் திறப்பும் மார்க்க நிகழ்வும்

குச்சவெளியில் மஸ்ஜித் திறப்பு நிகழ்வும் மார்க்கச் சொற்பொழிவும் குச்சவெளியில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட அந்நூர் ஜும்ஆப்பள்ளி திறப்பு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. குத்பாப் பேருரையைத் தொடர்ந்து அஸ்ஸெய்ஹ் ஏ.எல்.பீர்முஹம்மது காசிமி "வாழ்க்கையே வணக்கமாக" எனும் தலைப்பில் ஜும்ஆத் தொழுகையின் பின்னர் சிறப்புரை நிகழ்த்தினார். ஆஸர் தொழுகையின் பின்னர் அஸ்ஸெய்ஹ் என்.பி.முஹம்மது அபூபக்கர் சித்தீக் மதனி "மஸ்ஜித் ஒழுக்க மான்புகளை வளர்க்கும் பயிற்சிக்கூடம்" எனும் தலைப்பிலும் கலாநிதி எம்.எல்.முபாரக் மதனி "இறை நம்பிக்கை வாழ்வின் அடிப்படை" எனும் தலைப்பிலும் அஸ்ஸெய்ஹ் எஸ்.எச்.எம்.இஸ்மாயில் ஸலபி "நபி (ஸல்) அவர்கள் ஓர் அழகிய முன்மாதிரி" எனும் தலைப்பிலும் சன்மார்க்கச் சொற்பொழிவு ஆற்றினர்.



இதற்கான ஏற்பாட்டினை ஜமாஅத் அன்ஸாரில் சுன்னத்தில் முஹம்மதியா தலைமையகம் பறக்கதெனிய. அன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் பரிபாலன சபையினர் மேற்கொண்டனர்.

## போலி வாக்குச் சீட்டுடன் கைது

சம்பூர் பிரதேசத்தில் போலி வாக்குச் சீட்டுகளுடன் நேற்று மாலை ஒருவரை கைது செய்துள்ளதாக சம்பூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

சம்பூர் பிரிவுக்குட்பட்ட கட்டைப்பறிச்சான் பகுதியைச் சேர்ந்த எஸ்.பிரபாகரன் வயது (29) என்ற சந்தேக நபரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் இலக்கம் பதியப்பட்ட வாக்குச்சீட்டுகளை வைத்திருந்த போது கைது செய்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்கொண்டு வருவதோடு நீதிமன்றில் முன்நிலைப்படுத்த உள்ளதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை கந்தளாய்ப் பிரதேசத்தில் வைத்து 14986 போலி வாக்குச் சீட்டுக்களுடன் ஒருவர் கைதாகியுள்ளார்.

தம்பலகாமம் பகுதியில் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்த போது இடைமறித்த காவல்துறையினர் அவர்களது வாகனத்தில் இருந்து சில போஸ்டர்களைக் கைப்பற்றி-யுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## நீரைப் பெற்றுத் தாருங்கள்

### பொது மக்கள் ஆர்ப்பாட்டம்

தங்களின் கிராமங்களில் காணப்படுகின்ற குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்துத் தருமாறு கோரி மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உன்னிச்சைக் குளத்துக்கு அருகில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 15க்கும் மேற்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. கலந்து கொண்டோர் பல்வேறு கோசங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன், அவர்களின் கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதாகவும் உறுதியளித்தார்.



## சிறைச்சாலையிலிருந்த மாணவன் பரீட்சைக்குத் தோற்றினான்



மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மாணவர் ஒருவர் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு வியாழக்கிழமை தோற்றியதாக அச்சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. காத்தான்குடியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் கைகப்பட்டுள்ள இந்த மாணவர் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன் பரீட்சை நிலையத்துக்கு சமூகமளித்து பரீட்சைக்கு தோற்றியுள்ளார்.

பணம் திருடிய குற்றச்சாட்டின் பேரில் இந்த மாணவர் உட்பட இரண்டு சந்தேக நபர்களை காத்தான்குடி காவல்துறையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று கைதுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

## பிறந்த குழந்தை தரையில் அடித்து கொலை

பிரசவித்த சிசுவை நிலத்தில் அடித்துக் கொலை செய்து புதைத்தார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அச்சிசுவின் தாய், பெரியதாய் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதாக கரடியனாறு காவல்துறையினர் தெரிவித்தனர்.

பெண்ணொருவர் சுகவீனம் காரணமாக சிகிச்சை பெறுவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். அங்கு இவர் பரிசோதிக்கப்பட்டபோது சிசுவை பிரசவித்தமை தெரியவந்தது. இது தொடர்பில் விசாரித்தபோது பிரசவிக்கப்பட்ட சிசு இறந்த நிலையில் புதைத்ததாகவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார். இப்பெண்ணின் தடுமாற்றத்தில் சந்தேகம் கொண்ட வைத்தியர்கள், இது பற்றி காவல்துறையினருக்கு அறிவித்துள்ளனர். குறித்த பெண்ணை விசாரணைக்குட்படுத்திய பொழுது மேற்படி பெண்ணும் அவரது சகோதரியும் சேர்ந்து பிறந்த குழந்தையை நிலத்தில் அடித்துக் கொலை செய்து புதைத்தமை தெரியவந்திருக்கின்றது.

## கோவிலில் திருட்டு

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் கொடியேற்ற தினத்தன்று இரண்டு பெண்களின் தங்கமாலைகள் அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு காவல்துறையிடம் முறையிடப்பட்டுள்ளது.

கொடியேற்றம் நிகழ்ந்தபோது ஆயிரக்கணக்கானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர். ஏற்பட்ட சன நெரிசலிலேயே தங்க மாலைகள் அறுத்துச்செல்லப்பட்டதாக காவல் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

## மக்களின் வாக்களிப்பு விகிதம் குறைந்துள்ளது

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பு விகிதாசாரம் மிகவும் குறைவாக இருப்பதற்கு தமிழ் மக்களின் தேர்தல் பற்றிய அசமந்தப்போக்கே காரணமாகும் என்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் எஸ்.மாமாங்கராஜா தெரிவித்தார்.

கதிரவெளியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நடைபெறவுள்ள தேர்தல் மட்டக்களப்பு தமிழ் மக்கள் மத்தியில் பாரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இரண்டு இலட்சத்து 84 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட இம் மாவட்டத்தில் வாக்களிப்பு விகிதாசாரம் மிகக் குறைந்ததற்கு தமிழ் மக்களின் தேர்தல் பற்றிய அசமந்தப்போக்கே எனக் கூறியுள்ளார்.

## தேர்தல் அதிகாரிகளை தாக்க முற்பட்டோர் கைது

**காத்தான்குடி** பிரதேசத்தில் உதவி தேர்தல் ஆணையாளர் மற்றும் அவருடன் சென்றவர்களை தாக்கமுற்பட்டது தொடர்பில் தேடப்பட்டுவந்த காத்தான்குடி முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பரீட் மற்றும் காத்தான்குடி நகர முன்னாள் முதல்வர் அஸ்பர் ஆகியோர் கடந்த 05.08.2015 அன்று கைதுசெய்யப்பட்டு-ள்ளனர்.

காத்தான்குடி நகர மண்டபத்தில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் தேர்தல் முறைகேடுகள் நடப்பதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் காத்தான்குடி கால்துறையினர் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த நிலையில் இருவரும் தலைமறைவாகி-யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனுமதியின்றிய வேப்பை மரங்கள் பறிமுதல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை வேப்பை மரங்களை கால் துறையினர் கைப்பற்றியுள்ளனர். களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் வெட்டப்பட்டு கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இன்றி கொண்டுசெல்லப்பட்ட ஒரு தொகை வேப்பை மரக்குற்றிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக களுவாஞ்சிகுடி காவல் துறையினர் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காவல் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

## போதையை ஒழிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான ஏழை மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா தெரிவித்தார்.

"போதை அற்ற நாடு, சுய கண்களால் போதை அற்ற உலகை காண்போம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு பிரசாரம், ஏறாவூர் மிச் நகரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் "கூலித் தொழிலாளிகள் தங்களின் நாளாந்த உழைப்பை மதுபானத்துக்கு தாரை வார்ப்பதால், அவர்களின் குடும்பங்கள் ஏழ்மையில் வாடுகின்றன. இதேவேளை, போதைப்பொருள் பாவனையாளர்கள் நாளடைவில் நோயாளிகளாக ஆகின்றனர். சிலர் சிறைகளில் அடைக்கப்படுகின்றனர். இந்தக் காரணங்களினால் பல குடும்பங்கள் சீரழிவை சந்திக்கின்றன என கூறினார்.

## முச்சக்கர வண்டி தீக்கிரை

வாழைச்சேனை மக்கலடி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றுக்கு இனந்தெரியாதோரால் தீ வைத்த சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை காவல்துறையினர் தெரிவித்தனர்.

கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் நிறுவனமொன்றைச் சேர்ந்தவர்கள் தொழில் நிமித்தம் வாழைச்சேனை மக்கலடி வீதியில் வாடகை வீட்டில் வசிக்கின்றனர். வீட்டுக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியே இனந்தெரியா-தோரினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## ஆதரவாளர் மீது தாக்குதல்

**மட்டக்களப்பு, வாழைச்சேனை** கோழிக்கடை வீதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சில் காயமடைந்த ஆதரவாளர் ஒருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலியை ஆதரித்து கடந்த புதன்கிழமை இரவு கூட்டம் நடைபெற்றது. இதன்போது, அமீர் அலியின் வாகனத்தை இலக்குவைத்து அமீர் அலிக்கு எதிராக செயற்படுவோரினால் வீசப்பட்ட கல் வாகனத்துக்கு அருகிலிருந்த தனது தலையில் பட்டு காயம் ஏற்பட்டதாக பாதிக்கப்பட்ட நபர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை காவல்துறை விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் எதிர்பார்க்கும் அரசாங்கம் உருவாகும்

## சனாதிபதி



ஆற்றங்கரையில் போதையில் இருந்த 6 மாணவர்களையும் அவர்களுடனிருந்த 3 மாணவிகளையும் நாவலப்பிட்டி காவல்துறையினர் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர். அட்டனிலுள்ள பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த இம்மாணவர்கள் கினிகத்தேனை பகுதியில் மகாவலிகங்கை ஆற்றங்கரையில் போதையில் இருப்பதாக பொதுமக்களினால் வழங்கப்பட்ட தகவலையடுத்து அங்கு சென்ற நாவலப்பிட்டி காவல்துறையினர் அவர்களைக் கைதுசெய்து காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். உயர்தரத்தில் கல்வி கற்கும் இவர்கள் அனைவரும் பத்தொன்பது வயதுடையவர்கள். ஆறு மாணவர்களும் ஒரே பாடசாலையைச் சேர்ந்தவர்கள் எனவும் அதேபோன்று மாணவிகள் மூவரும் ஒரே பாடசாலையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது. இவர்களது பெற்றோர்களை அழைத்து அவர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவுரை வழிகாட்டல்களை வழங்கி வியாழன் இரவு 8 மணியளவில் இவர்களைப் பெற்றோரிடம் காவல்துறையினர் ஒப்படைத்துள்ளனர்.

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

## கற்பாறை சரிந்து வீட்டின் மீது
## உயிர்ச்சேதம் ஏதுமில்லை



நோர்வூட், சின்ன தரவளையிலுள்ள வீடொன்றின் மீது, கற்பாறை சரிந்து விழுந்ததில் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். இதன்போது, இரு பெண்கள், இரு சிறுவர்கள் மற்றும் குழந்தையொன்றும் உள்ளிருந்ததாகவும் இவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதாகவும் தெரியவருகிறது. மேற்படி ஐவரும் உறவினர்களது வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. மலையகத்தில் கடந்த சிலநாட்களாக நீடித்து வரும் சீரற்ற காலநிலையால் மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தங்களுக்குள் விரிசல் இல்லையாம்!!

தனக்கும் தனது சகோதரரான முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கும் பிரச்சினைகள் இருப்பதாகவும், அதனால் தான் விரக்தியுடன் இருப்பதாகவும் கூறப்படுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவரது சகோதரர் கோட்டாபாய ராஜபக்சவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறித்து விபரிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வேண்டுமென்று சிலர் பொய்ப் பிரசாரங்களை வெளியிடுவதாகக் குறிப்பிட்ட அவர், கருத்து வேறுபாடுகள் யாருக்கும் இருக்கலாம் எனக் கூறியுள்ளார். எவ்வாறெனினும் தான் இம்முறை தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு அதிக காரணங்கள் இருப்பதாகவும் அவற்றை தற்போது கூறிக்கொண்டிருக்க முடியாதெனவும் அவர் கூறியுள்ளார்.

## ஏந்த ஆட்சியில் முஸ்லிமுக்கு நிம்மதி??

"ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில்தான் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியும்" என்று தெரிவித்தார் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம். பெண்களை ஆண்கள் கம்பு, தடிகளுடன் சென்று அவர்களை இனவாதிகளிடம் இருந்தும் கிறீஸ் பூதங்களிடம் இருந்தும் பாதுகாக்கும் நிலைமை இனிமேல் இந்த நாட்டில் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார். களுத்துறை மாவட்டம், அத்துலுகமவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனவரி 8ஆம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல கட்சிகளுடன் இணைந்து இந்த நாட்டில் ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளது. அதுதான் ஆட்சி மாற்றம்.

## மாணவி தற்கொலை - அனுமதிப்பத்திரம் வழங்க மறுப்பினால்

வவுனியா, பண்டாரிக்குளம், விபுலானந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த 19 வயது மாணவியொருவரே இவ்வாறு தற்கொலை செய்து-கொண்டுள்ளார். வேப்பங்குளம் பகுதியில் உள்ள குறித்த மாணவியின் வீட்டுக் கிணற்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவி கல்விப் பொதுசாதாரண தரப் பரீட்சையில் கணித பாட பெறுபேறு அற்ற நிலையில் குறித்த பாடசாலையில் உயர்தரம் சென்றுள்ளார். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சை தோற்றுவதற்கான அனுமதி அட்டை வந்த போதும் பாடசாலையில் அனுமதி அட்டை வழங்கப்படவில்லை எனவும் அதன் காரணமாகவே தான் தற்கொலை செய்து கொள்வதாக குறித்த மாணவி கடிதம் ஒன்றினை எழுதி வைத்துள்ளார்.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகள் முடிவடையும்வரை, பண்டாரிக்குளம், விபுலானந்தா வித்தியாலய அதிபரை பணியிலிருந்து இடைநிறுத்தி-யுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்தார்.

## வீடற்றோருக்கு வீடு கொடுக்கப்படும்

வீடற்ற எத்தனையோ குடும்பங்கள் இங்கிருப்பதாக அறிய முடிகின்றது. அவர்களுக்கு அதனை பெற்றுக் கொடுப்பதே எனது முதலாவது பணியென வன்னி மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் முதன்மை வேட்பாளரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வெலிஓயா (மணல் ஆறு) கிராமத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். என்னிடம் இனவாதம் இல்லை. மதவாதம் இல்லை. நீங்கள் அளித்த வாக்குகளை வைத்து மக்களின் நலனுக்கான திட்டங்களையே செய்துவந்துள்ளேன் என்றார்.



## தனி ஈழத்துக்கான கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. கேள்வி நேரத்தின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சமஷ்டி கோரிக்கையை மையப்படுத்தி அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் தனி ஈழத்துக்கான கோரிக்கை தற்போது மழுங்கிவிட்டது. புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் அந்தக் கோரிக்கையை கைவிட்டுள்ளன.

மஹிந்த வெளிநாடு சென்றால் புலம்பெயர் தமிழர்கள் அணிதிரண்டு ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள். ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டன் சென்றபோது அவருக்கு எதிராக சுமார் 136 பேர் வரை ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர். அன்று 10 ஆயிரமாக இருந்த எதிர்ப்பு இன்று 136 ஆகக் குறைந்துள்ளது.

இதிலிருந்து தனி ஈழம் என்ற கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது என்பது புலனாகிறது. பொதுத்தேர்தலில் சுயேச்சைக் குழுவாகக் களமிறங்கியுள்ள முன்னாள் புலிகள்கூட அதிகாரப்பகிர்வையே கோரியுள்ளனர். அதிகாரப்பகிர்வு இடம்பெற்ற நாடுகள் உலகில் பிரிந்ததாக இல்லை என்றும்,

அதிகாரப்பகிர்வை முன்வைக்காத நாடுகளே பிரிந்துள்ளன என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனரத்ன சுட்டிக்காட்டினார்.

## "இந்நாடு சிங்கள தேசம்" எனும் சட்டம் தேவை

### பொதுபல சேனா

இந்நாடு சிங்கள தேசம் என்பதை உறுதிப்படுத்தும் சட்டமொன்று இயற்றப்பட-வேண்டுமென தெரிவித்த பொதுபலசேனா அமைப்பின் அரசியல் கட்சியான பொதுஜன பெரமுன சிங்களவர்களை இந்நாட்டின் பூர்வீகக் குடிகளென பிரகடனப்படுத்த வேண்டுமெனவும் அவர்களுக்கென பிரத்தியேக அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டுக்களை வழங்க-வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். கிருலப்பனையில் உள்ள பொதுபலசேனா தலைமைக் காரியா-லயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் நாத் அமரகோன் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

1815 ஆம் ஆண்டு முழு இலங்கையும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இந்நாட்டை "சிங்ஹலே" என்றே குறிப்பிட்டுள்ளனர். "லங்கா" என்ற ஒரு இனமோ, வர்க்கமோ இலங்கையில் இருக்கவில்லை. அரசியல் பின்னணியிலேயே இந்தப் பெயர் இந்நாட்டுக்கு சூட்டப்பட்டது. அதுமட்டுமல்லாது தேசியக் கொடியில் இரு நிறக்கோடுகளை இட்டு இந்நாட்டில் பிரிவினைவாதத்தை அப்போதைய அரசியல்வாதிகள் ஆரம்பித்தனர் என மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
உலகச் செய்திகள்

## படகு மூழ்கி 200பேர் பலி

மத்திய தரைக்கடலில் 600 புகலிடக் கோரிக்கையாளர்களுடன் பயணித்த படகொன்று மூழ்கியதில் அதில் பயணித்த 400 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

எனினும் மீதமாகவுள்ளவர்களை மீட்க முடியும் என்ற நம்பிக்கை அற்றுப் போயுள்ளதாக மீட்பு பணியாளர்கள் கூறியுள்ள அதேவேளை இதுவரை 25 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. எனினும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இதுவரை சரியாக தெரியவரவில்லை என இத்தாலிய கடற்பாதுகாப்பு படையினர் கூறியுள்ளனர்.

லிபியக் கடற்பரப்பில் இருந்து 25 கிலோமீற்றர் தொலைவில் சீரற்ற வானிலை காரணமாக குறித்த மீன்பிடிப் படகு மூழ்கியுள்ளது.

2015 ஆம் ஆண்டு மத்திய தரைக் கடல் ஊடாக ஐரோப்பாவிற்குள் பிரவேசிக்க முயற்சித்த 2000 க்கும் அதிகமான புகலிடக் கோரிக்கையாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இரண்டு ரயில்கள் நேர் மோதல்

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் ஹர்தா பகுதியில் 05.08.2015 அன்று இரண்டு ரயில்கள் தடம்புரண்டதில் 30 பேர் உயிரிழந்துள்ளதுடன் 25 ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த ரயில்கள் மச்சக் ஆற்றின் மேம்பாலத்தை கடக்கும் போது விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக குறித்த ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. வெள்ளம் ரயில் தண்டவாளத்தை மூழ்கும் அளவுக்கு இருந்தமையால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஏறத்தாழ 5000 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்றுவரும் ஆயுத மோதல்களின் காரணமாக, 2015 முதற்பாதியில், 5,000 பொதுமக்கள் இறந்துள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபைகள் தெரிவித்துள்ளது.

2014ஆம் ஆண்டு முதற்பாதியில் அறிக்கையிடப்பட்ட மரணங்களை விட, இது 1சதவீதம் அதிகமானதாகும். இவ்வாண்டுக்கான தரவுகளில், ஆயுத மோதல்களின் போது, அதிகளவிலான மக்கள் அரசாங்கப் படைகளின் தாக்குதல்களில் சிக்கியே மரணமும் காயமும் அடைந்துள்ளனர்.

ஏற்படுத்தப்பட்ட மரணங்களின் 70 சதவீதத்துக்கு, தலிபான்களே பொறுப்பாக உள்ளனர். அமெரிக்க படையினரில் சிறிய எண்ணிக்கையிலானோர் மாத்திரம், நேரடி மோதல்களில் பங்குபற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகன் சிறையில் சித்திரவதை



லிபிய முன்னாள் தலைவர் கேணல் கடாபியின் மகனான சாதி கடாபியும் ஏனைய சிறைக்கைதிகளும் சிறைச்சாலையில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவதை வெளிப்படுத்தும் வீடியோ காட்சியொன்று தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வீடியோ காட்சி சிறைக் காவலர்கள் சாதி கடாபியின் பாதங்களில் அடிக்க அவர் வலி தாங்காது கூச்சலிடும் காட்சியை உள்ளடக்கியுள்ளது.

இந்நிலையில் மேற்படி வீடியோ காட்சியில் தோன்றும் காவலர்களை இனங்கண்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக லிபிய திரிபோலி நகரிலுள்ள பொது விசாரணையாளர் கூறுகிறார்.

## கண்ணிற்கு முன் காதலன் பலி

ஜேர்மனியில் உள்ள துரிங்கியா நகரில் மரங்களை வெட்டும் தொழிலாளியான அந்த உறவினர், திருமணத்திற்கு முன்பாக தன்னுடைய தொழிலைப்பற்றி கூறுவதற்காக காதலர்கள் இருவரையும் காட்டுக்குள் அழைத்து சென்றுள்ளார்.

உறவினருடன் அவரது இரண்டு குழந்தைகளும் அவருடைய மனைவியும் கூட சென்றுள்ளனர். காட்டில் மரங்களை வெட்டி சாய்க்கும் ஒரு மிகப்பெரிய எந்திர வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வாகனத்தை கண்டு பூரித்துப்போன சிறுமிகள் வாகனத்தில் ஏறி விளையாடியுள்ளனர்.

அப்போது எதையோ பிடித்து இழுக்க அந்த வாகனம் சாலையை விட்டு நகர்ந்து ஜோடிகள் அமர்ந்திருந்த கார் மீது விழுந்தபோது காதலன் அதே இடத்தில் துடி துடித்து ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார்.

## இடைக்காலகடன் வேண்டாம் முழுமையான உடன்படிக்கையே தேவை

இடைக்கால கடனுக்கு பதிலாக பொருளாதார மீட்பு நிதி தொடர்பில் முழுமையான உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டும் என கிரேக்கத்தின் ஆளும் சிரிசா கட்சி வலியுறுத்தியுள்ளது.

பொருளாதார மீட்பு நிதி தொடர்பில் முழுமையான உடன்படிக்கையை எட்டுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் முதல் கட்டமாக 25 பில்லியன் யூரோவை பெற முடியும் கட்சியின் பேச்சாளர் நீக்கஸ் ஃபைலஸ் கூறியுள்ளார். கிரேக்கப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான நிதியை வழங்கும் இந்த உடன்படிக்கை கடுமையான மறுசீரமைப்புக்களை உள்ளடக்கியிருக்கும் என அரச தொலைகாட்சிக்கு வழங்கிய செவ்வியில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சுரங்க அனுமதி இரத்து

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில், மாபெரும் நிலக்கரிச் சுரங்கமொன்றுக்காக இந்தியாவின் அடானி குழுமத்துக்காக வழங்கப்பட்டிருந்த உரிமத்தை, அவுஸ்திரேலிய நீதிமன்றமொன்று இரத்துச் செய்துள்ளது. இந்தச் சுரங்கத்துக்கான அனுமதி கடந்தாண்டு வழங்கப்பட்டதோடு, அது இயங்கியிருந்தால், அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய சுரங்கங்களுள் ஒன்றாக மாறியிருக்கும்.

எனினும், இந்த நிலக்கரிச் சுரங்கத்துக்கான அனுமதி வழங்கப்படும் போது, விலங்கினங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களும் பாதிப்புகளும் சம்பந்தமாக, சூழலியல் அமைச்சர் கருத்திற் கொள்ளவில்லை எனத் தெரிவித்தே, இதற்கெதிரான வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தத் தடை காரணமாக, புதிதான அனுமதியொன்றைக் கோர வேண்டிய நிலைக்கு, அடானி குழுமம் தள்ளப்பட்டுள்ளது.



## கவலையீனத்தால் கைவிரல் போனது!!

பிரான்ஸில் 13 வயது சிறுவன், செரிமானத்திற்கு உதவும் கணைய உறுப்பில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக பல நாட்களாக அவதியுற்று வந்துள்ளான். சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள் அவனுக்கு எம்.ஆர்.ஐ ஸ்கேன் செய்ய வேண்டும் என தீர்மானித்துள்ளனர். அப்போது மருத்துவர்களின் கையில் இருந்த அறுவை சிகிச்சைக்கான சென்சாரை தவறுதலாக மயக்கத்தில் இருந்த சிறுவனின் கையில் திணித்துள்ளனர். சிறுவனின் கையில் இருந்து சென்சார் அவனது பெருவிரலை முழுவதுமாக சேதம் செய்து விட்டுள்ளது.

சிகிச்சை முடிந்து மயக்கம் தெளிந்த பின்னர் தான் அதன் வலியை உணர்ந்து சிறுவன் கதறி அழுதுள்ளான். இதனை அறிந்த அவனது தாயார், மருத்துவர்களின் அலட்சிய போக்கால் தான் இந்த தவறு நடந்துள்ளது என புகார் கூறியுள்ளார். தாயாரின் புகார்கள் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் எந்த பதிலும் அளிக்கவில்லை என தெரியவருகின்றது.

## மன்னிப்புக் கேட்ட பைடன்

ஜப்பான் உயர்நிலை அதிகாரிகளை அமெரிக்கா உளவு பார்த்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு, அமெரிக்காவின் உப ஜனாதிபதி ஜோ பைடனிடம், ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே கோரிக்கை விடுத்துள்ளார். அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். "ஜப்பானைச் சேர்ந்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டமை உண்மையெனில், எங்களுடைய கூட்டணியின் நம்பிக்கை உறவை அது பாதிக்கும் என்பதோடு, அது தொடர்பான முக்கியமான கவனத்தை நான் வெளிப்படுத்த வேண்டியிருக்கும் என பைடனிடம் அபே தெரிவித்ததாக, ஜப்பானின் பிரதம அமைச்சரவைச் செயலாளர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு...

27



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

–பகல்கள் தோறும்
பகல்கள்
இரவுகள் தோறும் என் கண்ணீர்
என் கடலில்
உன் துடுப்பைப் போடு
போகட்டும் காதல் படகு
தாபங்கள் தணியட்டும்
மீளவே முடியாத
பெரு ளிக் காட்டின் திக்குகள் இடையே
எப்போ மீள்வேன் நான் ...
எப்படி வாழ்வேன் நான் ... –

– பிரபஞ்சப் பிரியன் –

"நிவே என்ன இது... ஏன் இப்படி அழுது கொண்டிருக்கீங்க வாங்க வெளியில் ஹோலுக்கு போவம்..."

ரதன் அழைத்ததைக் கூட காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பெண்கள் விடுதியில் அதுவும் ரூமுக்குள் ஒரு மாணவன் வந்து நிற்பது சரியல்ல என்பது அவனுக்குத் தெரியும். முதல் முறையாக அதுவும் தவிர்க்க முடியாத நிலையில் அவன் உள்ளே வந்திருந்தான். பொதுவாக அவளை சந்திக்க வரும் போது முன் ஹோலில் உள்ள கதிரைகளில் இருந்து தான் கதைத்துக் கொள்வார்கள்.

அப்போதெல்லாம் சுகந்தியோ அல்லது பவித்ராவோ ரூமில் இருந்து இருவருக்கும் தேநீர் கொண்டு வந்து தருவார்கள். இன்று அவனே ரூமுக்குள் நிவேதாவை பார்க்க அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை அவளது தோளைத் தொட்டதில் உடம்பு கனலாக சுட்டது தெரிந்தது.

"நிவே சுகமில்லை என்றா.... வாங்க ஹொஸ்பிடலுக்கு போய்ட்டு வருவம்..." அவனை நிமிர்ந்து பார்த்தவள்... அவனது கரங்களை பிடித்து கொண்டு விம்மத் தொடங்கினாள். அவள் அழுவதை பார்க்க ஒரு குழந்தையைப் போலிருந்தது அவனுக்கு. அப்படியே அவளை தன்னுடன் அணைத்து ஆறுதல் சொல்ல முயன்றவனின் பிடியில் இருந்து திமிறி விடுபட்ட நிவேதா.... "ரதன் என்னை மன்னிச்சிடுங்க.. இனிமே இந்த உடம்பு உங்களுக்கு தரக்கூடிய நிலையில் இல்ல...... இத தொட்டு நீங்க அசிங்கப் படக் கூடாது ரதன்......"

அவள் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அவனை நெருப்பாய் சுட்டது. "நிவே என்ன.... நடந்தது... ஏன் இப்படி....?"

"ஆமா ரதன் இவ்வளவு காலமும் எனது மனசையும், உடம்பையும் தூய்மையாக வைச்சிருந்து.. அத பவித்திரமா உங்களுக்கு தர இருந்த என்ன சிதைச்சுப் போட்டாங்க... ரதன் .... இனிமே இந்த உடம்ப நீங்க தொடக்கூடாது..."

அவள் விம்மி விம்மிச் சொல்லி முடிக்கவும் ரதன் அதிர்ச்சியில் கத்தியே விட்டான்.

"என்ன நடந்தது நிவேதா என்ன நடந்தது......?"

"ரதன் நேற்று எங்களை விசாரித்தது தற்செயல் நிகழ்வல்ல அது என்னை பற்றி தெரிந்தே கொண்டு போனது தான். உங்களை பத்தித் தான் கூடுதலாக விசாரித்தவங்கள்........ நாங்க இரண்டு பேரும் சேர்ந்து பல விசயங்களை கம்பசில முன்னின்று செய்கிறதா தகவல் என்று பல கேள்விகள் கேட்டாங்க தனி விசாரணை என்று கொண்டு போன இடத்தில் என்னை என்னை ...."

அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை விம்மி விம்மி அழத் தொடங்கினாள். ரதனுக்கு என்ன நடந்திருக்கும் என்பது புரிந்தது.

ஒரு பெண் தன்உயிரை விட மேலாக நேசிக்கும் மானம்...அற்பர்களால் சிதைக்கப் பட்டதை நினைக்க அவன் மனம் தகித்தது. இரத்தம் கொதித்தது.

அந்த கோபத்தை வெளிக்காட்டி அவளை மேலும் சோகப்படுத்த விரும்பாமல் அடக்கிக் கொண்டான்.

தனக்குரிய பொருளை ஒருவன் களவாடி விட்டதை நினைக்க.... ஒரு கனம் அவனது சிந்தனை வேறுதிசை நோக்கி பாயத் தொடங்கின. அண்மையில்தான் தனது சொந்த மாமாவை இழந்த சோகத்தில் இருந்து மீண்டவளுக்கு ம ண டு ம ஓர் பேரிடியாக அதுவும் எவருக்குமே நேரிடக்கூடாத ஒரு பெரும் சோதனை பரிசாக கொடுக்கப்பட்டதை நினைக்க ரதனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

சில நிமிட நேரம் இருவரிடையேயும் மௌனம் நிலவியது. ஆயிரம் நிமிட பேச்சை காட்டிலும் ஒரு நிமிட நேர மௌனம் எத்தனையோ வார்த்தைகளை பேசி விடுகிறது அல்லவா..? அங்கும் மௌனம் பேசியது.......

அந்த மௌன மொழியை ரதனே கலைத்தான்.... "நிவேதா..... நடந்ததை நினைச்சு கவலை பட்டுக்கொண்டு இருந்தா.. எம்மால் மேலும் மேலும் சிந்திக்க முடியாம போயிடும்...... உனக்கு ஏற்பட்டிருக்கும் இந்த இழப்பு உனக்கு மட்டுமானதல்ல..... எம் இருவருக்குமானது... அதப்பத்தி இனிமே பெரிசா... யோசிக்காதே "எப்படி.. ரதன்...... முடியும் இனிமே உங்களை எப்படி பார்க்க முடியும். ஏதோ ஒரு குற்ற உணர்வல்லவா என்னை வதைத்து கொண்டிருக்கும்?."

"பைத்தியம் மாதிரி பேசாதே நிவே... எம்முடைய காதல் வெறும் உடம்பு சம்பந்தப்பட்டதல்ல..... அது மனசுடன் தொடர்புடையது. இன்று எத்தனையோ பேர் மனசாலேயே களங்கப்பட்டு நிற்கும் போது உனக்கு நேர்ந்தது உடல் சம்பந்தப்பட்டது.

அதுவும் உனது விருப்பமின்மையின் பெயரில் நடந்தது. அந்த இராணுவ அடக்கு முறைக்கு பலியாகிய நூற்றுக்கணக்கான தமிழ் பெண்களில் ஒருத்தியாக நீ நிற்கிறாய்.

எமது போராட்ட சூழ்நிலையில்........ இப்படியான இழப்புகள் தவிர்க்க முடியாததே.." "என்ன இருந்தாலும்... என்னால இத ஏற்றுக்கொள்ள முடியல ரதன்...... தனிமையில் இருக்கும்

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

போதெல்லாம் அந்த அசிங்கமான நிகழ்வும் அவனுடைய கோரமான முகமும் தான் ஞாபகம் வருகின்றது..? இனிமேல் என்னால் எப்படித்தான் வாழ முடியுமோ தெரியல.....?"

"நிவே நீயும் இப்படி சிந்திக்கிறாயா....? அப்படி என்றால் இன்று எத்தனை தமிழ் பெண்கள் தமது வாழ்வை முடித்துக் கொள்ள வேண்டும்.

உனக்கு நடந்தது விபத்து. விபத்துக்கள் வாழ்க்கையை மாற்ற இடம் கொடுக்கக் கூடாது. அப்படி பார்க்கும் போது இந்த விபத்து ஏற்பட நானும் ஒரு காரணமே........ நான் மட்டுமே ஈடுபட்டிருக்க வேண்டிய பல நிகழ்வுகளில் உன்னையும் சேர்த்துக் கொண்டேன்..... அதன் பாதிப்புதானே... இது. எனவே நானும் ஒரு குற்றவாளி தான் நிவே.."

"ரதன் எனக்கு என்ன செய்வதென்றே புரியல்ல.... ஒவ்வொரு பெண்ணும் தனது சொத்தாக தனது கணவனுக்கு மட்டுமே கொடுக்கிற செல்வம் அவளது கன்னித் தன்மை தான். இன்றைக்கு நான் அதையே இழந்து நிற்கும் போது நான் உங்களுக்கு எதைத் தர முடியும்.?

"என்ன நிவேதா...... சராசரி பெண்களைப் போல நீயும் கதைக்கிறாய்.... நீ நினைச்சிருந்தா இந்த சம்பவத்தை எனக்கும் தெரியாமல் மறைத்திருக்கலாம் சொல்லாமலும் இருந்திருக்கலாம். ஆனா நீ எதையும் மறைக்காமல் என்னிடம் சொல்லியிருக்கிறாய். இதுதான் கணவனுக்கு தேவை. தனது மனைவி நம்பிக்கையானவள் என்ற திடமான எண்ணம்



அவனுக்கு ஏற்பட வேண்டும். அந்த நம்பிக்கை தான் கணவன் மனைவி என்ற உறவின் அடித்தளம்.

கணவன் மேல் மனைவியும், மனைவி மேல் கணவனும் நம்பிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். தன மனைவி தன்னைப் பொறுத்தவரை நம்பிக்கைக்கு உரியவள் என்ற எண்ணமே கணவனுக்கு சொத்து. தனது கணவன் நல்லவன் என்ற நினைப்பே மனைவிக்கு சொத்து. என்னை பொறுத்தவரை உன்மேல் எனக்கு பூரண நம்பிக்கை உண்டு.

எப்போது உன்னைக் கண்டு காதலிக்க ஆரம்பித்தேனோ அப்போதே ஏற்பட்ட நம்பிக்கை. இது மாறது. மாற்றவும் முடியாது."

ரதனின் பேச்சு அவளை ஒரு வகையில் ஆறுதல் படுத்தினாலும் பூரண திருப்தி ஏற்படவில்லை . குழம்பிப் போனவளாக காணப்பட்டாள் நிவேதா.

அவளை மெல்ல மெல்ல தான் மாற்ற முடியும் என்பது அவனுக்கு தெரிந்தது. தன்னையே இழந்து விரக்தி நிலையில் நிற்கும் அவளுக்கு தனது ஆறுதல் வார்த்தைகளும் தைரியமூட்டலும் தான் துணையாக இருக்க முடியும் என்பதை உணர்ந்தான். உண்மையும் அது தானே......?

நேற்றைய சம்பவத்திற்கு மாணவர்கள் தமது அடையாள எதிர்ப்பைக் காட்டவுள்ளனர். இந் நேரத்தில் நீ ரூமில் அடைந்து கிடக்க கூடாது... அது வீணான சந்தேகங்களை ஏற்படுத்தும். அது மட்டுமல்ல.. நிவே உனது ரூம் மேட்டிற்கு கூட சந்தேகம் வரக்கூடாது.. எனவே நடந்ததைப் பற்றி ஒன்றுமே யோசிக்காதே...." ரதன் அவளது கூந்தலை தடவியவாறே அவளருகில் அமர்ந்து கொண்டான்.

"ரதன்..............."

"ம்.........."

"நீங்க.. எவ்வளவு சொன்னாலும் என் மனசு ஆறுதல் படுவதாக தெரியல்ல. ரதன்....."

"நிவே உனக்கு அந்த கவலையே வேண்டாம்.. இப்படி ஒரு சம்பவம் நடந்தது என்பதையே மறந்து விடு. இன்னும் ஒருசில மாதங்களில் எமக்கு இறுதிப் பரீட்சை முடிந்து விடும் அதன் பின் ஊருக்கு போய் விடுவம் தானே......? அதுவரை பொறுமையாக இருப்பம்"

"ரதன் எனக்கு தனியா இருக்க..... பயமா இருக்கு எப்போதும் அந்த ஞாபகம் வந்து தொலைக்குது நான் என்ன செய்ய ?."

"நிவே கவலைப் படாதே ஒரு சில தினங்களுக்கு மட்டக்களப்பு டவுனில் போய் நிற்பம். மாமாங்கம் திருவிழாவும் ஆரம்பமாகி விட்டது. நாளண்டைக்கு கடைசி திருவிழா என்று நினைக்கிறேன். போன முறையும் எமக்கு போக கிடைக்கல்ல. இந்த முறை போவம் அது உனக்கு ஆறுதலா இருக்கும்... சண்முகம் மாமா வீட்டில் தங்கி நிற்பம....".

"ரதன் நாளண்டைக்கு தானே திருவிழா மாமிக்கு டெலிபோன்ல சொல்லி அவையையும் கூப்பிடுவமா.......? ப்ளீஸ் ரதன்.. எனக்கும் ஆறுதலா இருக்கும்... "

"நான் இன்றைக்கே போன் எடுக்கிறேன். நீர்...... முகம் கழுவி வெளிக்கிட்டு என்னோட வாரும் கம்பசுக்கு போவம்..."

"நில்லுங்க இன்னும் கொஞ்ச நேரத்தில் வெளிக்கிட்டு வாறன் அது வரை இந்த புத்தகத்தை பார்த்துக் கொண்டிருங்க...." என கூறியபடி புதிதாக வந்திருந்த சஞ்சிகையை எடுத்து கொடுத்து விட்டு பாத்ரூமை நோக்கி விரைந்தாள் நிவேதா.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலெங்கும் பக்தர்கள் நிறைந்திருந்தனர். அன்றுதான் கடைசித் திருவிழா. பத்து நாட்கள் நடைபெறும் திருவிழா நிகழ்வுகள் பத்தாம் நாள் ஆடித் தீர்த்தோற்சவத்துடன் முடிவுறும்.

ஆரம்ப நாளிலிருந்து இறுதி நாள் வரை மாலை வேளைகளில் மட்டக்களப்பு மக்கள் அனைவரும் இங்கு கூடிவிட்டனரோ என்று வியக்கும் வகையில் சனம் நிறைந்து காணப்படும் இனம், மதம், மொழி என்ற வேறுபாடு களைந்து மக்கள் கூடும் இடங்களில் மாமாங்கேஸ்வரர் ஆலயமும் ஒன்று. திருக்-கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், தான்தோன்றீஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம் போன்றவற்றின் புகழுக்கு ஒத்ததாகவே மாமாங்கேஸ்வரம் ஆலயமும் புகழ் பெற்றிருந்தது. ஆலயத்தின் எதிரே பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு பாதுகாப்பு என்ற போர்வையில் காவல் துறையினர் கடமையில் இருந்ததன் காரணமாக வழமையாக நடக்கும் திருவிழா ஏற்பாடுகளில் சில தடங்கல்கள் ஏற்பட்டாலும் வியாபாரிகளின் அமோகமான வருகையின் காரணமாக சனத் திரள் நிறைந்து காணப்பட்டது.

ஒவ்வொரு வருட திருவிழாவும் அதற்கு முந்தைய வருட திருவிழாவை விட சிறப்பாகவும் அதிக சன கூட்டத்துடனும் களை கட்டும். வெளியூர்களில் இருந்து வந்து தமது கடைகளை விரிப்பவர்களும் அநேகம் பேர் இருந்தனர்.

மோட்டார் சைக்கிள் ஓட்டம் போன்ற சாகச வித்தைகளை காட்டுபவர்களும், வித்தைகள் செய்பவர்களும் என வெளியூர் வியாபாரிகளின் வருகை விழாவின் பிரமாண்டத்தை பெரிது படுத்தி காட்டியிருந்தது.

**வாசகர்களே! கடந்த ஆறு மாதங்களாக உங்கள் மலைமுரசு தாங்கி வந்த "வீணையடி நீ எனக்கு" எனும் குறுநாவல் விரைவில் நூலுருவில் வெளிவர உள்ளது. அந்நூலில் தங்களின் மனப்பதிவுகள் வரவிரும்பின் மலைமுரசு அலுலகத்திற்கு தங்கள் கருத்துக்களை அனுப்பியுங்கள்.**

**மேவும்.. .. ..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## ஒரு வாழைப்பழம்

அது மிக அழகானது
மரத்திலிருக்கும் போது . . .
மெதுவாய் வாழை
வெளித்தள்ள
தேன் பூக்களை
வண்டுகளுக்காய்
சிதறடித்துப் பிறக்கும்
குழையின் - சிறு
விரல்களாய்க் காய்

பிஞ்சிற் கரும் பச்சையேறி —
ஏறிப் பெரிதாக.. ஆக
சூரிய ஒளிபட்டு
மினுங்கும் .. நீர்
இறைத்த மனிதரெல்லாம்
நின்று பார்த்து
மகிழ்ந்து மனம்குலாவிப்
போகப் - பின் நாளில்
நிறம் மாறும்.

குரங்கின் கண் படாமற்
காப்பாற்றக் கூடையிட்டு
மறைக்கப்பட்டு — மஞ்சள்
மிகவேறிய ஓர் நாளில்
வெட்டி

வேறு இடம் போகும்
வாழைப் - பழம்

மணம் பரப்ப
உடையோன் - அவன் பெயரைப்
பின் பார்ப்போம்
அழுங்காமல் உரிப்பான்
ஆடை
அதன் ஆசை ஏதென்று
அறியாமல்

நக்கி — கடித்து. சுவைத்துச்
சிதையும் வாழை — அவன்
வெறியேறிய வாய்க்குள் . . .

எறிந்த தோலிலிருந்து
மீண்டும் வாருரித்துத் தின்று
களைப்பாறுவான். வீணி வழிய..

அவன்
பெயர்கள் பலவுண்டு
கணவன், பெரியப்பன்
மாமன், மச்சினன்
மறுவீட்டுக்காரன் - ஏன்
வாத்தியார்கள் கூட

ஊரான் வாழை
தின்ன
வீணி வழித்துக்
கிடப்பர்

தோழி . . . .

- மாயன் -



## எதிர்வரும் பொதுத் தேர்தல்

போன ஆட்சி சுழற்சியிலே
பொய்புரட்டு ஊழல்களாம்
அன்ன ஆட்சி சொல்கிறது இனி
ஆட்டமென்ன என்று பார்ப்போம்?

நூறு நாள் போட்ட திட்டம்
ஊறு இன்றி ஜெயம் பெறுமா?
வேறு வேறு கட்சி, கொள்கை
கூறுபடாமல் விட்டால் சரி:

பல வர்ணக் கொடி அசைய
வலம் வந்த அன்னச் சின்னம்
பலம் வாய்ந்த கூட்டிணைப்பால்
நீலப் படையணி, வெற்றிலையை
நிர்மூல மாக்கியது:

பாராளு மன்றத் தேர்தல்
நேரெதிர் போட்டிக்களம்:
வேறுவேறாக பொது எதிரணி
பிரிந்து போட்டியிடுமானால்
கூறமுடியாது மூன்றில் ரெண்டு
பெரும்பான்மை கிடைக்குமென்று?

- சேனையூரான் -

## வெளியேறல்

வெளியில் நச்சு வாயு
பூச்சியினம் ஈசல்கள் போல

பயிர் பச்சை களெல்லாம்
கறுப்பு கறுப்பாய் தெரிந்து..
படர்ந்திருந்த சிலந்திவலைகளில்
மானுட முண்டங்கள் உறுண்டு..

நிலமெல்லாம் ஊர்வன
மிதிக்கவும் முடியாமல்
விஷஜந்துக்களின் ஆட்சி
துர்நாற்றமும் மூக்கில்

வெளியே வர முடியாமல்
முடங்கி கிடக்க முடியாமலும்

திருமலை சுந்தா

## கசிப்பு ஒழியட்டும்!

சட்டம் போட்டுத் தடுத்தார்கள்
சட்டம் ஓட்டை ஆகியதால்
திட்டம் எதுவும் வெற்றிபெறா:
திருத்தும் வேலை முற்று பெறா!
கற்றுத் தேர்வில் ஊர்மானம்
காக்க வேண்டும் எனும் ஆவல்
பெற்ற துடிப்பாம் இளைஞர்அணி
பெறுமா வெற்றி: இது கேள்வி?
அரச படைகள் அறியாமல்
அயலோ ருக்கும் தெரியாமல்
இரவில் கசிப்பு தனைக்காய்ச்சி,
எங்கும் விற்பனை செய்வதானால்
பிரபுபோல இவர்க ளெலாம்
பிரச்சினை யற்று வாழுகிறார்!
வரவில் குறைந்து தினக்கூறி
வடியால் தினமும் மடிக்கின்றான்!
விதவை வயிற்றுப் பசிக்காக
விற்பனை செய்தாள்! இன்றெல்லாம் -
மலைபோல் கணவன் உள்ளவளும்
மானம் தொலைய, கசிப்பதனை
விற்பனை செய்து சுகமாக
வீடுவாசல் பெரி தாக்கி
சற்றும் சஞ்சலம் இல்லாமல்
சுகத்தில் வாழும் நிலைகாணீர்!
பள்ளிக் கூட மாணவனும்
பக்கத் துணைக்குத் தந்தையுடன்
துள்ளிக் குதித்து ஓடுகின்ற
துயராம் நிலைமை தொடருமெனின்,
சொல்வேன் அவர்கள் எதிர்காலம்
சொல்ல முடியாப் பாதாளம்!
நல்லோர் சேவை தொடரட்டும்
நாட்டில் "கசிப்பு ஒழியட்டும்"

அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு

## என்றுமிருப்பாய் நீ!

நெஞ்சு நிமிரிகிறதே - உன்முகம்
நேரில் வருகிறதே!
கொஞ்சத் துடிக்கிறதே - அடடா
குடியெழும்பி விட்டாய்!

பாட்டுப்பாட்டாய்வருதே- எனைப்பெரும்
பாவலன் ஆக்கிறதே!
தீட்டித் தீட்டி விடுப்பேன் - முரசும்
தெரிய வைத்திடுமே!

மீசையைப் பாரத்ததாலே - போதுமே
மேனுமேன் நீ அரிமா !
ஆசை அருகிருக்க - அதன்முன்
அகன்று விட்டனையே!

அற்றைப்பெரும் அவையில் - நெடிதாய்
ஆர்த்து முரசறைந்தாய்!
இற்றைக் கிலை எனினும் - தமிமோ
டென்றுமிரப்பாய் நீ!
(பாவாண என்றுமிருப்பாய் நீ!)

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு)



## கவலை யார்!



சிரிப்பை மறைப்பார்
கவலையார்!
சிந்தனையில் ஆழ்த்துவார்
கவலையார்!
நிலை தடுமாற்றுவார்
கவலையார்!
மன நோயாளியாக்குவார்
கவலையார்!
படுக்கையில் வீழ்த்துவார்
கவலையார்!
பட்டென அனுப்பிவைப்பார்
கவலையார்!
மீதி நபரை ஆக்கிரமிப்பார்
கவலையார்!
மீளாத்துயரத் தருவார்
கவலையார்!

உவர்மலையாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரனின் பக்கச்சார்பின்மை! எழும்பும் கேள்விகள்

ஓர் பார்வை

"கண்ணன்"



**பாராளுமன்றத் தேர்தலு**க்கு இன்னமும், இரண்டு வாரங்களே இருக்கின்ற நிலையில், எல்லாக் கட்சிகளுமே தம்மால் இயன்றளவுக்கு மக்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்கான பிரசார உத்திகளைக் கையாண்டு வருகின்றன. வடக்கு தேர்தல் களத்திலும், பிரசாரங்கள் சூடுபிடித்திருக்கின்றன.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை இதுவரையான தேர்தலில் நிரூபித்து வந்திருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இப்போது வாக்குகளைப் பங்கு போடுவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்ற கட்சிகளும் களமிறங்கியிருக்-கின்றன. எப்போதுமே, கொழும்புடன் இணக்க அரசியல் நடத்தி வந்த ஈ.பி.டி.பி.யும், அங்குமிங்குமாக நின்ற தமிழர் விடுதலைக் கூட்டணியும் இம்முறை தனித்து போட்டியிடுகின்றன.

இன்னொரு பக்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.க. போன்ற தேசியக் கட்சிகளும் வடக்கு தேர்தல் களத்தில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறும் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

இதுவரை காலமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மட்டுமே, பேசப்பட்டு வந்த தமிழ்த் தேசியவாதத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.க. வேட்பாளர்களும் பேசுகின்ற நிலையைக் காண முடிகிறது. மொத்தத்தில் இம்முறை தேர்தல், சிக்கலான ஒரு களத்தை வெளிப்படுத்தி-யிருக்கிறது.

குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னை ஒரு மிகப்பெரிய சக்தியாக பாராளுமன்றத்தில் மாற்றியமைக்கத் திட்டமிட்டிருந்தாலும், அதற்கு வடக்குத் தேர்தல் களம் சவாலான ஒன்றாகவே இருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடுமையான சவால்கள் இருப்பது வெளிப்படையான விடயம்.

இந்தக் கட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக வடக்கு மாகாணசபைத் தேர்தலில் முன்னிறுத்தப்-பட்டு, ஒரு இலட்சத்து 32 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்று முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் நிலைப்பாடு தொடர்பான கேள்விகள் நீடித்து வந்திருந்தன.

அதற்குக் காரணம், தேர்தல் அறிவிக்கப்பட்ட போது அவர், அமெரிக்க, பிரித்தானிய நாடுகளுக்கான பயணத்தை ஆரம்பித்திருந்தார்.

அதை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னரும், அவர் யாழ்ப்பாணம் திரும்பாமல், கொழும்பி-லேயே தங்கியிருந்தார்.

உடல் நிலையைக் காரணம் காட்டி அவர் கொழும்பில் தங்கி-யிருந்தாலும், பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முடிவை எடுப்பதற்கே அவர் கொழும்பில் தங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, திருகோணமலை-யில் நடத்திய முதலாவது பிரசாரக் கூட்டத்திலோ, கடந்த ஞாயிறன்று யாழ்ப்பாணத்தில் மருதனார்மடத்தில் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்ட நிகழ்விலோ, முதலமைச்சர் விக்னேஸ்வரன் கலந்து கொண்டிருக்கவில்லை.

இது கூட்டமைப்புக்குள் விரிசல் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்விகளையும் எழுப்பத் தவறவில்லை. இந்தநிலையில் தான், கடந்த புதன்கிழமை முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அறிக்கை ஒன்று வெளியாகியி-ருக்கிறது.

அது பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான அவரது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் அறிக்கையாக அமைந்திருந்தது. அதில் அவர் தாம் இந்த தேர்தலில் பக்கச்சார்பின்றிச் செயற்படவுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடமாகாண முதலமைச்சராக தன்னைத் தேர்ந்தெடுத்திருப்பினும், அவர்களின் தேர்தல் களங்களில் பக்கச்சார்பாக இறங்கி அக்கட்சி வேட்பாளர்களுக்காக ஆதரித்துப் பேசுவது தனக்கழகல்ல என்று அவர் கூறியிருக்கிறார்.

அத்துடன் "நேர்மையான அரசியல், கொள்கையில் உறுதி, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடிய மனோபாவம், தூரநோக்குப் பார்வை, எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணத்திற்-காகவும் விலைபோகாத மனோதிடம் கொண்ட அரசியல்வாதிகளே எமக்குத் தேவைப்படுகின்றார்கள்.

அத்துடன், தமிழர்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி, அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி, எமது மக்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களே எமது மண்ணுக்கும் மக்களுக்குமாக இன்றைய காலத்தில் தேவையாக இருக்கின்றார்கள்.

எனவே திறமையான, மக்களுக்காகவும் மக்களின் உரிமைகளுக்காகவும் போராடக் கூடிய, விலைபோகாதவர்களை தெரிவு செய்யுங்கள்" என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இந்த அறிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஏனென்றால், வடக்கு மாகாண முதலமைச்சர் மீது மக்களுக்கு இருக்கின்ற மதிப்பும் நம்பிக்கையும், அவர் பிரசாரத்தில் ஈடுபட்டால் கூட்டமைப்புக்கு கூடுதல் சாதகமாக அமையும் என்ற கருத்து அவர்களிடத்தில் இருந்திருக்கும்.

ஆனால், அவர் நடுநிலை வகிக்க எடுத்துள்ள முடிவும், யாருக்காகவும் பிரசாரத்தில் ஈடுபடப் போவதில்லை என்ற நிலைப்பாடும், இவர்களுக்கு ஏமாற்றத்-தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதேவேளை, முதலமைச்சர் விக்னேஸ்வரனின் இந்த முடிவையும் அறிக்கையையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக அரசியல் செய்யும் சக்திகள், குறிப்பாக, தமிழ்த் தேசிய முன்னணி போன்றன சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் இருப்பதை மறுக்க முடியாது.

ஏற்கனவே, வடக்கு மாகாண முதலமைச்சரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது பக்கம் இழுக்க முயன்றது. அவரது அண்மைய வெளிநாட்டுப் பயணங்களின் போதும், அதற்கான முயற்சிகள் புலம்பெயர் சமூகத்தினால் முன்னெடுக்கப்-பட்டிருந்தது. ஆனால், அதற்குப் பிடிகொடுக்காமல் நழுவியிருந்தார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

இப்போது, அவர் நடுநிலை வகிக்கப் போவதாக எடுத்த முடிவு என்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு-க்குள் நடுநிலை வகிப்பதற்கா - அல்லது ஒட்டுமொத்த தேர்தலிலும் நடுநிலை வகிப்பதற்கா என்பதில் ஒரு மயக்கம் உள்ளது.

இது ஏற்படக் காரணம், அவரது அறிக்கையில், "கூட்டமைப்பினரால் வடமாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்காக 2013 ஆம் ஆண்டில் பொதுவேட்பாளராக நான் நிறுத்தப்பட்டேன். நான் பதவிக்கு வந்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் பல நான் பக்கச் சார்பற்று நடுநிலை வகிக்கவில்லையே என்று என் மீது குறைபட்டுக் கொண்டனர். நான் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குப் பக்கச் சார்பாக நடந்து கொள்வதாக என்னை விமர்சித்தனர். முதலமைச்சர் என்பவர் எல்லோருக்கும் பொதுவானவர் என்ற முறையில் பக்கச்சார்பற்று நடந்து கொள்ள வேண்டும் என்றார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், அவர் தமிழரசுக் கட்சியின் சார்பாக செயற்படுவதாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டிய சம்பவத்தையே சுட்டி நிற்கிறது.

அதேவேளை, இதே அறிக்கை-யில், அவர் சட்டக்கல்லூரி மாணவர் சங்கத் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், ஏற்பட்ட நிலையையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்து பக்கசார்பின்றி செயற்பட்டதை குறிப்பிட்டு, அதே முடிவையே தற்போதும் எடுத்துள்ள-தாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டிருக்-கிறார்.

இது வேறுவிதமான அர்த்தத்-தைக் கொடுக்கிறது. அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அவரது ஆதரவு இருக்கிறதா இல்லையா, வேறு கட்சியின் பொருத்தமான வேட்பாளர்-களையும் தெரிவு செய்யுமாறு அவர் மக்களைக் கோருகிறாரா என்ற மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது நடுநிலை எத்தகையது என்பதை இந்த அறிக்கையில் வெளிப்படுத்த தவறியிருக்கிறார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எழுந்த விமர்சனங்களும், முரண்பாடுகளுமே முதலமைச்சர் விக்னேஸ்வரனை இந்த முடிவை எடுக்கத் தூண்டியிருந்தால், அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் கூட்டமைப்பின் தலைவர்களே.

அதேவேளை, லண்டனில் நடந்த கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கருத்து முரண்பாடுகளை உயர்ந்த நிலை ஜனநாயகமாக சுட்டிக்காட்டிய முதலமைச்சர், அதனைச் சார்ந்து இந்த முடிவை எடுத்திருப்பார் என்றால், அது அவரது முரண்நிலையை வெளிப்படுத்தும்.

இன்னொரு பக்கத்தில், அவர் இந்த முடிவை எடுப்பதற்கு இலங்கைக்கு வெளியே உள்ள சக்திகள் கொடுத்த அழுத்தம் அல்லது ஏற்படுத்திய அச்சமும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமை-ப்பின் வெற்றி மீது அவருக்கு ஏற்பட்ட சந்தேகம் காரணமாக அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம்.

அவ்வாறான நிலையில், தனது பெயரும் கெட்டுப்போய் விடும் என்ற அச்சமும் கூட அவருக்குள் தோன்றியிருக்க வாய்ப்புகள் உள்ளன அல்லது அவ்வாறான கருத்து அவருக்குள் தோற்றுவிக்கப்பட்டி-ருக்கலாம்.

எவ்வாறாயினும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மீது புலம்பெயர் தமிழர்கள் இப்போது கூடுதல் நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஆனால், அவர் புலம்பெயர் தமிழர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு முன்னரே, வடக்கு மாகாண மக்களின் நம்பிக்கையை பெற்றிருந்தார்.

இனப்படுகொலை தீர்மான-த்தை நிறைவேற்றிய பின்னரே, புலம்பெயர் தேசங்களில் அவர் மீதான விமர்சனங்கள் குறைந்திருக்கின்றன.

அதற்கு முன்னர், அந்த தீர்மானத்தை இழுத்தடிப்பதாக விமர்சித்தவர்கள் இப்போது அவரை தலையில் வைத்துக் கொண்டாடு-கின்றனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்த தேர்தலில் நடுநிலை வகிக்க எடுத்துள்ள தீர்மானம், அவரது தனிப்பட்ட முடிவு.

அதுபோலவே, தேர்தலில் வாக்களிக்கும் உரிமையும் மக்களுக்கே உரியது.

இந்தக் காரணங்களுக்கு அப்பால் அவர் இந்த தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள முடிவெடுத்திருந்தால், அது அவர் மீதான மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சிதைப்பதாகவே இருக்கும்.

விருப்பு வாக்கு மோதல்களு-க்குள் கட்சிசார் அரசியலுக்கு அப்பால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, வலுப்படுத்த வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது என்பதே பலரதும் பொதுவான கருத்தாக உள்ளது.

ஏனென்றால், அந்தக் கூட்டமைப்பு தான், அவரை நீதித்துறை மாண்பில் இருந்து, மக்களாட்சியின் மாண்புக்குரிய ஒருவராக கொண்டு வந்து நிறுத்தியது.

- www.tamilwin.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொதுத்தேர்தலில் தமிழர் விவகாரம் முன்னிலைக்கு வருகிறது

ஜனவரி 8ம் திகதி ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புடன் தொடர்புபட்ட ஊழலும் எதேச்சதிகாரமும் முக்கிய விவகாரங்களாக காணப்பட்டன. எனினும் ஆகஸ்ட் 17ம் திகதி தேர்தலில் தமிழ் பிரிவினைவாதம், அதனுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முக்கிய விவகாரமாக மாற்றியுள்ளதால் ஆளும் ஐக்கிய தேசிய கட்சி கூட்டணி தற்பாதுகாப்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஊடாக விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சி குறித்து உரத்து குரல் எழுப்புகின்றனர்.

ஆளும் தரப்புடன் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு உள்ள உத்தியோகபூர்வமற்ற கூட்டணியை பயன்படுத்தி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி தமிழ்தேசிய கூட்டமைப்பின் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலிற்கு துணை போவதாக குற்றம்சாட்டுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் விமல்வீரவன்ச பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்து நூல் ஓன்றை எழுதியுள்ளார், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் அதனை வெளியிட்டு வைத்தார்.




தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு கிழக்கு இணைப்பு மற்றும் சமஷ்டி குறித்து தெரிவிக்கப்-பட்டுள்ளமை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரச்சாரத்திற்கு துணைபோயுள்ளது, ஏனெனில் இலங்கையில் சமஷ்டி என்ற சொல் சுதந்திரம் என்பதற்கு சமமானதாக காணப்படுகின்றது. வடக்குகிழக்கு இணைப்பு என்பது தமிழ் ஈழத்திற்கான பாதையாக கருதப்படுகின்றது.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ஐ.நாவிற்கும் உள்ள நெருக்கத்தை பயன்படுத்தி முன்னாள் ஜனாதிபதியை மின்சார நாற்காலிக்கு அனுப்பும் முயற்சிகள் இடம்பெறுவதாகவும் குற்றச்சாட்டுகளை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சுமத்துகின்றது.

- www.globaltamilnews.net -

தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழர் உரிமைகளை படிப்படியாக வெல்வதற்காக தற்போதைய அரசாங்கத்துடன் ஓத்துழைக்க விரும்புகின்றது. எனினும் தேர்தல் நிர்பந்தங்கள் காரணமாக அந்த கட்சி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை முன்னிலைப்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது, அதன் தமிழ் போட்டிக்கட்சிகள் யுத்த குற்றங்களிற்கான சர்வதேச விசாரணைக்கு தீவிரமாக குரல் கொடுப்பதால் தமிழ் தேசிய கூட்டமைப்பும் சர்வதேச விசாரணைக்கு குரல்கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளது,

ஆனால் தமிழ் கட்சிகள் தமிழர் விவகாரங்களிற்காக எத்தனை தீவிரமாக குரல்கொடுக்கின்றனவோ அவ்வளவு தீவிரமாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அதனை எதிர்க்கின்றது.

# ஆரம்பமாகிறது ஆட்சி மாற்றத்தின் இறுதி அத்தியாயம்

பாராளுமன்றத் தேர்தல் களம் தமிழ்ப் பகுதிகளில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. நேரடிப் பிரச்சாரம் பெரியளவிற்கு நடக்கின்றது எனக் கூற முடியாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓரளவிற்கு நேரடிப் பிரசாரத்தை மேற்கொள்கின்றது. தங்களுக்கு சாதகமாக இருக்கின்ற வடமராட்சிப் பிரதேசம், யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி, வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதி, சாவகச்சேரி தேர்தல் தொகுதி, கிளிநொச்சி தேர்தல் தொகுதி என்பவற்றில் சற்று தீவிரமான நேரடிப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர்.

அவர்களது கலைக்குழுவும் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளது. மேளச்சத்தத்தை எழுப்பியும் பாட்டுப் பாடியும் நேரடியாக மக்களிடம் ஆதரவு கேட்டு வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சிறீதரன் மட்டும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றார். ஆதரவாளர்கள் வீட்டுச் சின்னம் பொறித்த சீருடைகளை அணிந்து கொண்டு பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். வடமாகாண அமைச்சர் குருகுலராஜா பிரசாரத்திற்குத் தலைமை தாங்குகின்றார். இவரை விட சித்தார்த்தனும் மானிப்பாய் தொகுதியில் நேரடிப் பிரசாரத்தில் சிறிதளவு ஈடுபடுகின்றனர். வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் அவருக்குத் துணையாக நிற்கினறார். ஏனைய வேட்பாளர்கள் நேரடிப் பிரசாரத்தில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. பத்திரிகை விளம்பரம் தான் அதிகளவில் வருகின்றது.

ஈ.பி.டி.பியின் பிரசாரமும் இந்தத் தடவை பெருமந்தம்தான். முன்னரைப் போல அமைச்சு அதிகாரத்தை பிரசாரத்தில் பிரயோகிக்க அவர்களால் முடியவில்லை. நிதித் தட்டுப்பாடும் அவர்கள் மத்தியில் நிலவுவது போலத் தெரிகின்றது. நேரடிப் பிரச்சாரம் மிகக் குறைவு. ஈ.பி.டி.பியின் வாக்குகள் இந்தத் தடவை தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் பக்கம் சரியத் தொடங்கியிருக்கின்றது. அடிமட்ட மக்கள் மத்தியில் அவர்கள் பிரச்சாரத்தை அதிகரித்தமை தான் இதற்குக் காரணம்.

பொதுக் கூட்டங்களைப் பொறுத்தவரை கூட்டமைப்பே பெரிய மேடையுடன்கூடிய கூட்டங்களை ஒழுங்கு செய்திருந்தது. மருதனார்மடக் கூட்டத்தில் ஓரளவு சனக் கூட்டம் இருந்தாலும் ஏனைய கூட்டங்களில் சிறிதளவைக்கூட காண முடியவில்லை. கொக்குவிலில் இடம்பெற்ற கூட்டம் இரவு 7.30 மணியாகியும் ஆரம்பிக்காமல் இருந்தது. பின்னர் சொற்ப தொகையுடன்தான் நடந்தேறியது.

சுமந்திரனின் வடமராட்சிக் கூட்டமும் தோல்விதான். மேடைதான் பெரிதாக இருந்ததே தவிர மக்கள் பெரியளவிற்கு வரவில்லை. சம்பந்தன், மாவை என்போர் சமூகமளித்தும் கூட மக்கள் வரவில்லை. இந்தக் கூட்டத்தை கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பலர் பகிஸ்கரித்திருந்தனர். சுமந்திரனுடன் தங்களை அடையாளப்-படுத்தினால் தமக்கு விழுகின்ற வாக்குகளும் விழாமல் போகும் என்ற அச்சம்தான் இதற்குக் காரணம். சனக் கூட்டம் திரளாத கோபத்தில் கூட்டமைப்பின் பெண் வேட்பாளர் மதினியையும் சுமந்திரன் பேசவிடவில்லை. சாவகச்சேரி கூட்டத்திலும் பெரிய சனத்தொகையைக் காணமுடியவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சிறு சிறு கூட்டங்களைத்தான் நடத்தி வருகின்றது. வடமராட்சி, தென்மராட்சி, வட்டுக்கோட்டை, சுழிபுரம், கிளிநொச்சி, கோண்டாவில் பகுதிகளில் இவ்வாறான கூட்டங்களை நடத்தியுள்ளனர். மக்கள் கேட்கின்ற கேள்விகளுக்கும் விரிவாக பதில்களைக் கூறுகின்றனர். புலம்பெயர் மக்களும் தமிழ்த் தேசியமக்கள் முன்னணிக்கு ஆதரவாக செயற்படுகின்றனர். தாயகத்தில் உள்ள உறவுகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டுதமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்குமாறு கோருகின்றனர். 'மாற்றத்தின் குரல் என்னும் அமைப்பை உருவாக்கி புலம்பெயர் நாடுகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவான பொதுக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

கூட்டமைப்புக்கு யாழ்.மாவட்டத்தில் மூன்று ஆசனங்களுக்கு மேல் கிடைப்பது கடினம். சித்தார்த்தன், சுரே', சிறிதரன் ஆகியோரே தெரிவாக வாய்ப்புக்கள் உண்டு. சுமந்திரன், மாவை போன்றோர் தெரிவு செய்யப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் குறைவு. தமிழ்த் தேசியமக்கள் முன்னணிக்கு இரண்டு ஆசனங்கள் கட்டாயம் கிடைக்கும். அது விருப்பு வாக்குகளை முதன்மைப்படுத்தவில்லை. கட்சிக்கான வாக்குகளையே முதன்மைப்-படுத்துகின்றது.

கூட்டமைப்பின் கூட்டங்களில் புலி ஆதரவுக் கோ'ங்களை முக்கிய பிரமுகர்கள் எழுப்புவதில்லை. சம்பந்தன் வாயே திறப்பதில்லை. சிறிதரன் மட்டும் வழக்கம் போல் தனது குரு தேசியத் தலைவர் பிரபாகரன் என்கின்றார். உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மட்டும் வலிந்து புலி ஆதரவுக் கோ'ங்களை எழுப்புகின்றனர். சுமந்திரன், சிறீதரன் போன்றோர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தாக்குவதற்கு அதிக நேரம் ஒதுக்குகின்றனர். சிறீதரன், சுரே' போன்றவர்கள் எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் நெருக்கம் கொள்ள வேண்டிவரலாம் என்பதனாலும், புலம்பெயர் சக்திகளின் எதிர்ப்புக்களைச் சம்பாதிக்கக் கூடாது என்பதனாலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை.

சம்பந்தன் 2016 இல் தமிழ் அரசியலை முடித்து வைக்கப் போவதாகக் கூறியுள்ளார். அதுவும் யதார்த்தம்தான். ஏனெனில் அதை நோக்கித்தான் தமிழ் அரசியலை அவர் நகர்த்தி வருகின்றார்.

முதலில் புலி நீக்க அரசியல் பின்னர் தமிழ்த் தேசிய நீக்க அரசியல் என வளர்ந்து தற்போது சரணாகதி அரசியலை மேற்கொண்டு வருகின்றார். சரணாகதி அரசியல் முற்றுப் பெறும்போது தமிழ் அரசியலும் முடிந்துவிடும்தானே. அதன் பிறகு தமிழ்க் கட்சிகள் தேவையில்லை. இந்திய மேற்குலகக் கூட்டு ஆயுதப் போராட்டத்தை அழித்தது, தமிழ் அரசியலை அழிக்கும் பொறுப்பை சபந்தனிடம் கொந்தராத்து கொடுத்து விட்டது. சம்பந்தன் அதனை கச்சிதமாக செய்து வருகின்றார்.

முத்துக்குமார்

- www.inamthesam.com -

# திருகோணமலையில் சம்பந்தன் கேள்வி

சேனையூர் நிரூபர்

**தமிழ் கட்சிகள் என்ற ரீதியில் போட்டியிடும் கட்சிகள் யாரை பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்கள்?**

**திருகோணமலையில் சம்பந்தன் கேள்வி**

தமிழ் மக்களின் பிரச்சனை தற்போது சர்வதேச மட்டத்தை அடைந்துள்ளது ஆனால் ,ன்னும் தீர்வு கிட்டவில்லை ஏறத்தாழ 65 வருடங்களாக எமது போராட்டம் தொடர்கின்றது. தந்தை செல்வாவினால் பல அரசியல் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்பின் 1985ற்கு பின் நீண்ட ஆயுத போராட்டம் 30 வருடங்களாக எமது ,ளைஞர்கள் ஆயுதம் ஏந்தி பல சாதனைகளை நிலைநாட்டினார்கள் அப்போராட்டமும் 2009 ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி முடிவுக்கு வந்தது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். 05.08.2015 புதன்கிழமை இரவு 7மணியளவில் திருகோணமலையில் உள்ள தனது இல்லத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் யுத்தம் முடிந்து 6வருடங்கள் கடந்த போதும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்தராஜபக்ச இந்தியாவிற்கும், உலக நாடுகளுக்கும் தமிழர் பிரச்சினைக்கு திர்வு காண்பதாக கூறி பொறுப்பு கூறும் விடயத்தில் இருந்து விலகி தமிழ் மக்களை நசுக்குவதிலே குறியாக இருந்தார். இந்த நிலையில் 2011ம் ஆண்டு உலகின் வல்லரசான அமெரிக்கா சென்று இராஜங்க அமைச்சரை நாம் சந்தித்தோம். போர் குற்றங்கள் விடயத்தில் சர்வதேச விசாரணையை அதன் பின் இலங்கை எதிர்கொண்டது. இவ்வாண்டு புரட்டாதி மாதம் வெளிவரும் ,வ்வறிக்கை இலங்கை அரசியலில் பல அழுத்தங்களை எதிர்கொள்ளலாம் எனவே ,ந்நிலையில் இத்தேர்தல் சர்வதேச ரீதியில் அதிமுக்கியமானதாகும்.

திருகோணமலையில் 5தமிழ் கட்சிகள் போட்டியிடுகின்றனர் இவர்கள் யாரை பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்கள்? இவர்கள் யாரை சந்திக்கின்றார்கள்? வாக்குகள் எமக்கு கிடைப்பதன் மூலம் இரண்டு ஆசனங்களை நாம் பெறுவதுடன் போனஸ் ஆசனத்தையும் பெற முடியும். அபிவிருத்தி என்பது தேவை ஆனால் 2ம் தர பிரஜைகளாக வாழ முடியாது ஒரு மதித் நாட்டுக்குள் இறைமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

உள்ளக சுய நிர்ணய அடிப்படையில் காணி, பாதுகாப்பு, கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், கால்நடை வளாப்பு உட்பட சகல அதிகாரங்களும் பகிர்ந்தளிக்க கூடிய தீர்வை நாம் கேட்டு நிற்கின்றோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரியாய் விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி




எழுதா இலக்கியங்களாய்த் திகழ்வன நாட்டுப்புற இலக்கியங்களாகும். அவற்றுள் மக்களின் இயற்கையோடியைந்த வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்திருக்கும் ஒன்று நாட்டுப்புற பாடலாகும். பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் நாட்டுப்புற பாடலின் பொருள்களாகின்றன. நாட்டுப்புறப்பாடலில் ஓசை நயம் இருக்கும். உணர்ச்சி இருக்கும்,

சொல், தொடை அழகிருக்கும், உவமைகள் இனித்திருக்கும். கேட்போரின் உள்ளத்தைப் பிணிக்கும் இத்தகைய நாட்டுப்புறப்பாடல்களின் தாக்கம் சங்க இலக்கியம் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரை விரவிக்காணப்படுகிறது அவற்றில் குறிப்பாக பாரதியாரின் கவிதைகளில் இத்தாக்கம் எவ்வாறு அமைந்துள்ளது என விளக்க முனைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**சிறுதெய்வ வழிபாட்டுப் பாடல்:-**

நாட்டுப்புறப் பாடல்களில் பல பக்திப்பாடல்களாக உள்ளன. இயற்கையையும், சிறுதெய்வ, பெருந்தெய்வங்களையும் வழிபடும் பாடல்களாக அவை உள்ள ஆரு கடன் நின்றாலும் மாரி கடன் ஆகாது என்ற நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் மாரியம்மனைப் பற்றிப் பாடும் போது,

**ஆதி பரஞ்சோதி ஆழகான ராக்காயி**
**கண்ணனூறு பேட்டையிலே கண்வளரும் தாயரு**
**ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது**
**மாரிகடன் தீர்த்தவர்க்க மனக்கவலை தீருமம்மா**

என்று பாடுகின்றனர்.

இதைப் போன்றே பாரதியாரும் மாரியம்மன் குறித்துப் பின்வருமாறு பாடுகிறார்.

*உலகத்து நாயகியே எங்கள் முத்து*
*மாரியம்மா எங்கள் முத்து மாரி*
*உன்பாதம் சரண்புகுந்தோம் எங்கள் முத்து*
*மாரியம்மா, எங்கள் முத்து மாரி*

இப்பாடலில் நாட்டுப்புறப் பாடல்களில் சொற்றொடர்கள் திரும்பத்திரும்ப வருவது போன்ற அமைப்பில் வரிகளை அமைத்துள்ளமை எண்ணத்தக்கது. எளிய சொற்களைக் கொண்டு பாமரர்களும் உணரும் வண்ணம் இப்பாடலைப் படைத்தளித்துள்ளார் பாரதியார்.

**கும்மிப்பாட்டு:-**

நாட்டுப்புறப் பாடல்களில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகைப்பாடலாகக் கும்மிப்பாடல் விளங்குகிறது. சிறுமியரும் இளம்பெண்களும் வட்டமாகக் கூடி நின்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வண்ணம் பாடியவாறு கைகளைக் கொட்டி ஆடுவதே கும்மிப்பாட்டாகும். குனிந்து கைதட்டிப் பாடுவதால் கும்மிப்பாட்டு ஆயிற்று. கன்னிப் பொங்கலன்று சிறுமியர் வீடுவீடாகச் சென்று கும்மியடித்து அரிசியினைப் பெற்றுவந்து

தொடரும்..

# பிரசவ வேதனை

## குட்டிக் கதை

திருமலை வி.என் சந்திரகாந்தி

'தெய்வமே... எனது கணவன் நாளைப் பொழுதாகிலும் வீடு வந்து சேர்ந்துவிட வேண்டும்!' சிவந்தினி பிறமாவட்டத்தில் அரசபணி புரியும் தனது கணவனின் நினைவுகளுடனேயே படுக்கைக்குப் போனாள்.

ஏத்தனை வாக்குறுதிகளைத் தந்தார். உற்றார் துணையோ ஊரார் அரவணைப்போ இல்லாத உன்னை இப்படியான நேரத்தில் தவிக்க விடுவேனா? என்று அடித்துக் கூறினாரே. அப்படி அவர் கூறிய வார்த்தைகளெல்லாம் வெறுமனே என்னைச் சமாதானம் செய்யத்தானா? அவள் கண்களிலிருந்து நீர் பெருகியது.

குஞ்சு குருமன்களாக அவளுடைய மூன்று குழந்தைகளும் கட்டிலை சூழ்ந்துபடுத்திருந்தன. அவளது தாய் கிழவி நால்வருக்கும் காவலாக வாசலில் பாயைப்போட்டு தூங்கிக்கொண்டிருந்தாள்.

மூன்று குழந்தைகளையே வளர்க்க வக்கற்ற எமக்கு மேலும் குழந்தைகள் எதற்கு? சிவந்தினி அலுத்துக்கொண்டாள். உடற்பாரம் நன்கு அதிகரித்துவிட்டது. கால்களில் வீக்கம். மூச்சு விடவே கஷ்டம் சிறிய வேலைகளை கூட செய்ய முடிவதில்லை.

நிறை மாதம்...!

சிவந்தினிக்கு தூங்கிவிடுவேன் என்ற நம்பிக்கை போய்விட்டது. நாரிக்கொதிப்பது போல உணர்ந்தாள். திரும்பி புரண்டு படுத்தாள். இயலவில்லை. அம்மா! எனக்கு கஷ்டமாக இருக்குது. தாய் திடுக்குற்று தூக்கத்திலிருந்து எழுந்தாள் வீட்டில் மணிக்கூடு இல்லை. ஆனாலும் கிழவி நேரத்தை அனுமானித்தாள்.

மூத்தவள் வசந்திக்கு பத்து வயது இருக்கும். எழும்பி நின்று கண்களை கசக்கினாள்.

'வசந்தி... நீ அம்மாவுக்கு மேல் கழுவ சுடுநீர் வைத்துக் கொடு. நான் செல்வனுடைய ஓட்டோவை பிடித்துக்கொண்டு வந்து விடுகிறன்.'

'அவ்வளவு தூரம் நீங்கள் தனியே போக வேண்டாம். அம்மா வசந்தி நீயும் போ' சிவந்தினி அறிவுறுத்தினாள். கிழவி ஏற்றுக்கொள்ளவில்லை.

விசர்க் கதையெல்லே பிள்ளை கதைக்கிறாய். நாடு கிடக்கிற கிடையில காவாலிகள் என்னை தள்ளிப்போட்டு விட்டு பிள்ளையை இழுத்துக்கொண்டு போய்விடுவான்கள். நான் நாலு எட்டு எட்டி உதிலை போயிற்று வந்துவிடுவன்.

கிழவி நிலைப்பாட்டை வெளிப்படையாக சொல்லவும் உண்மைதான். உதவிக்கென்றால் ஆளில்லை. உபத்திரம் கொடுப்பதென்றால் ஏமசாமம் என்று இல்லாமல் அலைந்து திரியிறான்களாக்கும் என்று சிவந்தினி அலுத்துக்கொண்டாள். செல்வன் வீட்டு நாய்கள் சாமத்து அமைதியை தகர்த்து எறிந்து சாதனை புரிந்தன. கிழவி கூப்பிடாமலே முற்றத்து மின்விளக்கு ஒளிர்ந்தது. செல்வனின் மனைவி எட்டிப்பார்த்தாள்.

'யார்... பாக்கியம் ஆச்சியா...? பிள்ளைத்தாச்சியினுடைய விசயம் என்று விளங்குது... உவர் நல்லா குடிச்சுப்போட்டு வந்து விழுந்து கிடக்கிறார்...' என்று கூறி அவள் இழுக்கும் போதே கிழவி இரு கைகளையும் உயர்த்தி கும்பிட்டு...

உன்னை தெய்வமாக நினைத்து கைகூப்பி தொழுகிறன் பிள்ளை... என்னை கைவிட்டு விடாதை என்று இரந்தாள். பெண்ணின் நிலைமை பெண்ணுக்கு புரியாமல் போய்விடுமா?

"சரி நீங்கள் போய் ஆயத்தப்படுத்துங்கோ ஆச்சி... நான் எப்படியும் அவரை எழுப்பி விடுகிறன்."

செல்வன் வீட்டு நாய்கள் தமது முயற்சியால்தான் கிழவி திரும்பிப்போனாள் என நினைத்தவை போல மீண்டும் உறங்கிப் போயின. பாக்கியம் வீட்டு வாயிற் படலையில் ஓட்டோ திரும்பும் சத்தம் கேட்டது. பிள்ளை... உன்னுடைய பாரம் இறங்குவது யாருடைய உதவியிலையும் தங்கி இருக்கேல்லை. தெய்வம்தான் உனக்குத் துணை என்று நினைத்துக்கொள். மனதிலை ஒரு நேர்த்திக் கடனையும் வை.கிழவி தானும் ஒரு நேர்த்திக் கடனை நினைத்தபடியே வசந்தியை ஓட்டோவில் ஏற்றி அனுப்பி வைத்தாள்.

ஓட்டோ ஆசனத்தில் செல்வன் இல்லை. அவனது மனைவி சாரதி ஆசனத்தில் இருந்தாள். கிழவி திரும்பவும் கைகூப்பி அழுதாள்.

பேசாமல் போய் படணை ஆச்சி ஓட்டோ உறுமியது. சிவந்தினிக்கு நிலைமை விளங்கியது. பாதையில் எதிர்பாராத விதமாக சந்திக்கும் சமயங்களில் செல்வன் அவளுடன் கேலி வார்த்தைகள் பேசுவான். எங்கே போகிறாய்? என்று கேட்டு அவ்விடம் வரை அழைத்துச் செல்வான். இப்போ உதவி தேவைப்படும் நேரத்தில் ஆளில்லை.

வைத்தியசாலை வாங்கில் அனுங்கியபடி அமர்ந்திருந்தாள். நாரி அப்படி கொதித்தது. வசந்தி தாய்க்கு அனுசரணையாக கலங்கிய கண்களுடன் நாரியை தடவிக்கொடுத்தாள். தூரத்தில் அன்னப்பட்சிகள் போல இரண்டு பெண் தாதிமார்கள் தங்களுக்குள் பேசி சிரித்தபடி வந்துகொண்டிருந்தார்கள். வந்தவர்களில் ஒருத்தி...

"ஏய் நாரியை தடவாதே!" என்று அதட்டி வசந்தியின் கையை தட்டிவிட்டாள். அந்த நேரத்தில் நாரியை தடவிக்கொடுத்தால் பிரசவ வேதனை எழும்பாது என்ற உண்மை சகலருக்கும் தெரிந்த விடயமல்லவே!. வசந்தியில் பிழை இல்லை. ஆனாலும் அவள் தான் ஏதோ தவறு செய்துவிட்டேனா என எண்ணி முழித்தாள். அடுத்தவள் சிவந்தினியின் நாடியோட்டத்தைப் பரீட்சித்தாள். நான்கு கேள்விகள் கேட்டாள். குறும்பாக சிரித்தாள்...

"நேரம் இருக்குது!" என்றாள். பெயர், வயது, விலாசம், எல்லாம் கேட்டு பதிந்தாள். பிரசவ வார்ட்டுக்கு அழைத்துச்சென்று கட்டிலை காட்டினாள். வசந்தி உயரமான அந்த கட்டிலில் படுத்துவிட்டாள். காலை வரை சிவந்தினி பிரசவவேதனையில் துடித்தாள். டாக்டா வந்தார். கட்டிலில் படுக்கவைத்து பரிசோதித்தார்.

'குழந்தை சரியான பொஸிசனில் இல்லை பக்கவாட்டில் இருக்கிறது' கூறினார். அந்த டாக்டர் கைராசிக்காரர் என்று பெயர் பெற்றவர். 'கிளினிக்' வரும் சமயங்களில் சகஜமாக கதைத்து பகிடி பேசி பழக்கம். சிவந்தினியின் அழகிய பெரிய கண்கள் அவரை ஏதேச்சையாக மயக்கும்.

அடுத்த கட்டிலுக்கு போனார். அந்த வார்டில் நோயாளிகள் இல்லை. எல்லோருமே தாய்மார்தான். ஒரு நர்ஸ் இரகசிய தொனியில் சிவந்தினியிடம் கூறினாள்.

'டாக்டருக்கு 'டியூட்டி' முடியும் நேரமாகி விட்டது. உனது நிலையில் டாக்டரின் ஒத்துழைப்பு இன்றி நாங்கள் மட்டும் சமாளிப்பது கஸ்டம். அவரை நிற்கும் படி கேட்டுப்பார்' வார்ட் ரவுண்ட் முடிந்து திரும்பிய டாக்டரை சிவந்தினி கெஞ்சி கேட்டாள்... 'ஐயா... நீங்கள் எனது தெய்வம் ஆபத்தான நிலையில் இருக்கிற என்னை காப்பாற்றுங்கோ.'

'பார்க்கலாம்' என்று கூறி வசந்தியின் கன்னத்தை செல்லமாக கிள்ளிச் சென்றார். இன்னொரு நர்ஸ்... எப்போதும் கிண்டல் பேசுபவள். 'ஹெட் நேர்சுடன்' மெட்னிபார்க்க இருப்பதை கூறி இருப்பார்' என்று கூறி களுக் என்று சிரித்தாள். சிவந்தினியின் நம்பிக்கை தகர்ந்தது.

'பயப்படாதே 'லேடி டாக்டரை' அழைக்கலாம்' என்று கூறி அடுத்தவள் தேற்றினாள். சிவந்தினியின் எண்ணம் கணவன் பக்கம் திரும்பியது. இன்னமும் கூட வரவில்லையே... ஆண்களுக்கு இந்த விடயத்தில் பொறுப்பு எங்கே? அலுவலகத்தில் இடர்கடன் ஒன்றினை பெற்று வருவதாக எழுதியிருந்தார். அவருடைய அதிகாரியும் ஆண்தானே! மறுத்துவிட்டார். உயர் அதிகாரிகளுக்கு மோட்டார் வண்டி வாங்குவதற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் இப்படியான தேவைகளுக்கு வழங்கப்படுமா? கலங்கினாள்.

அடியெடுத்து வைக்க முடியாதபடி நோவு அதிகரித்தது. குளியலறை சென்று நன்றாக குளித்தாள். "கெட்டிக்காரி" நர்ஸ் பாராட்டியதுடன் பிரசவ அறைக்கும் அழைத்துச்சென்றாள். நவீன வசதிகள் அத்தனையும் அங்கு இருந்தது. நேற்று மட்டிலும் ஒன்பது சிசுக்களை தாய்மாரிடமிருந்து பிரித்து அனுப்பிய இடம் அது.

அனைத்து தாய்மார்களும் அழுவார்கள்... கத்துவார்கள்... கணவனை திட்டுவார்கள். 'நர்ஸ்'... கேட்பாள். உனக்கு என்ன குழந்தை வேண்டும்.? ஆண் என்று கூறினால் இதோ பிறப்பது ஆண் என்பாள். பெண் என்றால் அடுத்த விதம். ஐம்பது வீதம் ' ரெக்டாக' இருக்கும் தானே!. இல்லாவிடால் கூட என்ன...? குழந்தை பிறந்து விட்டால் அந்த மகிழ்ச்சியில் எல்லாமே மறந்து போகும்.

"லேடி டாக்டர்" வந்து விட்டார்! சிவந்தினியின் கண் முன் பொறுப்பற்ற அவள் கணவன்... கடன் கொடுக்க மறுத்த அதிகாரி... 'ஓட்டோ' செல்வன்... தனது வேண்டுகோளை காதில் வாங்கிக்கொள்ளாத 'டாக்டர்' எல்லோருமே தோன்றி மறைந்தார்கள். கண்ணால் நீர் ஆறாக பெருகியது. அனைத்து தாய்மாரை போலவே அவளும் அழுதாள்... குழறினாள்.... திட்டினாள். கணவனை நிந்தித்தாள்.

இறுதியில்... ஆண் சமுதாயமே தயங்கி நிற்கும் வண்ணம் அவர்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தாள்....

இதையெல்லாம் பெண்தாதிமார் பெரிதுபடுத்தி வெளியே சொல்வதில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 65

# திட்டமிடப்பட்ட வாழ்க்கை அமையாமை!!

(வி.என்.சந்திரகாந்தி)



**இளமை**ப் பருவத்தை எய்தும் அனேகம் பேருக்கு தமது வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்ற ஒரு திட்டம் கட்டாயமாகவே இருக்க செய்யும். அவர்களுடைய நோக்கத்திற்கு முன்னுதாரணமாக பல சரித்திர புருஷர்கள் அவர்களது மனதை கவர்ந்து இருப்பர். சமயத்திற்கு தொண்டாற்றியவர்களில் ஆதிசங்கரர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோர் சிறந்த முன்னோடிகளாக குறிப்பிடக்கூடியவர்கள். அதே போன்று மக்கள் அனைவரையும் சமம் என்று கருதி அரசியல் செய்தவர்களில் ஆபிரகாம் லிங்கன், ஜோன் எவ்.கென்னடி, போன்றோர் முன்னணியில் நிற்கின்றனர். மக்கள் தொண்டில், மகாத்மாகாந்தி மற்றும், நோபல் பரிசையே தட்டிக்கொண்ட அன்னை தெரேசா போன்ற அனைவரது இதயத்தையும் கவர்ந்து நிற்கின்றனர். விஞ்ஞானம் உட்பட எந்த துறையை எடுத்தாலும் அவ்வத் துறைகளில் சாதனை புரிந்த பல சரித்திர புருஷர்களை நாம் சந்தித்திருக்கின்றோம்.

அண்மையில் காலமான இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், பாரத மக்கள் மத்தியில்



மட்டுமன்றி உலக மக்கள் அனைவர் மத்தியிலும் பெரும் மதிப்பை பெற்றிருந்தார். கனவு காணுங்கள் அது நனவாகும் என்று முழங்கி வாழ்வை திட்டமிட்டு அமைத்து அதி உயர் நிலைக்கு வந்தார். "கஷ்டம் வரும்போது... கண்ணை மூடாதே அது உன்னை... கொன்றுவிடும்... கண்ணை திறந்து பார்.... நீ அதை கொன்றுவிடுவாய்" என்று கூறி சாதனை படைத்த நாயகன் அவர்.

நாம் என்னதான் பெரும் கனவுகளைக் கண்டு அவற்றை நனவாக்க விழைந்தாலும் எம்மில் சிலரே வெற்றி என்ற இலக்கை அடைகின்றார்கள். வாழ்க்கையில் நாம் வெற்றியை சுவீகரித்துக்கொள்ள வேண்டுமாயின் நாம் உண்மை, நேர்மை, சத்தியம் ஆகிய பண்புகளுக்கு சொந்தகாரர்களாக இருக்க வேண்டும். நாம் நிர்வாகம் உட்பட எந்த துறையில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும் சரி மத்தியட்சம் மிக மிக முக்கியமான ஒரு அம்சமாகும். நாம் நடுவு நிலமையுடன் செயற்படுபவர்களாக இருந்தால்தான் மக்கள் எம்மை நாடி வருவார்கள். விருப்பு வெறுப்பற்ற முறையில் உறுதியானதும் தீர்க்கமானதுமான முடிவை எடுப்பவர் என்று எம்மைப் பற்றி விதந்துரைப்பர்.

எமது எண்ணங்களிலும் நடத்தையிலும் கூட கட்டாயமாக நேர்மை இருக்க வேண்டும். பிறருடன் அன்பாக பழக வேண்டும். அவர்களை மதிக்க வேண்டும். ஒருவரது முகத்திற்கு முன்பாக அவரை புகழ்ந்து விட்டு அவர் இல்லாத போது தூற்றி கதைக்க முற்படக் கூடாது.

நாம் எம்மை எவ்வளவு நற்பண்பு உடையவராக உயர்த்திக்கொண்டாலும் நாம் விடும் தவறு மற்றவர்கள் எம்மைப்பற்றி தவறாக கதைக்க இடம் கொடுத்துவிடும்.

சில அலுவலர்கள் அனுபவம் போதாமை காரணமாகவோ, அந்நேர பணத்தட்டுப்பாடு காரணமாகவோ சில சமயங்களில் இலஞ்சம் வாங்கியிருந்தால் அவரது சேவைக்காலம் முழுவதுமே அந்த பழி அவருக்கு நீடிக்கும்.

எமது எதிர்கால முன்னேற்றத்திற்காக நாம் தெரிவுசெய்யும் துறை எமது ஆற்றலுக்கும் பண்புக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டியதை நாம்தான் உறுதிசெய்து கொள்ள வேண்டும். ஒரு விஞ்ஞானியாக பிரகாசிக்கக் கூடியவர் வியாபாரத்தில் ஈடுபட்டால் எப்படி இருக்கும்? ஆதாயத்தை நோக்கமாக கொண்ட ஒரு வைரவியாபாரியாக பிரகாசிக்ககூடியவர் அரசியலில் ஈடுபட்டால் எப்படி இருக்கும்? பல அரசியல்வாதிகள் சந்தர்ப்ப வசத்தால் அப்படி ஆவதால்தான் அரசியல் என்ற களம் மக்கள் நலனை நோக்கமாகக் கொண்டிருக்காமல் சுயநலத்தை நோக்கமாக கொண்டிருக்கின்றது.

இன்னும் சொல்லப்போனால் அனேகமான பெற்றோருக்கு தம் பிள்ளைகளுக்கு பொருத்தான கற்கை நெறி எது என்று தெரியாது. ஆனால் தமது பிள்ளைகள் மருத்துவர்களாகவோ பொறியியலாளராகவோ வரவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பர். சந்தர்ப்பம் நன்றாக அமைந்தால் அந்தப் பிள்ளை எதிர்நோக்கும் நிலைக்கு வந்துவிட முடியும். எனவே பெற்றோர் தமது பிள்ளையினது ஆசிரியரின் ஆலோசனையை முதலில் நாடவேண்டும். அவர்தான் பிள்ளையின் திறமை பற்றி நன்கு அறிந்திருக்கக் கூடியவர். சட்டத்துறையில் பலர் நாட்டம் காட்டுவதில்லை. ஆனால் பிரச்சனைகள் நிறைந்த இந்த உலகில் ஒரு சட்டத்தரணியின் தேவை அளப்பரியது. ஒரு மருத்துவராக இருந்து நாடி பிடித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை விட மாணவனுக்கு சட்டத்துறையில் நாட்டம் இருந்து அவன் சட்டத்தரணியாக வந்துவிட்டால் அவன் மக்கள் மத்தியில் மிகுந்த மதிப்புடனும் பிரகாசத்துடனும் வாழமுடியும்.

கணக்கியல், வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம், Software Engineering. ஹோட்டல் முகாமைத்துவம் போன்ற பல கற்கை நெறிகள் இன்று பிரபல்யம் அடைந்து வருகின்றன. ஒரு மாணவன் தனது தகுதியறிந்து சரியான துறையில் காலடி எடுத்து வைத்தால் நிச்சயம் அவன் திட்டமிடப்பட்ட படி அவனது எதிர்காலம் சோபிக்கும்.

பலர் கலைத்துறையை நாடுவதில்லை. ஆனால் கலைத்துறையில் பட்டபடிப்பை முடித்த பலர் செயலாளர்களாகவும் அரச உயர்பதவிகளிலும் உள்ளனர். இலங்கை நிருவாக சேவை (திறந்தபோட்டி) பரீட்சையை கலைத்துறைப் பட்டதாரிகளும் எழுத முடியும். அப்படி எழுதி சித்திபெற்றுவிட்டால் சந்தர்ப்பம் வாய்க்குமாயின் அரசாங்க அதிபராக உயரக் கூட வாய்ப்பு உண்டு.

இனி, திட்டமிட்டபடி வாழ்க்கை அமையாமைக்கு பல புறக்காரணிகளும் இருப்பதை அவதானிக்கலாம். எமது முயற்சிகளில் அடுத்தடுத்து ஏற்படும் தோல்விகள் எம்மைச் சோர்வுறச் செய்து எமது வாழ்கையை சீரழித்துவிடும். தோல்வியே வெற்றியின் முதல்படி என்று பேச்சுக்கு சொல்வதெல்லாம் யதார்த்தமாக மாட்டாது. தோல்வி எமது மன ஓர்மத்துக்கு பாரிய அடியாக விழுந்துவிடுகின்றது. எனவே நாம் விழிப்புடன் இருந்து எமது முயற்சிகளில் எப்போதும் வெற்றியையே பெறவேண்டும்.

வாழ்க்கையில் நாம் சிறப்பதற்கு எமக்கு திட்டமிடப்பட்ட வருமானம் அவசியம். அது தொழில் நிமித்தமாகவோ முதலீடு நிமித்தமாகவோ இருக்கலாம். அதே சமயம் தொழில் முதலீடு இரண்டுமே பாதிப்புறாதபடி நாம் அவதானமாக இருக்க வேண்டும். அரச தொழில் மட்டுமன்றி, தனியார் தொழில்களிலும் போட்டிகள் பொறாமைகள். நிறையவே இருக்கும். எம்மை பின் தள்ளிவிட்டு முன்செல்ல, முயற்சிப்பதற்கென ஒரு கூட்டமே தயார் நிலையில் இருக்கும். மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத பல 'கம்பனிகள்' மக்களிடமிருந்து முதலீடுகளை பெற்று சில காலத்தில் வங்குரோத்து நிலைக்கு சென்றுவிடுகின்றன. மத்தியவங்கியில் பதிவுசெய்யப்பட்ட 'கம்பனிகள்' பலவும் கூட நஷ்டத்தில் ஓடுகின்றன. பணம் அல்லது வருவாய் இல்லாது போனால் திட்டமிட்டபடி எமது வாழ்க்கை அமையாது என்பதை கூறவேண்டியதில்லை.

மனித நேயத்தைப் போன்ற சிறந்த பண்பு எதுவும் இல்லை. பிறருடைய கருத்துக்களை ஏற்கும் பக்குவம் மிக மிக அவசியம்.

எனது நண்பர் ஒருவர் பணக்கஷ்டத்தை உணர்ந்து வெளிநாடு சென்றார். நன்றாகவே வாழ்கையை திட்டமிட்டபடி அமைத்துக்கொண்டார். ஆணும் பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். அவர்களையும் நன்றாக படிக்க வைத்து ஆளாக்கினார். அதன் பின்னர் பிள்ளைகள் தமது இஷ்டப்படி நடக்க தொடங்கினர். வெள்ளைக்காரனும் வெள்ளைக்காரியும் மருமக்களாக வந்தனர். நண்பருக்கோ பேரப்பிள்ளைகள் பற்றி பெரிய பெரிய ஆசை. கற்பனை! ஆனால் வெள்ளைக்காரர் இருவரும் குழந்தை பெறுவதை ஐந்து வருடம் ஒத்திப்போட்டனர். எதிர்காலம் பற்றிய நண்பரின் ஆசை திட்டமிட்டபடி நிறைவேறாமலே அவர் மேல் உலகம் சென்று சேர்வதே விதியாக அமைந்துவிட்டது!

# வெளிச்சமின்றிப் போகும் வாழ்க்கை

சஞ்சயன் செல்வமாணிக்கம்

இன்று எனக்கு நன்கு அறிமுகமான ஒரு நண்பரை சந்திப்பதாய் ஒப்பந்தம் இருந்ததை கைத்தொலைபேசி சிணுங்கியபடியே அறிவித்தது. மனதில் அதைக் குறித்துக்கொண்டேன். அவருக்கு பின் மதியவேளை அவரை சந்திப்பதாகவும், நாம் ஒஸ்லோவின் மேற்குப் பகுதியில் உள்ள புறநகர் ஒன்றில் உள்ள ஒரு கோப்பிக் கடையில் சந்திப்போம் என்றும் குறும்செய்தி அனுப்பினேன். "சரி" என்று பதில் குறுஞ்செய்தி வந்தது.

கோப்பிக்கடைக்கு வெளியே நண்பர் உட்கார்ந்திருந்தார். அவரருகே உட்கார்ந்துகொண்டேன். பரிமாறும் அற்புத அழகியொருத்தி என்ன வேண்டும் என்றாள். ஒரு தேத்தண்ணி என்றேன். என்ன தேத்தண்ணி என்றுவிட்டு மாம்பழம், தோடம்பழம், இன்னும் பல பெயர்களைக் கூறி இதில் எது வேண்டும் என்றபடியே புருவத்தை உயர்த்தினாள், மாம்பழம் எனக்குப் பிடிக்கும் என்பதால் மாம்பழம் என்றேன். சற்றுநேரத்தில் மாம்பழத்தின் சுவையுடைய தேனீர் வந்து. நண்பர் ஆப்பிள் கேக், கோப்பி வாங்கினார்.

நண்பருக்கு 65 வயதிருக்கும். அவர் ஒரு முன்னைநாள் வைத்தியர். ஐ.நா வின் வைத்தியப்பிரிவினூடாக பல நாடுகளுக்குச் சென்று தொழில் புரிந்தவர். ஒஸ்லோவின் பிரபல வைத்தியராக இருந்தவர். விவாகரத்தின் பின் உக்ரைன் நாட்டு அழகியொருத்தியில் ஆசைப்பட்டு அண்மையில் அவளை திருமணம் செய்தவர்.

எனது நண்பர் பெண்கள் என்றால் அற்புதமாய் ரசிக்கும் கலைப்பண்புடையவர். இவரது புதிய மனைவிக்கும் இவருக்கும் 20 வயதிலும் அதிக வயது வேறுபாடு உண்டு. வைத்தியரின் புதிய மனைவி உண்மையிலேயே அழகானவர். அவருக்குப் பின்னே நாம் நடந்தாலோ அல்லது அவரை நோக்கி நாம் நடந்தாலோ எமக்கு இதயநோய் வருமளவுக்கு அவர் அழகானவர். அவரும் ஒரு வைத்தியர்.

நாம் இருவரும் இளம்சூட்டினை அனுவித்துக்கொண்டே உரையாடிக் கொண்டிருந்தோம். நாம் எதையும் வெளிப்படையாகப் பேசிக்கொள்பவர்கள். வாழ்க்கைபற்றி பேச்சுத்திரும்பியது.

தற்போது தனக்கும் புதிய மனைவிக்கும் இடையில் ஒரு பிரச்சனை வந்திருக்கிறது என்றார் நண்பர். அவரே தொடர்ந்தார். நான் அவளைவிட சற்று வயதானவன் என்ற போது நான் வேண்டுமென்றே செருமியபடியே ஆம்.. ஆம் நீங்கள் சற்று வயதானவர்தான் அவருடன் ஒப்பிடும்போது என்றேன். சிரித்தார். நானும் சிரித்தேன். நான் முன்னைப்போல் உசாராக இல்லை என்று கூறினார். அவர் ஏதோ வில்லங்கமான விடயத்தை கதைக்கத் தொடங்குகிறார் என்று நினைத்த எனக்கு அவரின் ஆறுதலான நடவடிக்கைகள் பலத்த எரிச்சலைத் தந்தன.

காய்ந்திருந்த தனது உதட்டை நாக்கால் நனைத்தபடியே தொடர்ந்தார். நாம் ஒன்றாக படுக்கையறையில் இருக்கும் போதுதான் பிரச்சனை வருகிறது என்றார். ஆஹா விடயம் சூடுபிடிக்கிறதே என்று நினைத்தபடியே முகத்தை படு சீரியசாக வைத்திருந்தபடியே "ம்.. ம்" என்றேன்.



மனிதர் அப்பிள் கேக்கை உண்பதில் தீவிரமாகிவிட்டார். கண்ணை மூடி ம்.. ம்.. ம் என்று ஆப்பிள் கேக்கினை ரசித்து ருசித்தார். எனக்கு இருப்புக் கொள்ள முடியாதிருந்தது. நானும் தேனீரை ரசித்து குடிப்பது போல் பாவ்லா காட்டினேன். அவராகவே தொடரட்டும் என்றே நினைத்தேன். மனிதர் இப்போது கோப்பியை கண்ணை மூடி ரசித்துக்கொண்டிருந்தார். மெதுவாய் செருமினேன். நண்பர் அதைக் கண்டுகொண்டதாய் தெரியவில்லை. மீண்டும் ஆப்பிள் கேக், கோப்பி என்று நிமிடங்கள் யுகங்களாய் கடந்துகொண்டிருந்தது. இப்போது ஆப்பிள் கேக் முடிந்திருக்கிறது.

சன்சயாஆன் என்றார். எனது பெயரை அவர் இப்படித்தான் இரண்டு வருடங்களாக அழைக்கிறார். என் பெயர் சன்சயாஆன் இல்லை, சஞ்சயன் என்றேன். நீயும் இரண்டு ஆண்டுகளாக திருத்துகிறாய் நானும் முயற்சிக்கிறேன், ஆனாலும் உனது பெயரை சரியாக உச்சரிக்கமுடியவில்லை என்றார்.

எனது பொறுமை காற்றில் ஆடிக்கொண்டிருக்க இருப்புக்கொள்ளாமல் அது சரி மனைவிக்கும் உனக்கும் படுக்கையறையில் என்ன பிரச்சனை என்றேன். "பொறு" என்று கூறிய படியே கதிரையை எனக்கு அருகே இழுத்துப் போட்டுக்கொண்டார். என்னை நோக்கிக் குனிந்து மெதுவான குரலில், அவளுக்கு இப்போதெல்லாம் படுக்கையறையில் கோபம் வருகிறது என்றார். எனக்கு இரத்தம் சற்று சூடாக ஆரம்பித்தது.

பெண்கள் என்றால் அவர்களை பூப்போன்று கையாளவேண்டும் என்றேன் நான். அவரோ அதைக் கவனிக்காது கோப்பியை உறிஞ்சிக்கொண்டிருந்தார். இப்போது கோப்பிக் கோப்பை காலியாகி இருந்தது. அவரே தொடர்ந்தார். வயதாகிவிட்டதால் நான் மிக விரைவில் தூங்கிவிடுகிறேன் என்று அவர் கூறியபோது அவரைப்பார்த்து கண்ணடித்தடிபடியே "அப்படியென்றால் தவறு உன்னுடையது தான். உன் மனைவிக்கு கோபம்வராவிட்டால் தான் தவறு" என்றேன். மனிதர் கடுப்பாகிவிட்டார். "நீ அவளுக்கு சார்பாகப் பேசுகிறாய் என்றார்". "ஆம், மனைவி கோபப்படுவது நியாயம் தானே" என்றேன்.

அதற்கு அவர் "நான் தூங்கியதும் எனது குறட்டைச் சத்தம் தாங்கமுடியாததாய் இருப்பதாகவும், அவளுக்கு நித்திரை கொள்வதற்கு முடியாதிருப்பதால், அவளுக்கு பெரும் கோபம் வருகிறது என்றும் சொன்னார். எனது காதுக்குள் "சப்பாஆஆ" என்று ஒரு சத்தம் கேட்டது.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

சுராஜின் இயக்கத்தில்

## "சகலகலா வல்லவன்"

ஜெயம்ரவி, திரிஷா, அஞ்சலி நடிக்கும்



ஊரில் அப்பாவிற்காக எதையும் செய்யும் ஜாலி பாய் ஜெயம் ரவி, இவரும், சூரியும் ஒரே குடும்பம் என்றாலும் பழைய பகையால் ஊர் தேர்தலில் யார் வெற்றிபெறுவது என மல்லுகட்டுகிறார்கள். இந்நேரத்தில் சூரியின் மாமன் மகள் அஞ்சலியின் மீது ரவி காதல் கொள்ள, சூரியை பயன்படுத்தி அந்த வீட்டிற்குள் வருகிறார். பிறகு இருவரும் காதல், கலாட்டா, டூயட் என்று சென்றாலும் கடைசியில் த்ரிஷா ரூபத்தில் ஒரு வில்லங்கம் வருகின்றது. த்ரிஷா ஜெயம் ரவியின் மாமன் மகள், இவர் திருமணம் ஒரு சில காரணங்களால் நிற்க, சூழ்நிலை காரணமாக ஜெயம் ரவி திருமணம் செய்ய, பிறகு என்ன? இவர்களுக்குள் Tom & Jerry சண்டை, இது விவாகரத்து வரை செல்ல, இவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டார்களா? த்ரிஷா திருமணம் என்பது எத்தனை முக்கியம் என அறிந்து கொண்டாரா? என்பதை கலகலப்பாக கூறியுள்ளார்.

ஜெயம் ரவி காதல், ஆக்‌ஷன், புரட்சி நாயகன் என பார்த்து வந்த நமக்கு முதன் முதலாக முழு நீள காமெடியில் கலக்கியெடுத்துள்ளார். அஞ்சலி கிளாமருக்கு மட்டும் தான், ஆனால், த்ரிஷா ரவியை திருமணம் செய்து கொண்டு டார்ச்சர் செய்யும் காட்சிகளில் தூள் கிளப்புகிறார். படத்தின் இரண்டாவது ஹீரோ சூரி தான், வித்தியாசமான கெட்டப், தன்னை தானே கலாய்த்து கொள்ளும் மேனரிசம், என வடிவேலுவை நினைவுப்படுத்துகிறார்.

விவேக் சிறிது நேரம் வந்தாலும் சீனியர் சீனியர் தான், சூப்பர் சார். ஆனால், தமன், பாவம் சார் தமிழ் ரசிகர்கள், பாடல்கள் அப்படி ஒரு தெலுங்கு வாடை. இயக்குனர் பல இடங்களில் தன் குருநாதர் செண்டிமெண்டான நாய், பேதி மாத்திரை, அரசியலில் ஓட்டு கேட்பது என பலவற்றை பயன்படுத்தி ரசிக்கவும் வைத்துள்ளார். ஜெயம் ரவி, சூரி கூட்டணி காமெடி காட்சிகள், த்ரிஷாவின் திமிர் நடிப்பு என அனைத்தும் ரசிக்க வைக்கின்றது. இவர்களையெல்லாம் விட தான் வரும் ஒவ்வொரு காட்சிகளிலும் 'மொட்டை' ராஜேந்திரன் க்ளாப்ஸ் அள்ளுகிறார்.

மொத்தத்தில் அனைவர் மனதையும் கொள்ளையடித்த சகலகலா வல்லவன் இந்த அப்பாடக்கர் ஜெயம் ரவி.



### கைப்புள்ளையான ஜி.வி

டார்லிங் வெற்றிக்கு பிறகு த்ரிஷா இல்லனா நயன்தாரா படத்தை எதிர்நோக்கி காத்திருக்கிறார் ஜி.வி. இந்நிலையில் மீண்டும் டார்லிங் பட இயக்குனருடன் ஒரு படத்தில் நடிக்க உள்ளார் ஜி.வி. இப்படத்துக்கு வின்னர் படத்தில் வடிவேலு நடித்த "கைப்புள்ள" கதாபாத்திரத்தின் பெயரை தான் படத்தலைப்பாக வைத்துள்ளனர்.

ஏ.எல்.விஜய்யின் இயக்கத்தில் வெளியான "இது என்ன மாயம்" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இதழில்......



### தமிழ்நாட்டின் அம்மாவாகும் ரம்யா

தமிழ் ரசிகர்களின் மனதில் நீங்காத இடத்தை பிடித்திருப்பவர் ரம்யா கிருஷ்ணன். இவர் நடிப்பில் சமிபத்தில் வெளிவந்த "பாகுபலி" பட்டி தொட்டியெங்கும் சக்கை போடு போட்டது அனைவரும் அறிந்ததே. அவர் இப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கும் ஜெயலலிதா அவர்களின் வாழ்க்கை வரலாற்று படத்தில் நடிக்கவுள்ளாராம்.

### வாலு படம் 17இல்

தற்போதைய நிலவரப்படி வாலு படத்திற்கு ஏற்பட்ட எல்லாச்சிக்கல்களும் சரி செய்யப்பட்டுவிட்டனவாம். எனவே ஆகஸ்ட் 14 கண்டிப்பாகப் படம் வெளியாகும் என்று சொல்லப்படுகிறது. இந்தப்படம் வெளியாகிவிட்டால் அடுத்தடுத்த சிம்பு படங்கள் சிக்கல்கள் ஏதுமின்றி வெளியாகிவிடும் என்று சொல்லப்படுகிறது.

### பெற்றோர் சம்மதிக்கணும்

பிரபல பைக் நிறுவனத்தின் அறிமுக விழாவில் டாப்ஸி கலந்து கொண்டார். அப்போது பேசிய டாப்ஸி, என் பெற்றோர்கள் சம்மதம் கிடைத்தால், தாராளமாக பைக் ஓட்டுவேன் என்று கூறியுள்ளார்.



### "அதாகப்பட்டது மகாஜனங்களே"

தமிழ் சினிமாவில் குணச்சித்திரம் மற்றும் நகைச்சுவை வேடங்களில் நடித்து வருபவர் தம்பி ராமையா. இவருடைய மகன் உமாபதி தற்போது தமிழ் சினிமாவில் கதாநாயகான அறிமுகமாகியுள்ளார். இவர் நடிக்கும் புதிய படத்திற்கு 'அதாகப்பட்டது மகாஜனங்களே' என்று பெயர் வைத்திருக்கின்றனர். இப்படத்தை இன்பசேகர் என்பவர் இயக்கியுள்ளார். இவர் சின்னத்திரையில் பல தொடர்களில் உதவி இயக்குனராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நான் அரசியல்வாதியல்ல

இசை வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்த விருந்தினர்களுக்கு பூங்கொத்து கொடுக்கவில்லை. அந்தச் செலவை 2 ஏழை மாணவிகளுக்கு கல்விக்கான உதவியாக கொடுக்க என்றேன். அதன்படி இங்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. இதனால் என்னை பூங்கொத்து தயாரிப்பவர்களுக்கு எதிரி என்று சொல்லவேண்டாம். நான் வாயில்லாத ஜீவன்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தேன். அதை அரசியலாக்கி-விட்டார்கள் என்கின்றார் விஷால்.

### 300 கோடி வசூல்

இயக்குநர் கபீர் கான் இயக்கத்தில் சல்மான் கான், கரீனா கபூர் நடித்த பஜ்ரங்கி பைஜான் படம், 300 கோடி ரூபாய் வசூலைப் பெற்றுள்ளது. வெளிவந்த சல்மான் கான் படங்களில் அதிக வசூலான படம் இதுதான். இதற்கு முன்பு ரூ.200 கோடி வசூலித்த சல்மான் கான் படமாக 'கிக்' இருந்தது. அதன் வசூலை இப்படம் தாண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## ஆப்பிள் கம்ப்யூட்டர் - ஒன்னேகால் கோடி

உலகில் முதன் முறையாக டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்கள் உருவாக்கப்பட்டபோது, அவை கைகளால் வடிவமைப்பதுதான் வழக்கம். ஆப்பிள் நிறுவனத்தை உருவாக்கிய ஸ்டிவ் ஜாப்ஸ் தனது நண்பர்களுடன் இணைந்து ஆப்பிள் ஒன் கம்ப்யூட்டர்களை உருவாக்கினர். 1976ம் ஆண்டு இந்த வகை கம்ப்யூட்டர்கள் மொத்தம் 200 மட்டுமே உருவாக்கப்பட்டன. இதன் காரணமாக அவை



இப்போது அரிய வகை பொருட்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. மிகவும் அரிய பொருளான அதன் விலை இப்போது ரூ.1 கோடியே 26 லட்சமாகும்.

## உதவும் ரோபோ கரங்கள்



**அமெரிக்கா**வில் வாழும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த, 17 வயது இளைஞர், 3டி அச்சியந்திரம் மூலம், ஒரு ரோபோ கையை உருவாக்கியிருக்கிறார். ஒரு கையை இழந்தவர், இந்த செயற்கை கையை அணிந்துகொண்டால், அவர் கட்டளைக்கு ஏற்ப அது செயல்படும்.

கலிபோர்னியாவிலுள்ள, இர்வின் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் நிலே மேத்தா, இதுவரை இந்த கண்டுபிடிப்புக்காக, ஒரு சர்வதேச பரிசு உட்பட, ஆறு பரிசுகளை வென்றிருக்கிறார். "இந்த ரோபோ கையை பொருத்திக்கொள்பவர், உணவு அருந்த ஸ்பூனை பிடிக்கவேண்டும் என்றால், அவர் "ஸ்பூன்" என்று சொன்னதும், ஸ்பூனைப் பிடிப்பதற்கான தோரணையில் அதன் விரல்கள் வந்து நிற்கும். "பிடி" என்று சொன்னால், ஸ்பூனை பிடிக்கும்" என்கிறார் நிலே மேத்தா.

கேட்பதற்கு சாதாரணமாக தோன்றினாலும், பிறரது உதவியின்றி சின்னச் சின்ன காரியங்களை செய்ய வேண்டும் என்று நினைக்கும் கை இழந்தவர்களுக்கு, இது பெரிய வரப்பிரசாதம்தான். அதுமட்டுமல்ல, கணினி சில்லுகள் பொருத்திய செயற்கை கைகளின் விலை, பல லட்சங்களை தாண்டக்கூடியவை.

ஆனால், மேத்தா உருவாக்கிய இந்தக் கைகளின் மொத்த செலவே, 16,500 ரூபாய் தான். செயற்கை அங்கங்கள் துறையில் ஏதாவது செய்யலாம் என்று யோசித்தபோது பிறந்தது தான் இந்த திட்டம்.

## சைக்கிள் விரும்பிகளுக்கு....



இரைச்சல், புகையினால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு போன்றவற்றால் உலகம் ஸ்தம்பித்துவரும் நிலையில் சீனா, பிரான்ஸ் போன்ற நாடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக மீண்டும் சைக்கிள் பயணத்தை ஊக்குவித்து வருகின்றன. சைக்கிளை ஓட்ட விரும்புபவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் விதமாக பேட்டரியில் இயங்கும் சைக்கிளை தயாரித்திருக்கிறார் ஒரு இங்கிலாந்துக்காரர்

## Toshiba வின் Satellite Radius

15.6 அங்குல தொடுதிரையை கொண்டுள்ள இது 64-டிவை இல் அமைந்த Windows 10 இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது.

மேலும் இது 2.70GHz வேகத்தில் இயங்கக்கூடிய Processor ஐயும் 8GB DDR3 RAM ஐயும் கொண்டுள்ள அதேவேளை 750GB அளவுடைய வந்தட்டையும் (Hard Disk) தன்னகமாக கொண்டுள்ளது.

மேலும் HD webcam, Wi-Fi




வசதிகளுடன்

OTHER

## ஆயிரம் மடங்கு வேகம் கூடிய மெமரி உருவாக்கம்

தற்போது காணப்படும் பிளாஸ் மெரிக்களை (Flash Memory) விடவும் 1000 மடங்கு வேகம் கூடிய மெமரியினை ஐவெநட நிறுவனம் உருவாக்கியுள்ளது.3னு ஓழைவை எனப்படும் இந்த மெமரியானது யுேனு தொழில்நுட்பத்தினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதேவேளை தற்போது காணப்படும் மெமரிக்களை விடவும் 10 மடங்கு அடர்த்தி கூடியதாகவும் அமைந்துள்ளது. அதாவது சிறிய கூறுகளைக்கொண்டு உருவாக்கப்பட்டமையினால் அடர்த்தி குறைவாக இருப்பதுடன், அளவில் சிறியதாகவும் காணப்படுகின்றது. இது விரைவில் மெமரி காரட், பென்டிரைவ், ஸ்மார்ட் கைப்பேசிகள் என்பவற்றிலும் வன்றட்டுக்கு (Hard Disk) பதிலாகவும் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது

## கணனியில் தகவல்களை பாதுகாப்பதற்கு



எந்த ஒரு மென்பொருளின் துணையும் இல்லாமலேயே ரகசிய கோப்புகள் அடங்கிய கோப்பறைகளை மறைக்கலாம். இதற்கான எளிய வழி ஒன்று உள்ளது. முதல் வழி: Start==> RUN==> cmd அதாவது Start பட்டனை அழுத்தி அதில் ரன் என்பதை தேர்ந்தெடுக்கவும். தோன்றும் ரன் விண்டோவில் cmd என்று தட்டச்சிடுங்கள். Command Prompt விண்டோ ஓப்பன் ஆகும். அதில் D: என தட்டச்சிடுங்கள். மறைக்க வேண்டிய கோப்பறை உள்ள டிரைவின் :(D/E/F) பெயரை உள்ளிடவும். E டிரைவில் வைத்திருந்தால் E: என உள்ளிட்டு என்டர் தட்டுங்கள். D என்றால் D: என தட்டச்சிட்டு என்டர் பட்டன் தட்டுங்கள். இப்போது D:/> இவ்வாறு தோன்றும். அதனருகில் இடைவெளி இல்லாமல் attrib +h +s foldername என தட்டச்சு செய்யுங்கள். உதாரணத்திற்கு D:/>attrib+h+s foldername. இங்கு folder name என்பதற்கு பதில் நீங்கள் மறைக்க விரும்பும் கோப்பறையின் பெயரைக் கொடுத்து என்டரை தட்டுங்கள். இப்போது நீங்கள் மறைக்க விரும்பும் கோப்பறை காணாமல் போய் இருக்கும். மீண்டும் பெற விரும்பினால் முன்னது போலவே செய்து + குறிக்கு பதில் - குறி இட்டால் போதும். அதாவது D:/>attrib -h -s songs என்பதை டைப் செய்து என்டர் தட்டினால் மறைந்திருந்த கோப்பறை உடனே கண்ணுக்குத் தெரியும்.

## எலக்ட்ரான்களை விட வேகமானது எது?

**தற்போது**, கணினிகளின் சில்லுகளில் இருக்கும் மின்னணு சர்க்யூட்டுகள், எலக்ட்ரான்களை முடுக்குவதன் மூலம், தகவல்களை பரிமாறுகின்றன. ஒரு வினாடிக்கு, பில்லியன் (கோடி) தடவைகளுக்கு மேல் எலக்ட்ரான்கள் அணையவும் எரியவும் செய்கின்றன. ஆனால், கணினிகளில் தகவல்களை அலசவும், பரிமாறிக் கொள்ளவும், எலக்ட்ரான்களுக்கு பதிலாக போட்டான்களை பயன்படுத்தினால், தகவல்கள் செல்லும் வேகம் பலமடங்கு அதிகரிக்கும் என, விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதற்கு லேசர்களை பயன்படுத்தலாம் என்றாலும், அவை அதிக மின் சக்தியை உறிஞ்சக்கூடியவை. எனவே அமெரிக்காவிலுள்ள, ட்யூக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், இதற்கு மாற்று வழிகளை ஆராய்ந்தனர்.

தங்கம் மற்றும் வெள்ளி தகடுகளையும் லேசர் ஒளியையும் வைத்து செய்த பரிசோதனையில், பிளாஸ்மான்கள் என்ற ஒளி ஆற்றல் உருவாவதை, தகவல் பரிமாற்றத்திற்கு பயன்படுத்த முடியும் என, சமீபத்தில், ட்யூக் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கின்றனர். இதன் மூலம், வினாடிக்கு, 90 பில்லியன் தடவைகளுக்கு மேல், வேகமாக தகவல்களை பரிமாற முடியும்....

## கணனி பற்றி கண்ணோட்டம் - அதன் வரலாறும், ஏற்பட்ட மாற்றங்களும்

இன்று கணனியின் வளர்ச்சி வேகம் நாளொரு பொழுதும் வண்ணமுமாக வடிவங்களிலும், அளவுகளிலும், வேகத்திலும், தரத்திலும் மாறிக்கொண்டே செல்கின்றது. இத்தகைய கணனியின் பரிணாம வளர்ச்சி கல்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்துதல் அவசியமாகும்.

கணனி ஊடாக கல்வியிலும், கற்றலிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

மேலும், இன்று கணனி முக்கியமான ஒரு சாதனமாகவே பார்க்கப்படுகின்றது. எந்தவொரு விடயத்தைப் பார்த்தாலும் அது கணனியின் ஊடாகவே பார்க்கப்படுகின்றது. காரியாலயம் என்ன, தொழிற்சாலை என்ன எங்கும் எதிலும் கணனியின் முக்கியத்துவம் காணப்படுவதை நாம் அறிவோம். இன்று வீட்டில் இருந்தபடி உலகையே வலம் வரும் மனிதனது செயற்பாடுகள் நேரத்திற்கு நேரம் மாறிக்கொண்டே செல்கின்றது.

இருப்பினும் இன்றைய பாடசாலைகளில் மாத்திரம் இந்தக் கணனி வருகை தந்ததன்பின்னரும் ஆசிரியர்கள் கரும்பலகையும், வெண்கட்டியுடனும் காணப்படுகின்றமை மாற்றம் பாடசாலைக்குள் இன்னும் முழுமையாக வந்தடையவில்லை என்றே கூறப்படுகின்றது. காரணம் ஆசிரியர்கள் தங்களை மாற்றிக் கொண்டாலும் தன்னுடைய கற்றலையும், கற்றற் செயற்பாடுகளையும் மாற்றம் செய்யவில்லை என்பதுதான் உண்மையான விடயமாகும்.

அண்மையில் ஒரு பாடசாலைக்குச் சென்றிருந்தபோது ஆசிரியர் ஒருவர் தரம் 2 வகுப்பில் கற்பித்துக் கொண்டிருக்கின்றார். அவர் வெண்கட்டி கொண்டு கரும்பலகையில் கற்பிக்கவில்லை. அவர் மல்டிமீடியாவில் கணனியில் புறோகிராம் தயாரித்து அன்றைய பாடத்தைக் கற்பித்துக் கொண்டிருந்தார். மாணவர்களும் ஆசிரியரின் கற்பித்தலில் முழுமையாக மூழ்கியிருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கணனியின் ஊடாக பாடத்தைத் தயாரித்து இலகுவான முறையில் மாணவர்களுக்கு விளங்கும் வகையில் எளிதான உதாரணங்களுடன் உண்மையான பொருட்களையும், உபகரணங்களையும் திரையில் காண்பித்துக் கொண்டு கற்பித்தமையானது, மாணவர்களினது கற்கும் ஆவலைத் தூண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது.



தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# சிந்திப்பவன் வேட்பாளன்; சிந்திக்காதவன் வாக்காளன்?

– பாலையூற்றான் –




ஒட்டுமொத்தமாக அரசியலுக்கு வருபவர்கள் அனைவரும் தப்பாக நடப்பவர்கள் என்று கூறமுடியாது. நல்லவர்களாக வாழ்ந்து மக்களின் நலன்கருதி மக்களுக்கு சேவை செய்து மடிந்தவர்கள் பலரும் இல்லாமலல்ல. அரசியலின் அடிப்படை நோக்கத்தை நன்கு தெளிவாக புரிந்து அந்த நோக்கத்திலிருந்து விலகாது இறுதிவரை குறித்த நோக்கத்திற்காக பாடுபட்டு அதை இறுதியில் அடைபவர்களே உண்மையான அரசியல்வாதிகள்.

மாறி, மாறி இந்த நாட்டை பல கட்சிகள் ஆட்சி செய்தாலும் அன்று தொட்டு இன்றுவரை தீர்க்கமுடியாத பல அரசியல் பிரச்சினைகள் புரயோடிக்கொண்டிருப்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

அரசியலுக்குள் புறப்பட்டவர்களில் பலர் தமக்கும் தம் இனசந்துக்களுக்குமே கூடிய நன்மை செய்து இருக்கிறார்கள் என கடந்தகால அரசியல் வரலாறு எமக்கு சான்று பகின்றது. "சிந்திப்பவன் வேட்பாளன் சிந்திக்காதவன் வாக்காளன்". இதுதான் உலகம் முழுவதும் இடம்பெற்றுவரும் அரசியல் சித்தாந்தம். சில அரசியல் வாதிகள் ஒருதடவை தோற்றால் அடுத்த தேர்தலைப்பற்றி சிந்திக்காது ஒரு மூலையில் ஒதுங்கிக்கொள்கிறார்கள். ஆனால் சிலர் ஒருதடவை என்ன பல தடவை தோற்றாலும் கூட அரசியலில் இருந்து என்றுமே ஒதுங்கிக் கொள்ள மாட்டார்கள்.

மேலும் சிலர் விட்டு விட்டு அரசியலுக்கு வந்து போவார்கள் சிலர் இருக்கும் வரை அரசியலில் அசையாமலே இருந்து விடுவார்கள். அதாவது தொடர்ச்சியாக பணம் சம்பாதிக்க வேண்டும். அதி உயர் சுகபோக வாழ்க்கை வாழவேண்டுமென்று பலர் அரசியலில் இறங்குவது போன்று இன்னும் பலர் கௌரவம், புகழ், கீர்த்தி என்பவைகளை அடிப்படையாக கொண்டு அரசியலில் பிரவேசிப்பார்கள். சேனநாயக்கா, பண்டாரநாயகா, மகிந்தராஜபக்ஷ போன்ற பிரபல்ய அரசியல் குடும்பங்களை இங்கு உதாரணமாக சுட்டிக்காட்டலாம்.

இவ்விதம் சுழற்சி முறையில் அரசியலில் ஈடுபடுவோர் பலர். ஆட்சிக்கு வரும் பலம் வாய்ந்த கட்சிக்கும் தாவி ஏதாவதொரு வருமானத்தை தேடிக்கொள்ளும் நோக்கில் அரச பதவிக்குள் எப்படியோ நுழைந்துவிடுவார்கள்.

எதிர்வரும் பொது தேர்தலில் 150பௌத்த பிக்குகளும், 53பெண்களும் போட்டியிடுகிறார்கள். அதுமாத்திரமல்ல 225உறுப்பினர்கள் தேவைப்படுகிறார்கள். எமது பாராளுமன்றத்துக்கு இம்முறை சுமார் 6000 பேர் பொதுத்தேர்தலில் போட்டியிட குதித்துள்ளார்கள். சென்ற முறை ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக மக்களை அன்றைய ஆட்சியாளர்களின் கூட்டங்களுக்கு அழைத்து வருவதில் இலங்கை போக்குவரத்து சபைக்கு செலுத்தவேண்டிய பேரூந்து கட்டணமாக பல இலட்சம் ரூபாய்கள் இன்னும் செலுத்தாத வகையில் அதை மீளப்பெற கூடநடவடிக்கை எடுக்கப்போவதாக சம்பந்தப்பட்ட இன்றைய அமைச்சர் தெரிவித்துள்ளார். அதை விட அரச தனியார் ஊடக விளம்பரப் பகுதிகளுக்கு அன்றைய தேர்தல் தொடர்பாக பல இலட்சக்கணக்கான பணம் செலுத்த வேண்டி இருப்பதாகவும் தெரிய வருகிறது.

சில அரசியல் வாதிகள் அரசியலுக்காக தங்கள் பரம்பரை சொத்துக்களை விற்று அல்லது ஈடு வைத்து ஈற்றில் தேர்தலில் தோல்வியடைந்து நடுவீதிக்கும் வந்துள்ளார்கள். சிலர் தங்கள் சொந்தப்பணத்தில் ஒரு சதமேனும் இழக்காமல் நாட்டின் பெரும் பணக்காரர்களிடம் எப்படியோ தேர்தலுக்காக பணம் திரட்டி விடுவார்கள். அதைவிட வெளிநாடுகளிலுள்ள தம் ஆதரவாளர்களையும் அவர்கள் விட்டு வைக்கமாட்டார்கள்.

சட்டவிரோத நடவடிக்கை மூலம் பாரிய இலாபத்தை பெறுவது மட்டுமல்ல, அகப்பட்டால் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் பலர் அரசியல்வாதிகளை நாடுகின்றார்கள். பொதுவாக இந்த நாட்டில் தொழில் இல்லாப்பிரச்சினையே தலைவிரித்தாடுகின்றது. எப்படியாவது அரசாங்கத் தொழிலுக்காகவே பலர் அரசியல்வாதிகளின் பின்னால் செல்கின்றார்கள்.

அதனால் நாட்டின் சட்டம், நீதி, நேர்மை என்பன மழுங்கடிக்கப்படுகின்றன. அநீதி தலைத்தோங்க அரசியல்வாதிகளும் ஒருகாரணம் என்பதை சுட்டிக்காட்டலாம். இலஞ்சத்தை கொடுத்தாவது மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்திசெய்து கொள்கிறார்கள்.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து கடும் நோயினால் பீடிக்கப்பட்ட வறுமையான நோயாளிக்கு சத்திர சிகிச்சை போன்ற நடவடிக்கைகளின் போது வழங்கக் கூடிய அதிக தொகை ரூபாய் ஒன்றறை இலட்சமே அதுவும் வழங்கப்படுவது கடும் விதிமுறைகளின் கீழாகும்.

பஞ்சலிங்கம் அப்பகுதியில் பெரும் வர்த்தகர். சிறுவயது தொடக்கம் கடும் முயற்சியின் காரணமாக பல தொழில்களுக்கு உரிமையாளரானார். எத்தனையோ தலைமுறைக்கு தேவையான செல்வம் அவரிடம் குவிந்து கிடக்கிறது. அசையும் அசையா சொத்துக்கு கணக்கே இல்லை. இருந்தாலும் இந்த நாட்டு அரசியல்வாதிகள் அனுபவித்து வரும் அதிஉயர் சுகபோகங்கள் தன்னிடம் இல்லையே என அவர் மனதில் ஒரு புத்தம் புதிய கவலை உருவாகி வயதுமுதிர்ந்த அவரை நிதமும் ஆட்டிப்படைத்து வந்தது.

அவரது தொழிலகத்தில் தொழில்சங்கத் தலைவரான புரட்சிபாலனை தனது அரசியல் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள தேர்ந்தெடுத்தார் பஞ்சலிங்கம். அரசியலில் அவர் முதன்முதலில் தடம்பதிக்க போகும் இடமே அப்பகுதி மாகாணசபை. சுயேட்சையாக அவர் களம் இறங்கினார் அந்த தேர்தலில் அவரின் சுயேட்சைக் குழு அமோக வெற்றியை ஈட்டியது.

பஞ்சலிங்கம அந்த சுயேட்சைக் குழுவின் தலைமைவேட்பாளராக இருப்பினும் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றவன் கந்தர்வன். அவன் சிறுவயது தொடக்கம் இடதுசாரித்துவ கொள்கையை பின்பற்றி நடப்பதால் மக்களின் அமோக ஆதரவு அவனுக்கு இருப்பதை நடந்தேறிய தேர்தல் தெளிவாக நிருபித்தது.

அங்கு கிடைக்கப்பெற்ற ஒட்டு மொத்த வாக்குகள் அடிப்படையில் குறித்த சுயேட்சைக்குழுவுக்கு ஒரே ஒரு ஆசனமே கிடைத்தது. அதற்குறியவன் கந்தர்வனே. நினைத்துக்கூட பார்க்க முடியாமலிருந்த அவன் ஓர் உயர்ந்த அந்தஸ்த்துக்குரியவனாகினான்.

இரண்டாவது இடத்தில் பஞ்சலிங்கம் இருப்பதால் குறித்த மாகாணசபையின் உறுப்பினர் பதவிக்கு அவர் தகுதியற்றவராக இருந்தார். கந்தர்வன் தனது முதலாளியின் சுயேட்சைக்குழு வெற்றி பெற இரவு பகலாக கஷ்டப்பட்டானே தவிர இலட்சக்கணக்கில் பணம்செலவு செய்யவில்லை. தேர்தலுக்கான சகல செலவுகளையும் அவனது முதலாளியான பஞ்சலிங்கமே செலவு செய்தார். ஆனால் ஆசைப்பட்டவாறு மாகாணசபைக்கு அவர் தெரிவாகவில்லை.

அவரது நரி மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. எப்படியோ கந்தர்வனுக்கு பணம் செலவு செய்தது ஆசை வார்த்தை காட்டி அவனை குடும்பத்துடன் நோர்வே நிறுவனமொன்றிற்கு ஒப்பந்த வேலை அடிப்படையில் அங்கு அனுப்பி வைத்தார். அதன் காரணமாக கந்தர்வன் தனது மாகாணசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யவே பட்டியலில் அடுத்தபடியான வாக்குகளைப் பெற்ற தொழிலதிபர் பஞ்சலிங்கம் குறித்த மாகாணசபைக்கு சுயேட்சை குழுவின் சார்பில் தெரிவானார்.

கந்தர்வன் வெளிநாட்டில் இருப்பதால் பஞ்சலிங்கத்தின் தொழிலகத்தில் தொழிலாளர்கள் சார்பில் முன் வைக்கப்படும் கோரிக்கைகள் போராட்டங்கள் உண்ணா விரதங்கள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

---

# "பயம்"



**அன்று** ஓர் பிறந்தநாள் இரவு நேர விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. அது ஓர் கிராமம். இருப்பினும் அக்குழந்தையின் தந்தை வெளிநாட்டிலிருந்து வந்திருந்தமையினால் அங்கு மிகவும் விமரிசையாக பார்ட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சகல சதிகளுடனான விருந்தில் நகரப் பகுதியில் இருந்தே நிறைய பேர் கலந்து கொண்டனர்.

ஷேலியும் தனது நண்பிகளுடன் தனது காரில் அக்கிராமத்தின் பார்ட்டிக்கு சென்றாள். பிறந்த நாள் கேக் வெட்டி பாடல் பாடப்பட்டு ஓர் வழமையான நிகழ்வினைப் போல நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஊரார் ஒரு புறம் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்த வண்ணம் சாப்பிட்டு விட்டு சென்று கொண்டிருந்தனர். தந்தையின் நண்பர்கள் ற்றும் நண்பிகள் மட்டும் சாப்பிடாமல் வேறு ஓர் பார்ட்டிக்காக காத்திருந்தனர்.

நேரமோ இரவு 10.00 மணி. ஆரம்பித்தது அவர்களது ரகளை பாட்டும் கூத்தும் கைகளில் தண்ணீர் போத்தல்களுமாக ஆண்கள் குதூகலமாக இருந்தனர். அவர்கள் பெண்களையும் ஆடச் சொல்லியும் மது உட்கொள்ள வேண்டாம் சோடா அருந்துங்கள் என அவர்களுக்கு சோடா போத்தல்கள் வழங்கி அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

ஊர்ப் பெரியவர் ஒருவர் அதிலிருந்த ஒருவரின் காதுக்குள் ஏதோ முணுமுணுத்துச் சென்றார்.

தொடர்ந்தது அவர்களின் கொண்டாட்டம். பெரியவர் காதிற்குள் ஓதிய மந்திரத்தை யாரும் சட்டை செய்யவில்லை.

திடீரென ஓர் சத்தம் கேட்கவே அனைவரும் அமைதியாகினர். அவ்விடம் நிசப்தமானது.

தவிர அனைவர் மனதிலும் ஓர் அமைதியும் தாம் ஏன் பயப்படுகின்றோம் எனும் கேள்வியும் எழுந்தது. உடன் பார்ட்டி ஏற்பாட்டாளர் அவ் அமைதியை கலைக்கும் நோக்கில் கதைக்கத் தொடங்கினார். பின் சற்று நேரத்தில் பழையபடி விழா கலை கட்டத் தொடங்கியது.

இருப்பினும் பெரியவர் கதைத்தவன் மாத்திரம் கண்ணை இயன்றளவு பெரிதாக்கி பயத்துடன் காணப்பட்டான். இதை கண்ட ஷேலி அவன் அருகில் சென்று என்ன நடந்தது. அந்த ஐயா என்ன கூறினவர் என வினவினாள். ஆரம்பத்தில் இல்லை அது ஒன்றும் இல்லை என கூறி தான் சாதாரணமாக இருப்பது போல் காட்டிக் கொண்டான்.

இருப்பினும் அவள் அவனை விட்டு விலகாது வேறு விடயங்கள் குறித்து கதைத்துக் கொண்டிருந்தாள்.

ஷேலி அவனுடன் கதைத்ததிலிருந்து அவன் எதையோ மறைக்கின்றான் என்பதை மாத்திரம் புரிந்து கொண்டாள். பின் சற்று தள்ளி நின்று அவனது அசைவுகளை நோட்டம் விட்டாள். அவனோ மற்றவருடன் சேர்ந்து சிரிப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தான். மரங்களின் காற்று ஒருவிதமான குளிராக வீசிய போதும் அவனுக்கோ வியர்த்துக் கொட்டியது. உடன் தனது நண்பி ஒருவளிடம் விடயத்தைக் கூறினாள். அவள் ஓர் பத்திரிகையின் புலனாய்வாளராக கடமையாற்றுகின்றாள். ஆனால அது ஷேலியைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

அவள் சற்று நிதானமாகவே அவன் அருகில் சென்று சந்தேகம் எழாத வண்ணம் கதையைத் தொடர்ந்தாள்.

மறு பக்கம் பார்ட்டி எவ்வித குழப்பங்களும் இன்றி பயணித்துக் கொண்டிருந்தது. நேரம் தற்போது 12.30 ஐ நெருங்கியது.

திடீரென "ஐயோ" என ஓர் பெண்ணின் குரல் .....

தொடரும்

தொகுப்பு - தன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இஸ்லாம் கூறும் குற்றப் பரிகாரங்கள்

**அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்**

3) உம்ரா செய்தல் - ஒரு உம்ரா ,ன்னும் ஒரு உம்ராவுக்கு மத்தியிலுள்ள (சிறு பாவங்களுக்கு) பரிகாரமாகும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்குரிய கூலி சுவர்க்கத்தைத் தவிர வேறில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (சுனனுல் பைனகி)

4) அரபா நோன்பு இரு வருட பாவங்களுக்கு பரிகாரமாகும் அரபா நாளில் நோன்பை நோற்பது முன் சென்ற பின்வரும் ஒரு வருடத்தின் சிறுபாவங்களுக்கான குற்றப்பரிகாரமாகும். ஆஷுரா நாளில் நோன்பை நோற்பது ஒரு வருட பாவத்திற்குரிய பரிகாரமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனனுல் பைனகி)

5) ஆஷுரா நோன்பு ஒரு வருட பாவங்களுக்கு பரிகாரமாகும்.

அரபா நாளில் நோன்பை நோற்பது முன் சென்ற பின்வரும் இரு வருடத்தின் சிறுபாவங்களுக்கான குற்றப்பரிகாரமாகும். ஆஷுரா நாளில் நோன்பை நோற்பது ஒரு வருட பாவத்திற்குரிய பரிகாரமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனனுல் பைனகி)



6) சபையில் ஏற்பட்ட தவறுகளுக்கு பரிகாரம் நபி(ஸல்) அவர்கள் ஒரு சபையிலிருந்து எழுந்தால்,

முற்றும் .. ..

– ஆசிரியர் : ஆரிஃப் –

## திருச்சபையின் வரலாறு



அவனுடைய இறப்புக்குப்பின் அத்துன்பங்கள் குறையத்தொடங்கின.

அப்போஸ்தலர்கள் ஒருவர் பின் ஒருவராக மறையத் தொடங்கியபின் திருச்சபை முன்பிருந்த அதே தைரியத்துடன் தொடர்வதில் தளர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. இவற்றை எதிர்பார்த்து அப்போஸ்தலர்கள் திருச்சபைகள் தொடர்ந்து நல்லமுறையில் வளர்ந்து வரும்படி மூப்பர்களையும் உதவியாளர்களையும் நியமித்திருந்தனர். இச்சபைத்தலைவர்களில் பலர் நல்லவர்களாகவும், திறமைசாலிகளாகவும் இருந்தபோதும் இக்காலப்பகுதியில் சபைத் தலைமைத்துவத்தின் தரம் குறைந்து காணப்பட்டது.


இக்காலப்பகுதியில் சபைத் தலைவர்கள் எழுதிய நூல்கள் உலகத்து எழுத்தாளர்களின் நூல்களைவிட மேன்மையானதாக இருந்தபோதும், ஆத்மீக உணவளிப்பதில் அப்போஸ்தலர்களின் எழுத்துக்களுக்கு சமமான வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. அத்தோடு அப்போஸ்தலர்களின் எழுத்துக்களின் தரமும் இவற்றில் இருக்கவில்லை. இந்நூல்களை புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு சமமானதாகக் கருதமுடியாது. இவற்றில் சிலவற்றைப் பார்ப்பது நல்லது.

கிளெமன்டின் நிருபம் – அப்போஸ்தலர்களுடைய நிருபங்கள் எழுதப்பட்ட காலத்திற்கு பிறகு எழுதப்பட்ட நிருபங்களில் காலத்தில் முதலிடம் பெறுவது கிளெமென்டின் நிருபமே. இது 96 இல் கொரிந்து சபைக்கு எழுதப்பட்ட நிருபம். கொரிந்து சபையில் இடம் பெற்றிருந்த சில பிரச்சனைகள் சம்பந்தமாக இக்கடிதம் எழுதப்பட்டது. இக்கடிதம் கொரிந்தியர்கள் வேத போதனையைப் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தியது. பழைய ஏற்பாட்டு வசனங்களையும் முக்கியமாக பவுலின் நிருபங்களை உதாரணங்காட்டியும் இந்நிருபம் எழுதப்பட்டிருக்கிறது.

தொடரும் .. ..

www.bible.me

## தூக்கத்தில் கைபோன் தேவையா



தூக்கத்திற்கு செல்வதற்கு முன் இலத்திரனியல் சாதனங்களைப் பாவிப்பதனால் தூக்கத்தில் பாதிப்பு ஏற்படும் என்பது அனைவரும் அறிந்ததே.

இருந்தும் நம்மில் பலர் தொடர்ந்தும் இவ்வாறு இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றோம்.

இவ்வாறிருக்கையில் படுக்கையில் இருந்தவாறு ஸ்மார்ட் கைப்பேசியினைப் பாவிப்பதனால் உடல் மற்றும் மூளையில் ஏற்படும் பாதிப்புக்களை கலிபோர்னிய பல்கலைக் கழகத்தின் மனோதத்துவ நிபுணர் முன்வைத்துள்ளார்.

இதன்படி இரவு நேரத்தில் ஸ்மார்ட் கைப்பேசிகளினை பயன்படுத்துவதனால் அவற்றின் திரையிலிருந்து வெளிவிடப்படும் போட்டோன்கள் (Photons) கண்கள் மற்றும் மூளையைப் பாதிப்பதுடன் ஹோர்மோன்களின் உற்பத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் தூக்கம் கெடுவதனால் கலங்கள் முறையாக செயற்பட முடியாது போவதாகவும், மறுநாள் காலையில் நீண்ட தூக்கம் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ள அவர், ஸ்மார்ட் கைப்பேசிகளின் ஒலிகளாலும் தூக்கத்தில் பாதிப்பு ஏற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சிரியுங்கோவன்.. 



*மன்னர் ஏன் குதிரையை அடி பின்னுகிறார்?*

அது போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடி வராமல் சண்டையிடப் பார்த்ததாம். அதான்!

*டேய்.. கண்ணா கடைக்குப் போய் நாலு நாட்டுக் கோழி முட்டை வாங்கிட்டு வாடா!*

*சரிம்மா!. எந்தெந்த நாட்டுக்குப் போய் வாங்கிட்டுவர!!??*

*பீர் குடிச்சா உடம்புக்கு நல்லதுன்னு சொன்னாங்க. சரின்னு கஷ்டப்பட்டு குடிச்சுப் பழகின பிறகுதான் சொன்னாங்க!! அந்த கருமத்தை [illegible] விட நல்லதாம்!*




## பிறந்த எண் பலன்கள் 6

6 என்ற எண் மனித வாழ்வில் சிறந்த முறையில் செல்வாக்கினை பெற்றதாக திகழ்கிறது. 6,15,24 ஆகிய எண்களில் பிறந்தவர்கள் நேர்மையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் 6ம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். பிறருக்கு உதவி செய்வதில் வல்லவர்கள். தன்னலம் கருதாமல் விட்டுக் கொடுப்பார்கள். மிகவும் பொறுமைசாலிகளாக இருந்தாலும் சில நேரங்களில் கோபம் கொள்வர். தற்பெருமைக்கும், புகழ்ச்சிக்கும் ஆசைப்படாதவர்கள் என்பதால் இவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவதில்லை. அதிக சகிப்பு தன்மையும் உண்டு. சிந்தனா சக்தியிலும், செயலாற்றுவதிலும் நிதானமாக செயல்பட்டாலும் தன்னம்பிக்கையும் அசட்டு தைரியமும் மேலோங்கி இருக்கும். எதிலும் சாதுர்யமாகப் பேசி பிறரை தம் வசப்படுத்திக் கொள்வார்கள். 4,5,7,8ம் எண்ணில் பிறந்தவர்கள் இவர்களுடன் நட்புடன் பழக முடியும். 1,2ம் எண்ணில் பிறந்தவர்களிடமிருந்து சற்று விலகி இருப்பதே நல்லது.

## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : செயல்கள் நிறைவேற அக்கறை கொள்வீர்கள். பணவரவுக்கேற்ப செலவுகளை திட்டமிடுவீர்கள். உடன்பிறந்தவர்கள், சொல்கேட்பர்.

**ரிஷபம்** : நிகழ்வுகள் இனிதாக அமையும். சமூகத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில் விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்** : பொது இடங்களில் எவரிடமும் வாக்குவாதம் வேண்டாம். ஆடம்பரச் செலவை தவிர்ப்பது நல்லது. தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும்.

**கடகம்** : அளவுக்கு மீறி, புகழ்ந்து பேசுபவர்களிடம் இருந்து விலகவும். குடும்பத்திற்கான பணத்தேவை அதிகரிக்கும். பயணங்களில் உரிய பாதுகாப்பு தேவை.

**சிம்மம்**: நடை, உடை, செயலில் வசீகரம் இருக்கும். பேசுவதில் நிதானம் வேண்டும். எதிர்ப்பு விலகி, முன்னேற பாதை உருவாகும்.

**கன்னி** : மனதில் நம்பிக்கை வளரும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். அரசு சார்ந்த உதவிபெற அனுகூலம் உண்டு.

**துலாம்** : நீதி, நேர்மையுடன் செயல்கள் அமையும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பண வரவும் கூடும்.

**விருச்சிகம்** : உடல்நிலை ஆரோக்கியம் பெறும் பணிகளை, குறித்த காலத்தில் நிறைவேற்றுவீர்கள். பிறர் மீதான அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டாம்

**தனுசு** :தாழ்வு மனப்பான்மையை தவிர்ப்பதால், செயல்களில் தரம் அதிகரிக்கும். வெளியூர் பயணத்தை தவிர்க்கவும். ஓய்வு நேரத்தை பயன் உள்ளதாக மாற்றுவீர்கள்.

**மகரம்** : தாமதமான செயல் அதிர்'ட வசமாக நிறைவேறும். உடன் பிறந்தவர்களின் சொற்கள் மன வருத்தம் தரும். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம்.

**கும்பம்** : மனதில் நம்பிக்கை வளரும். புதிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள். குடும்ப நிகழ்வுகள் இனிதாக அமையும். பெண்களுக்குஉதவுவதில் நிதானம்வேண்டும்.

**மீனம்** : சொந்தப் பணிகளில் மட்டும் கவனம் கொள்வது நல்லது. செலவில் சிக்கனம் பின்பற்றுவதால், கடன் பெறுவதைத் தவிர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமையல் சமையல்

### பழ இட்லி

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - 1/2 கப், புழுங்கல் அரிசி - 1/2 கப், உளுந்து - 1/4 கப், வெந்தயம் - 1/2 டீஸ்பூன், முந்திரி – 10, பாதாம் - 10, இஞ்சி - சிறுதுண்டு, பச்சை மிளகாய் - 3, கல் உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு, பேரீச்சம்பழம் - இட்லிக்கு ஒன்று வீதம்

**செய்முறை**

அரிசி, உளுந்தை சுத்தம் செய்து சேர்த்து 1 மணி நேரம் ஊற வைத்து, வெந்தயம் சேர்த்துக் கரகரப்பாக கிரைண்டரில் அரைக்கவும்.

அதனுடன் உப்பு சேர்த்து 4 மணி நேரம் புளிக்க விடவும். பிறகு, ஒரு தாச்சியில் எண்ணெய் ஊற்றி உளுந்து, கடலைப்பருப்பு, நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், உடைத்த முந்திரி, பாதாம் சேர்த்து, தாளித்து மாவில் கலக்கவும்.



பின் மாவை இட்லி பாத்திரத்தில் ஊற்றி மிதமான சூட்டில் வேக வைக்கவும்.

பாதி வெந்ததும், இட்லி மீது ஒவ்வொரு பேரீச்சம்பழத்தைப் பதிக்கவும். இட்லி வெந்ததும் இறக்கவும்.

தேங்காய் சட்னி, சாம்பார் போன்றவற்றோடு தொட்டுக்கொள்ளலாம்.

## ஏற்படும் மூட்டுத் தேய்மானம்



எலும்பு மண்டலத்தில் ஏற்படும் மிக முக்கியமான பிரச்சனை மூட்டுத் தேய்மானம். இன்றைய காலகட்டத்தில் இளம் வயதினருக்கும் மூட்டுத்தேய்மானம் ஏற்படுகிறது. போதுமான ஊட்டச்சத்து இல்லாததே இதற்கு காரணம் என்று சொல்லலாம்.

சித்த மருத்துவத்தில் இந்த மூட்டுத் தேய்மானத்துக்குச் சிறந்த மருந்துகள் உள்ளன, அதில் அத்திப்பழம் மிகச்சிறந்த மருந்து. இதில் கல்சியம் மற்றும் புரதச்சத்து மிக அளவில் இருக்கிறது.

**மருத்துவம்**

அத்திப்பழம் - 5, அரச விதை - 10 கிராம், ஆல விதை - 10 கிராம், பூசணி விதை - 10 கிராம், தேன் - ¼ கிலோ

மேலே குறிப்பிட்ட அனைத்து பொருட்களையும் கொஞ்சம் தேன் விட்டு நன்றாக அரைத்துக்கொள்ளவும். மீதியுள்ள தேனை நன்கு காய்ச்சவும் பொங்கிவரும் நுரையை நீக்கிவிட்டு அதில் அரைத்த விழுதைச் சேர்த்துக் கிளறவும், சரியான பதம் வந்தவுடன் இறக்கி வைக்கவும்.



இதை காலை மாலை இருவேளையும் தொடர்ந்து 48 நாட்களுக்கு சாப்பிட்டு வந்தால் மூட்டுத்தேய்மானம் குணமாகும். மேலும், உடல் பலவீனத்தால் ஏற்படும் வலி மற்றும் வேதனை குறையும்.

## ஆண்களுக்கு ஏன் வழுக்கை விழுகின்றது??



குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தலைமுடி ஓர் பிரச்சினையாகவே இருக்கின்றது. முன்பு 60 வயதில் விழுந்த வழுக்கை தற்போது 30களிலேயே விழுந்துவிடுகின்றது. தினசரி 100 முடிகள் வரை கொட்டுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளது. முடியானது தினசரி சராசரி 3மிலீ ரை வளர்கின்றது. இதற்கு பரம்பரை மரபணுக்கள் மற்றும் காட்டாஜன் என்ற ஒரு பருவமும்.

ஓர் சுழற்சி அடிப்படையில் முடி வளர்ந்து முதிர்ந்து கொட்டி பின் மீண்டும் அதே முறையில் நிகழும்.

வளரும் பருவத்தில் காணப்படும் போது முடி வளரும். எனினும் முடி கொட்டு பருவத்தி கொட்டிக் கொண்டே செல்லும்.

வயது, பரம்பரை என்பனவே இதற்குக் காரணமாகும். வயதாகும் போது புதிய செல்களை புதுப்பிக்க காலம் எடுத்தலே மீண்டும் முடி வளராமைக்குக் காரணமாகும்.

டெஸ்டோஸ் டிரோன் ஹோமோன் அதிகளவில் ஆண்களுக்கு சுரப்பதாலேயே அவர்களுக்கு வழுக்கை விழுகின்றது.

விரைவில் வழுக்கை விழுவதை தடுப்பதற்கு ஸ்கேன் செய்வதன் மூலம் முடியின் வேர் உணிருடன் காணப்பட்டால் அதற்கான சிகிச்சை மூலம் சீர் செய்யலாம். அல்லது சில ஹோமோன் மாத்திரைகளை எடுப்பதன் மூலம் முடிகள் கொட்டுவதை பெருமளவில் தடுக்கலாம்.

## ஆரோக்கிய கேள்வி பதில்

- **கால் பாதங்கள் வலிக்க காரணம் என்ன?**

தைரொய்டு பிரச்சனை இருந்தால், கால்கள் வலிக்கும், உடல் சோர்வடையும். மேலும், பாதங்களிலுள்ள திசுக்கள் சேதமடைந்து இருந்தாலும், பாதங்கள் வலிக்க தொடங்கும். அதோடு, நீரிழிவு நோய்க்கான பரிசோதனை செய்து கொள்வதும் நல்லது. நீரிழிவு நோய் இருந்தாலும், கால் பாதங்கள் வலிக்கும். அல்லது ஊசி குத்துவது போன்ற உணர்வு இருக்கும். குதிகால் எலும்பிலிருந்து, "பிளான்டர் அப்போனீரோசிஸ்" எனும் திசுக்கொத்து, கால் கட்டை விரலை நோக்கிச் செல்கிறது. குதிகால் எலும்பும் இந்தத் திசுக்கொத்தும் இணையும் இடத்தில், ஒருவித அழற்சி ஏற்பட்டு, வீக்கம் உண்டாகும். அதனாலும் குதிகால் வலி ஏற்படும்.

- **தூக்க மாத்திரை சாப்பிடுவது நல்லதா?**

நன்றாகத் தூங்கி எழுவதற்கு, தினமும் தூக்க மாத்திரையைச் சாப்பிடும் பழக்கம் பலருக்கும் இருக்கிறது. ஆனால், அது ஒரு நிரந்தரத் தீர்வு அல்ல. மாத்திரையின் வீரியம் குறையக் குறைய, அதன் அளவை அதிகரிக்க வேண்டியிருக்கும். அதனால், உடலில் வேறு பல பாதிப்புகள் ஏற்படலாம். தூக்க மாத்திரையைச் சாப்பிட்டுப் பழகிவிட்டால், திடீரென அதை நிறுத்தவும் முடியாது. அப்படி நிறுத்தினால் தூக்கம் பாதிக்கப்படும்.

- **கண்கள் உப்பியிருந்தால் என்ன வியாதி?**

சிறுநீரகங்கள் உடலில் இருக்கும் கழிவுப் பொருட்களை அகற்றும் வேலையைச் செய்பவை. அவை சரிவர வேலை செய்யவில்லை என்றால், உடலில் சேரும் அசுத்த நீர் வெளியேற முடியாமல் போகும். இவை கண்களைச் சுற்றித் தேங்கி விடுவதால் கண்களைச் சுற்றி வீக்கம் போலத் தோன்றும்.

இது சிறுநீரகங்கள் மோசமாக இருப்பதையே குறிக்கிறது.

**டிப்ஸ்:** உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் உப்பின் அளவைக் குறைத்துக் கொள்ளவேண்டும். மேலும் அதிகப்படியான நீர் அருந்துவது சிறுநீரகங்கள் சரியாக வேலை செய்ய உதவும்.

## அழகுக் குறிப்பு

### வெள்ளரியின் தேவை

**வெள்ளரிக்காய் குறைந்த விலையில் எளிதாக கிடைக்கும் ஒருவகை சத்து நிறைந்த பொருள் ஆகும். உடலில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கு வெள்ளரிக்காய் ஒரு சிறந்த மருந்தாக திகழ்கிறது.**

✓ தினமும் வெள்ளரிக்காய் சாப்பிடுவது உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும்.

✓ மேலும் வெள்ளரிக்காயை நறுக்கி கருவளையம் உள்ள இடத்தில் வைத்து வந்தால் விரைவில் மறையும். மேலும் புகைப்பிடிப்பதால், மதுபானங்கள் குடிப்பது ஆகியவற்றால் உடலில் அதிகரிக்கும் தீமையை கட்டுபடுத்துவதில் வெள்ளரிக்கு தனி இடம் உண்டு.

✓ உங்களுடைய சருமம் பொலிவுடன் திகழ-வேண்டுமா? அதற்கும் வழி இருக்கிறது.

வெள்ளரிக்காயை நன்கு அரைத்து பேஸ்ட் செய்து, அதோடு ஒரு கரண்டி ஓட்ஸ், தயிர் மற்றும் தேன் விட்டு நன்கு கலக்கவும். பின் அதனை முகம் மற்றும் கழுத்து ஆகிய பகுதிகளில் தடவி 20 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து செய்வதால் உங்கள் சருமம் பொலிவு பெறுவது நிச்சயம்.

✓ மேலும் வெள்ளரிக்காயில் 90 சதவீதம் நீர் சத்துள்ளதால் உடலில் ஏற்படும் நீர் பற்றக்குறையை சமன் செய்கிறது.

✓ பற்களின் ஈறுகளை பாதுகாப்பதில் வெள்ளரி முக்கிய பங்காற்றுகிறது. வெள்ளரியில் உள்ள பைடோகெமிக்கல் வாயில் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பக்டீரியாக்களை அழித்துவிடும். மேலும் வெள்ளரி துண்டை வாயில் வைத்து சிறிது நேரம் மென்று துப்பினால் ஈறுகளில் ஏற்படும் நோயை குணப்படுத்தும்.

✓ முக்கியமாக புற்றுநோயை கட்டுப்படுத்தக்கூடிய பல பொருட்கள் வெள்ளரியில் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்து-ள்ளனர்.



**எனவே உங்களது தினசரி உணவில் வெள்ளரியை பயன்படுத்தி வந்தால், உடல் ஆரோக்கியத்துடன் மட்டு-மில்லாமல் புத்துணர்ச்சி-யோடும் இருக்கும்.**

## டிசைன்ஸ்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1970 தேர்தலின் பின் மீண்டும் ஒலிக்கும் பேரம் பேசும் அரசியல் கோசம்

"பேரம் பேசும் சக்தியாக உருவாக எமக்கு வாக்களியுங்கள்" என அண்மைக் காலமாக எல்லோரும் கேட்கும் வரம் இது. இதன் அர்த்தம் தெரிந்து கேட்கிறார்கள் போலத் தெரியவில்லை. அரியநேத்திரன் செல்வராசா போன்றோர் தான் கேட்டார்கள் என்றால் அனைவரும் இந்தப் பாட்டைப் பாடுகிறார்கள். பேரம் பேசும் சக்தியை கிழக்கு மாகாண சபையில் தமிழ்க் கூட்டமைப்புக்கு தமிழர்கள் வழங்கினார்கள். ஆனால் யாருடன் பேரம் பேசினார்கள்? தமிழரின் பக்கமா அல்லது சிங்களவரின் பக்கமா நிற்கப் போகின்றீர்கள் என்று கேட்ட போதும் கேட்காத போதும் சிங்களவரின் பக்கமே தான் நிற்கப் போவதாகத் தெளிவாக உறுதியாகத் தெரிவிப்பவர் ஹக்கீம். சமாதான காலத்தில் நடைபெற்ற திருமலை நகர சபைக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக அமைத்த சுயேட்சைக் குழுவில் ஹக்கீமும் இணைந்து கொண்டார். சிறிசேன போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சிக் கூட்டமைப்பும் இணைந்த அணியில் தானும் இணைந்து தமிழருக்கு எதிரான செயற்பாட்டில் தானும் எவ்விதத்திலும் குறைந்தவர் அல்ல என நீரூபித்தார் அவர். ஆனால் பரிதாபம் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஒரு முஸ்லிமும் சுதந்திரக் கட்சி சார்பில் ஒருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு முஸ்லிமுமே தெரிவானார்கள். ஹக்கீமின் கட்சியில் எவருமே தெரிவாகவில்லை. இவருடன் மாகாண சபைத் தேர்தலின் பின் கூட்டுச் சேரத் துடித்தார் சம்பந்தன் ஐயா.

இவர்களுடன் ஹக்கீம் பேசியதே, எப்போதும் தான் சிங்களவரின் பக்கம் தான் என்பதை மீண்டும் நிரூபிக்கவே. இல்லாவிடில் முதலமைச்சர் பதவியை தங்கத் தாம்பளத்தில் தருகிறோம் என்ற போதும் இவர்களை உதறிவிட்டு மகிந்தவின் கரத்தைப் பற்றுவாரா? இத்தனைக்கும் மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரத்தில் மகிந்தவைக் கடுமையாகச் சாடியவர் அவர். மகிந்தவின் அமைச்சரவையில் சேர்ந்ததை "விளக்கைப் பிடித்துக் கொண்டே கிணற்றில் குதித்தோம்" என்று முஸ்லிம் மக்கள் மத்தியில் கூறியவர். மகிந்தவின் அமைச்சரவையில் இறுதிவரை இருந்து சகல சௌபாக்கியங்களையும் அனுபவித்தவர். தபால் மூல வாக்களிப்பு முடியும் வரை மகிந்தவுடனேயே இருந்தவர். மகிந்தவின் பந்தியின் இடையில் பலர் இலையைத் தூக்கிக் கொண்டு போகையில் கடைசிப் பாயாசம் வரை காத்திருந்

து



விருந்துண்டவர் ஹக்கீம். இவரை நம்பி மாகாண சபையில் ஆட்சியை மாற்ற முனைந்த போது நன்றாகவே கூட்டமைப்புக்குத் தண்ணி காட்டியவர். மாகாண காணி அமைச்சைத் தருவதாக ஒப்புக் கொண்டுவிட்டு பின்னர் காணி அமைச்சு எப்போதுமே சிங்களவர் கையில் இருக்க வேண்டும் என்று சிங்களத் தரப்பு உறுதியாகத் தெரிவித்ததும் இரவோடி-ரவாக தனது முடிவை மாற்றி சிங்களவரைப் பதவியேற்க வைத்தவர்.

இந்த அவமானத்தின் பின் இரா.துரைரத்தினத்தால் "வெங்காய அமைச்சு" என்று வர்ணிக்கப்படும் விவசாய அமைச்சை துரைராஜ-சிங்கத்திடமும் கல்வி அமைச்சை சிங்காரவேல் தண்டாயுதபாணியிடமும் வழங்கினார்கள். இந்த லட்சணத்தில் இதை ராஜதந்திரம் என்றும் வர்ணித்தார்கள் கூட்டமைப்பினர். பிள்ளையானின் முயற்சியை முறியடித்து விட்டதாக சட்டைக் கொலரை மேலே இழுத்துவிட்டுக் கொண்டார்கள்.

"பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் யாராவது இருந்தால் என்னிடம் முறையிடுங்கள்" என்று சொன்னார் கிழக்கின் முதல்வர். அப்போதாவது இவர்களுக்கு சூடு சுரணை வந்ததா? "தண்டாயுதபாணி என்ன கல்வி அமைச்சில் ஒரு பியோனா" என்று கூட்டமைப்பின் சார்பில் எவராவது முணு-முணுத்தார்களா? திருவிளையாடலில் தருமி வேடம் பூண்ட நாகேஷ் "எவ்வளவு பிழையிருக்கிறதோ அதற்கேற்றாற் போல் சன்மானத்தைக் குறைத்துக் கொண்டு தாருங்கள்" என்று கேட்டது போல் கல்வி அமைச்சிலும் நீங்கள் எவ்வளவு அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டு மிச்சத்தைத் தாருங்கள் என்ற பாணியில் நடந்து கொண்டார்கள். கை கட்டி வாய் பொத்தி சேவகம் செய்வது என்பது இது தானோ?

இணைந்து ஆட்சியமைக்கப் புறப்படும் போதே முஸ்லிம் காங்கிரஸ் கடுமையாக எதிர்த்து வரும் கல்முனைக்கான தமிழ்ப் பிரதேச செயலகம் பற்றி முடிவெடுத்தார்-களா? பிள்ளையானின் ஆட்சிக் காலத்தில் பொலனறுவைச் சிங்களவருக்கு வழங்கப்-பட்ட மேய்ச்சல் தரைக் காணிகளை மீளப்பெறுவதற்கான நடவடிக்கை எடுப்பது பற்றி உடன்பாடு கண்டார்களா? எதுவுமே இல்லை.

வடமாகாண சபை இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே என்று தீர்மானம் கொண்டுவந்தது. இதை ஒப்புக்கொள்ள முஸ்லிம் காங்கிரஸ் முன்வருமா? மகிந்தவுடன் கூட்டுச் சேர்ந்ததும் முதல் வேலையாக மாகாண சபையின் சில அதிகாரங்களைப் பறிக்கும் திவிநெகும சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்கி தாம் எப்போதுமே சிங்களவரின் பக்கமே என நிருபித்தது அக கட

சி. ஒழுங்காக ஹக்கீமுடனேயே பேரம் பேசி தமிழருக்குச் சாதகமான விடயங்களை நிறைவேற்றத் தெரியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்களவருடன் பேரம் பேசப் போகிறதாம். கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானத்தில் ஏறி வைகுண்டம் காட்டுவேன் என்றானாம்.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் அங்கஜனின் ஆதரவாளர் சிலர் ஓட்டோவில் ஏறி மகிந்தவுக்காகவும் அங்கஜனுக்காகவும் பிரச்சாரம் செய்தார்கள். "ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்று சொல்ல நினைத்து "ஆண்ட தமிழினம் மீண்டுமொரு ஆள நினைப்பதில் என்ன குறை. மகிந்தராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள் ஜனாதிபதியாக மீண்டும் மகிந்தவை ஆக்குவதன் மூலம் பேரம் பேசும் சக்தியாக அண்ணன் அங்கஜனை உருவாக்குவோம்" என்று ஒரு பெண் குரல் ஒலித்தது. அங்கஜனை பேரம் பேசும் சக்தியாக மாற்றுகிறார்களோ இல்லையோ மகிந்தவைத் தமிழனாகக் காட்டிவிட்டார்கள்.

தற்போதைய தேர்தலில் தீவுப் பகுதிக்குப் பரப்புரைக்குச் சென்ற டக்ளஸ் "எமக்கு அரசியற் பலத்தைத் தாருங்கள். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்போம்" என்றார். இவர் 1994 இலிருந்து "மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி எக்காலத்திலும் பிரிக்கப்பட முடியாத வடகிழக்கு இணைப்பு" என்ற கோஷத்துடன் நடைமுறையில் தீவகத்தில் தனியாட்சி என்ற எழுதாத கோஷத்தையும் நடைமுறையில் வைத்திருந்தார். இத்தனை வருடமும் தீவகத்தில் ஆட்சி புரிந்தவர் எல்லாப் பிரச்சினையையும் தீர்த்திருக்கலாம் தானே. 9 நாடாளுமன்ற உறுப்பினர் பலம் இருந்த போது செய்யாததையா ஓரிரு உறுப்பினர்களின் பலத்துடன் செய்யப் போகிறார். தீவக மக்களுடன் அவர் பேசும் பேரம் சுத்தமான ஏமாற்று.

இதுபோலவே கூட்டமைப்பினரின் பேரம் பேசும் சக்தி என்பதும் ஏமாற்றுத் தான். பிரதமர் பதவியைக் குறிவைத்திருப்பவர்கள் இருவர். ஒருவர் ரணில் மற்றவர் மகிந்த இருவருடனும் பேசப் போகின்றோம் என்றால் மகிந்தவுடன் ஆட்சி அமைக்கவும் நாம் தயார் என்பது தான் அர்த்தம். இப்போது சிறிசேன எம்மை ஏமாற்றி-விட்டார் என்று பகிரங்கமாகக் கூறுபவர்கள் நாளை மகிந்த எம்மை ஏமாற்றிப் போட்டாரே எனக் கூறவும் தயங்க மாட்டார்கள். நடக்கப் போவது ஒரே ஒரு பேரம் தான் சுமந்திரனுக்கான அமைச்சுப் பதவி பற்றியதே அது. சுமந்திரன் தேர்தலில் வெல்வது நடைமுறையில் சாத்திய-மில்லாதது. தேசியப் பட்டியல் என்றால் அது சம்பந்தன் ஐயாவுக்குத் தான் என்ற நிலைமை உள்ளது போல இருக்கிறது. திருமலை தேர்தல் களம் அவ்வாறாகத் தான் உள்ளது. இதனால் மூதூர் முஸ்லிம்களுடன் ஏதோ ஒரு பேரத்துக்கோ இணக்கத்துக்கோ போக வேண்டிய நிலை. முஸ்லிம் காங்கிரஸ் மீதான அதிருப்தி வாக்குகளாகத் தமக்குக் கிடைக்கும் என சம்பந்தன் ஐயா எதிர்பார்க்கிறார். தேர்தல் நெருங்க நெருங்க இன உணர்வுதான் முஸ்லிம்களிடம் பெரும்பாலும் எதிரொலிக்கும். அது இவருக்குச் சாதகமாக அமையாது.

ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று கூறிவந்ததுடன் புலிகள் இல்லாத தமிழ்த் தேசியம் என்ற கொள்கையின் அடிப்படையில் போட்டியிடும் சம்பந்தன் ஐயாவுக்கு போராட்டத்தை உணர்வு ரீதியாக நேசித்தவர்களின் வாக்கு எந்தளவில் கிடைக்கும் என்பதும் கேள்விக்குறியே. புலிகளை முற்றாக நிராகரித்த அவர் முன்னாலேயே மருதனார்மடத்தில் தங்கள் நெஞ்சில் என்றும் பிரபாகரனே இருக்கிறார் என்று மக்கள் காட்டிவிட்டார்கள். ஆக மொத்தத்தில் பிரபாகரன் பெயரைச் சொல்லாமல் வாக்குக் கேட்க வராதீர்கள் என்று முகத்தில் அறைந்தாற் போலச் சொல்லி விட்டார்கள்.

1970 ஆம் ஆண்டு காலத்தில் அதாவது சம்பந்தன் ஐயா அரசியலுக்கு வர முன்னரே பேரம் பேசுவது சாத்தியமற்றது என்பது உணரவைக்கப்-பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சி கூட்டணியும் கிட்டத்தட்ட சமநிலையி-லேயே வரும். நாம் பேரம் பேசும் சக்தியாகத் திகழ்வோம் என தமிழரசுக் கட்சி பரப்புரை செய்தது. ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சுதந்திரக் கட்சி கூட்டணி ஆட்சிபீடம் ஏறியதும் "தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என தந்தை செல்வா கூறினார். இதுதான் வரலாறு. இது மீண்டும் திரும்புகிறது.

மகிந்த ரணில் மட்டுமல்ல ஜே.வி.பி உட்பட அனைத்துச் சிங்களத் தலைமைகளும் சமஷ்டிக்கு எதிரான தமது நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவித்துள்ள நிலையில் பேரம் பேசுதல் சாத்தியமற்றது. ஏனெனில் மட்டுமட்டாக வந்தால் இரு தரப்பும் மறுதரப்பில் யாரையாவது எந்த விலை கொடுத்தாவது வாங்கி ஆட்சியமைக்கத் தயாராக இருப்பார்களே அன்றி

## தமிழ் மக்களின் மறதி என்பதையே மூலதனமாக வைத்து அரசியல் நடத்தத் தீர்மானித்துள்ளார் ச்பந்தன் ஐயா

இவர்களுடன் பேரம் பேசுவது சாத்திய-மற்றது. கிழக்கு மாகாணத்தில் இவர்களின் பேரம் பேசும் சீத்துவம் நாறிப்போய்க் கிடக்கையில் தமிழ் மக்களின் மறதி என்பதையே மூலதனமாக வைத்து அரசியல் நடத்தத் தீர்மானித்துள்ளார் சம்பந்தன் ஐயா.

தந்தை செல்வா வழியில் நடப்போம் என்று கூறுபவர்கள் அவரது தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற கூற்றையே கூறப்போகி-றார்கள். பலமாக இருந்த போதும் பலவீனமாக இருந்த போதும் ஒரே நிலைப்பாட்டுடன் கொள்கையில் உறுதியாக நிற்பவர்கள் யார் எனச் சிந்தித்து வாக்களிப்பது தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமை. மருதனார்-மடத்திலும் வல்வையிலும் நடந்த தேர்தல் விஞ்ஞாபன வெளியிடுகளில் எதில் கூடுதலான மக்கள் கலந்து கொண்டார்கள் என்று சீர்தூக்கிப்

-- பகலவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒருவர் புள்ளி A யிலிருந்து 50மீ கிழக்கு நோக்கிச் சென்று புள்ளி B யிற்கு வருகிறார். அவ்விடத்திலிருந்து 50மீ தெற்கு நோக்கிச் சென்று புள்ளி C யிற்கு வருகிறார். A யிலிருந்து Cயின் திசைகோள் யாது?

02. ஒரு குறித்த கம்பனியில் ரூ7200 ஐ முதலீடு செய்து பெயர் மாத்திரையான பெறுமானம் ரூ8000 ஆன ரூபா 10 பங்குகளைக் கொள்ளவு செய்யலாம். எனின், ஒரு பங்கின் சந்தைப் பெறுமானம் யாது?

03. $x=2, y=2$ எனும் நேர்கோடுகள் இடைவெட்டும் புள்ளியின் ஆள்கூறு யாது?

04. ஒரு அடியிலான இரு எண்களும் அவற்றின் கூட்டுத்தொகையும் இங்கு காட்டப்பட்டுள்ளன. இவ்வெண்களின் அடி யாது? $12_x+12_x=30_x$

05. குறித்த ஒரு தொகைப் பணத்தை P யிற்கும் Q இற்குமிடையே 4 : 9 எனும் விகிதத்தில் பிரித்த போது Q இற்கு ரூ180 கிடைத்தது. எனின், P இற்கு கிடைத்த தொகையை காண்க

**பகுதி 02**

01. கூட்டல்விருத்தி ஒன்றிலும் பெருக்கல் விருத்தி ஒன்றிலும் 13 உறுப்புக்கள் வீதம் இருக்கின்றன. கூட்டல்விருத்தியின் முதல் உறுப்பு 10உம், பெருக்கல் விருத்தியின் முதல் உறுப்பு 1/8 உம் ஆகும். கூட்டல் விருத்தியின் பொது வித்தியாசம் d பெருக்கல் விருத்தியின் பொது விகிதம் r எனின்,
   1. கூட்டல் விருத்தியின் நடுவிலுள்ள உறுப்பை dயிலும், பெருக்கல் விருத்தியின் நடுவில் உள்ள உறுப்பை r இலும் தருக.
   2. பொது வித்தியாசம் ஆனது பொது விகிதத்திலும் 1 இனால் கூடியும் இரு விருத்திகளினதும் நடுஉறுப்புக்கள் சமனாகவும் இருந்தால் rல் சமன்பாடு எழுதுக
   3. $r = 2$ என்பது இச்சமன்பாட்டை திருப்தி செய்கிறது எனக் காட்டி இப்பெறுமானத்தை உபயோகித்து ஒவ்வொரு விருத்தியிலும் 5ம் உறுப்பைக் காண்க.

## பாடம் : வரலாறு

01. வெவ்வேறு ஒளிச் செல்வாக்குகளுக்கு உட்பட்ட போதிலும் இலங்கைக்கே உரித்தான சமூக கலாசார கோலமொன்றை உருவாக்குவது தொடர்பில் செல்வாக்கு செலுத்திய காரணி?
   1. தீவாக இருத்தல்
   2. இந்தியாவிற்கு அருகில் இருத்தல்
   3. இந்து சமுத்திரத்தின் நடுவில் அமைந்திருத்தல்.
   4. கிழக்கு - மேற்கு கப்பல் பாதையில் அமைந்திருத்தல்

02. கால்வாயின் ஊடாக நீண்ட தூரத்திற்கு நீரை கொண்டு செல்வதற்காக பழங்காலத்தவர்கள் போன்றே தற்கால நீர்ப்பாசன தொழிநுட்பவியலாளர்களும் அடிப்படையாகக் கொண்ட ஆறு?
   1. மாணிக்க கங்கை 2. கல்ஓயா 3. மகாவலிகங்கை 4. வளவ கங்கை

03. வரலாற்று ஆதாரம் என்ற வகையில் இலங்கை வரலாற்றை படித்துக் கொள்வதிற் சாசனங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.
மேல்வருவனவற்றுள் இக்கூற்றுடன் பொருந்தாதது எது?
   1. கல்வெட்டுக்கள் மூலம் இலங்கையின் தொடர்ச்சியான அரசியல் வரலாற்றை உருவாக்கலாம்
   2. இலக்கிய மூலாதாரங்களிற் காணப்படும் செய்திகள் சானங்கள் மூலம் உறுதியாகின்றன.
   3. சாசனங்கள் குறிப்பிடும் விபரங்கள் அவை எழுதப்பட்ட காலத்திற்குரியவை
   4. வாணிபம், நிதி பரிபாலனை நடவடிக்கைகள் என்பன பற்றிய செய்திகள் சாசனங்களிற் காணப்படும்.

04. மேல்வருவனவற்றில் இந்தியரின் முஸ்லிம் ஆதிக்கம் ஏற்படுவதற்கு தீர்க்கமான படையெடுப்பை மேற்கொண்டவர்?
   1. முகம்மது வின் காசிம்
   2. கசினி முகம்மது
   3. கூர் முகம்மது
   4. பாபர்

05. ராஜகஹ நகரிற்குப் பின்னர் மகத நாட்டின் தலைநகர் யாது?
   1. காசி 2. பாட்டாளிபுத்திரம் 3. கிரிவிருஜம் 4. இந்திரபிரஸ்தம்

## பாடம் : விஞ்ஞானம்

01. ஒளித்தொகுப்பு, சுவாசம் என்பன பற்றிய மூன்று கூற்றுக்கள் கீழே காணப்படுகின்றன.
   a ஒளித்தொகுப்பு தாக்கத்தின் பின் தாக்கம் சுவாசமாகும்.
   b. ஒளித்தொகுப்பு சக்தியை உற்பத்தி செய்யும் அதேவேளை சுவாசமும் சக்தியை உற்பத்தி செய்கின்றது.
   c. பச்சையவுருவங்கள் உள்ள அங்கிகள் ஒளித்தொகுப்பை செய்யும் அதேவேளை எல்லா அங்கிகளும் சுவாசத்தைச் செய்கின்றன.
இக்கூற்றுக்களுள் சரியானது அல்லது சரியானவை?
   1. a மாத்திரம்
   2. a, b மாத்திரம்
   3. a, c மாத்திரம்
   4. b, c மாத்திரம்

02. $0.5 moldm^{-3}$ செறிவுடைய NaOH இன் 600ml கரைசலின் செறிவை $0.3 moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?
   1. 200ml 2. 300ml 3. 400ml 4. 600ml

03. காரியம் ரைம் ஆகிய காபன்கள்
   1. சமதானிகளாகும்
   2. பிறதிருப்ப வடிவங்களாகும்
   3. சேர்வைகளாகும்
   4. வேறுபட்ட பௌதீக நிலைகளாகும்

04. கலப்பிரிவின் போது கருவும் குழிய முதலுருவும் இரண்டாகப் பிரிந்து மகட் கலங்கள் உருவாகின்றன. இலையுருவப் பிரிவின் போது மகட் கலத்திற்குத் தாய்க் கலத்திலுள்ள
   1. நிறமூர்த்த எண்ணிக்கைக்குச் சமனான நிறமூர்த்த எண்ணிக்கை உரியதாகும்.
   2. அமைப்பொத்த நிறமூர்த்த சோடியிலிருந்து ஒரு நிறமூர்த்த வீதம் உரியதாகும்.
   3. நிறமூர்த்த எண்ணிக்கையின் இரு மடங்கு உரியதாகும்
   4. நிறமூர்த்த எண்ணிக்கையில் அரைவாசி உரியதாகும்.

05. கேட்டல் உணர்ச்சிக்குரிய அங்கமாக காது இருக்கின்ற போதிலும் உடலின் சமனிலியை பாதுகாப்பதற்கும் அது முக்கியத்துவம் வாய்ந்தது. அத்தொழிலை நிறைவேற்றுவது
   1. புறச்செவிப்பறை மென்சவ்வு 2. நடுச்செவியின் மூன்று சிற்றென்புகள்
   3. அகச் செவியின் அரைவட்ட குழாய்ப் பகுதி
   4. செவியை தொண்டையுடன் இணைக்கும் ஊத்தேக்கியாவின் குழாய்

06. நீரை வெப்பமாக்கும் மின்கேத்தலில் உட்பகுதியில் வெண்ணிறத் திண்மப் பொருள் படிந்திருப்பதைக் கண்ட மாணவன் ஒருவன் பின்வரும் கருத்தை தெரிவித்தான்.
   அ. இங்கு வன்னீர் வெப்பமாக்கப்பட்டுள்ளது.
   ஆ. இந்நீர் தற்காலிக வன்மையைக் கொண்டுள்ளது.
   இ. இந்நீரில் கல்சியம் ஐதரசன் காபனேற்று அல்லது மக்னீசியம் ஐதரசன் காபனேற்று உப்பு கரைந்துள்ளது.
இம் மாணவனின் அவதானிப்புக்களுக்கேற்ப அவனின் கூற்றுக்களில் உண்மையானவை?
   1. அ, ஆ 2. ஆ, இ 3. அ, இ 4. அ, ஆ, இ எல்லாம்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

மரபுத்தொடர்கள்.

சொற்கள் சேர்ந்து நின்று தமக்குரிய நேர்பொருளை உணர்த்தாமல் குறிப்பான வேறு ஒரு பொருளை உணர்த்திவருவது இலக்கணத்தொடர் எனப்படும். அத்தகைய குறிப்புப் பொருள் பரம்பரை பரம்பரையாக மக்கள் மத்தியில் வழங்கி வருவதலால் அதனை மரபுத்தொடர் என்றும் கூறுவதும் வழக்கம்.

70.வாயில் மண் போடுதல் - கேடு விளைவித்தல்
71.வாலாட்டுதல் - சேட்டை பண்ணுதல்
72.வால் பிடித்தல் - சலுகை பெறும் எண்ணத்துடன் பின்னால் திரிதல்
73.வால் காட்டுதல் - முகமன் கூறித் தூண்டி விடுதல்
74.வாலைக் கீழே போடுதல் - பணிந்து போதல்
75.அறை கூவுதல் - போருக்கு அழைத்தல்
76.அரை மனிதன் - மதிப்பில்லாதவன்
77.ஆறப் போடுதல் - காலந்தள்ளுதல்
78.இடிந்துரைத்தல் - வற்புறுத்திக் கூறுதல்
79.இடங்கொடுத்தல் - கண்டிப்பின்றிநடத்தல்
80.ஈரல் கருகுதல் - உடல் மெலிதல்
81.உருக்குலைதல் - உடல் மெலிதல்
82.உச்சி குளிர்தல் - மிக மகிழ்தல்
83.உலை வைத்தல் - அழிவு வருவித்தல்
84.எடுத்தெறிதல் - அலட்சியம் பண்ணுதல்
85.ஒத்தப் பாடுதல் - ஆதரவு கொடுத்தல்
86.ஓடெடுத்தல் - பிச்சை எடுத்தல்
87.ஒடியாடிப்பார்த்தல் - முடிவு காணுதல்
88.கட்டியடித்தல் - வலிந்து சுமத்தல்
89.கருவறுத்தல் - முற்றாய் அழித்தல்
90.கதைக் கட்டுதல் - பொய்ச் செய்தியை பரப்புதல்
91.கரைத்துக் குடித்தல் - முற்றாய் கற்றல்
92.கசக்கிப் பிழிதல் - வருத்தி வேலை வாங்குதல்
93.கடன் கழித்தல் - மனமின்றி செய்தல்
94.கல்லில் நாருரித்தல் - இல்லாத பொருளை பெறமுயல்தல்



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**Some words in the following passage are incorrect. They are underlined. Write the correct form of the word in the space provided..**

Many companies advertise jobs in the 'job vacancies' selection of newspapers. Typically a job advertise includes a brief ouline of the responsible of the post and the qualifications expected.

While newspapers are still a value source of getting in-form about job vacancies 'could calling' is another source a person interested in working in an organize can explore. This is the process of calling over the phone. e-mailing or person visiting a company, seeking a job.

(1)........................ (2)............................ (3)............................
(4)........................ (5)............................ (6)............................

***Complete answers to questions.***

06. Is Jim watching TV? Yes, he ................ TV all evening.
07. Do you watch TV a lot? No, I ............................ TV for a long time.
08. Have you got a headache? Yes, I ........................ a headache all morning.
09. George is never ill, is he? No, he ...................... ill since I've known him.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 32

01. ஒரு வருடத்தில் இரு தடவைகள் பூத்துக் காய்க்கும் தாவரம் எது?
    i. ரம்புட்டான் ii. மரமுந்திரிகை iii. மாமரம் iv. இறப்பர்

02. நாய் மூலம் பரவும் நோய்?
    I. பிளேக் ii. நீர்வெறுப்புநோய் iii. சிக்கன்குன்யா iv. சிக்கன்குன்யா

03. யாப்பகூவ வணக்கஸ்தலம் அமைந்துள்ள இடம் எது?
    i. அநுராதபுரம் ii. குருநாகல் iii. பொலன்னறுவை iv. கம்பளை

04. வெடித்துப்பரவும் வித்து சோடியானது
    i. காசித்தும்பை, பொன்னாவரை ii. அச்சி – எண்ணெய் iii. தணக்கு – வேங்கை iv. நாயுருவி - முக்கிரைச்சி

05. வீட்டில் குடிப்பதற்கான நீரை நிரப்பி வைக்கக்கூடிய பாத்திரம் அல்லாதது?
    i. கூசா ii. குடம் iii. செம்பு iv. பேசன்

06. மருந்தாகப் பயன்படும் தாவரங்களில் முக்கியமானது?
    i. சணல் ii. கடுக்காய் iii. மரமுந்திரிகை iv. கொய்யா


07. தேசப்படத்தில் பெருந்தொருக்களை குறிக்க பயன்படும் நிறம்
    i. கறுப்பு ii. நீலம் iii. சிவப்பு iv. கபிலம்

08. அத்தாங்கு உபகரணம் பயன்படுவது
    i. மீன்பிடிக்க ii. நீரை அள்ள iii. தீங்தைபூச iv. மண்அகழ

09. உணவுக்குப் பயன்படும் காய்வகை
    i. கரட் ii. பயிற்றங்காய் iii. கத்தரிக்காய் iv. சிறகவனா

10. இலங்கைக்கு அருகே அமைந்திராத ஒரு நாடு
    i. இந்தியா ii. பூட்டான் iii. அவுஸ்ரேலியா iv. மாலைதீவு

**பகுதி – 02**





01. உருவின் சுற்றளவு யாது?
    ......................................................

02. ஓர் உறையில் 8 மின்கலங்களை இடலாம். இவ்வாறான 816 மின்கலங்களை இடுவதற்கு எத்தனை உறைகள் தேவை?
    ......................................................

03. இந்து அராபிய எண்ணில் விடை தருக? ix-ix+ix = ..............................

04. கருத்தினை எழுதுக
    i. காது குத்துதல் : ..............................
    ii. அறக்கப்பறக்க : ..............................

05. படத்திற்கு பொருத்தமான ஆங்கிலப் பெயரை எழுதுக

 ....................  ..............................

06. பிளாத்திக்குப் பெட்டியொன்றினுள் 2Kg இடலாம் அதன் படி, ஒன்றின் நிறை 800g ஆன ஒரேயளவான 8சீனிப் பைக்கற்றுக்களை இடுவதற்கு தேவைப்படும் பெட்டிகள்? ..........................

07. 1 வேளைக்கு 2வீதம் நாளொன்றுக்கு 3 வேளைகள் உட்கொள்வதற்கு 48 மருந்து வில்லைகள் நோயாளி ஒருவருக்கு வழங்கப்பட்டது அதன் படி வைத்தியரினால் எத்தனைநாட்களுக்கு மருந்து வழங்கப்பட்டது?
    ......................................................

### சென்றவார விடைகள்

01. 3 02. 4 03. 3 04. 3 05. 3 06. 4 07. 4 08. 1 09. 4 10. 1
01. ரூ 410 02. 14:15 03. 2011 ஜனவரி 01
04. ஐ. நாங்கள் சாப்பிடுவோம் ஐை. எங்களால் பார்க்கமுடியும்
05. ஐ. வட்டமாக ஓடுங்கள் ஐை. மஞ்சள் நிறம்
06. ரூ 22.50



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு






## ஏமாற்றுதல் தவறு

ஒருவன் தனது கிணற்றை ஒரு விவசாயிக்கு விற்றான். அப்பாடி ஒரு வழியாக என் வயலுக்கு தண்ணீர் இறைக்கும் பிரச்சினை இனி ஒரு போதும் இல்லை என எண்ணிக் கொண்டார்.

வாங்கிய விவசாயி அடுத்த நாள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க ஆவலுடன் கிணற்றுக்கு வந்தான். அப்போது விற்றவன் அங்கே நின்று கொண்டிருந்தான். விவசாயியை தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்தான். விவசாயிக்குக் கோபம் வந்தது. "எனக்குக் கிணற்றை விற்று விட்டு அதிலிருந்து தண்ணீர் எடுக்க விடாமல் செய்கிறாயே?" என்று விற்றவனை கோபத்துடன் கேட்டான்.

விற்றவன் "ஐயா! உமக்கு நான் கிணற்றை மட்டும்தான் விற்றேன். அதிலிருக்கும் தண்ணீரை அல்லவே!!" என்று தர்க்கம் செய்தான். விவசாயி குழப்பத்துடனும் கோபத்துடனும் காஜியிடம் (நீதிபதியிடம்) சென்று முறையிட்டான்.

நீதிபதி இருவரையும் அழைத்து இருவர் பக்கத்து நியாயத்தையும் விசாரித்தார். பின்னர் கிணற்றை விற்றவனிடம் "நீ கிணற்றை விற்றுவிட்ட படியால் அது உன்னுடையதல்ல. கிணற்றினுள் இருப்பது உன்னுடைய தண்ணீர் என்று நீ கூறுகின்றாய். விற்ற அக்கிணற்றில் உனது தண்ணீரை இன்னமும் வைத்திருப்பது தவறு. உனக்கு அதில்தான் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டுமென்றால் விவசாயிக்கு அதற்கான வாடகையை தினமும் கொடுத்து விடு. இல்லையென்றால் கிணற்றிலிருந்து உனது தண்ணீரை எடுத்துக் கொண்டு உடனே வெளியேறு" என்று தீர்ப்புக் கூறினார்.



விற்றவன் தலையைக் குனிந்து கொண்டே, தான் செய்த தவறை உணர்ந்து தனது தவறுக்கு மன்னிப்புக் கோரி விட்டு, விவசாயியை கிணற்றின் முழுப் பலனையும் அனுபவிக்கச் சொல்லிவிட்டு, நீதிபதியிடமும் மன்னிப்புக் கோரினான். பின் அங்கிருந்து சென்று விட்டான். விவசாயியோ மிகுந்த சந்தோசத்துடன் வீடு திரும்பினான்.

# பொது அறிவு போட்டி

**சிந்திக்க .. ..**
மகான் போல் வாழ வேண்டும் என்பதில்லை: மாறாக மனசாட்சிப்படி வாழ்ந்தாலே போதும்....

இங்கு தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை கீழே தரப்பட்டுள்ள இடத்தில் நிரப்பி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். முடிவுத் திகதி : 25-08-2015

*விடையை அனுப்ப வேண்டிய முகவரி :* மலைமுரசு. இல - 159ஏ. கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

16. 2014இல் நேபாளத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு 3 ஒப்பந்தங்களை கைச்சாத்திட்ட நாடு எது?

17. பெண்களின் பாதுகாப்பிற்கென புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

18. இந்தியாவின் முன்னணி மென்பொருள் ஏற்றுமதி நிறுவனம் எது?

19. அமெரிக்காவின் மிக உயரமான கட்டிடம் எது?

20. இலங்கை மத்திய வங்கியின் முதலாவது ஆளுநர் யார்?

21. 2014ஆம் ஆண்டு ஸ்மார்ட் போன் விற்பனையில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

22. கிழக்கு மாகாணத்தில் நெசவுக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்ற இடம்?

23. மைக்ரோசொப்ட் நிறுனத்தின் தலைவர் யார்?

24. ஐக்கிய நாடுகள் சபையானது தானிய ஆண்டாக பிரகடனப்படுத்திய ஆண்டு எது?

25. நொக்கியா .'.போன் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

26. 2015ம் ஆண்டு உலக வர்த்தக கண்காட்சி எங்கே நடைபெறவுள்ளது?

27. மனிதனின் மூளையின் எடை எவ்வளவு?

- Vkhw;wp tho;tJ rpwe;jjy;y. Neu;ikahf tho;tJ rpwe;jJ -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுந்திரைப்பட வெளியீடு

இந்திய திரைத்துறை அளவிற்கு எமது இலங்கை திரைத்துறையும் வளர்ந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் திருமலையில் வளர்ந்து வரும் இயக்குனரான எஸ்.லிங்கேஸ்வர் (லீ) அவர்களின் படைப்பில் உருவான "என்னம்மா நீங்க இப்படி பண்றீங்களேம்மா" (ENIP) என்னும் குறுந்திரைப்படம் இன்று இணைய தளத்தில் ளியாகி உள்ளது.

இவர்களின் முயற்சியில் அடுத்த படைப்பாக "வருத்தப்படாத வாலிபர் சங்க உறுப்பினர்" (VVSU) என்னும் விரைவில் வெளியாக உள்ளது.

பார்க்க விரும்பியோர் youtube இற்குச் சென்று ennama neenga ippadi panreengalema என டைப் செய்து பார்க்கலாம்.







# மாதுமை அம்பாள் ஆடிப்பூர மகோற்சவம்

ஈழத்தில் வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கோணேஸ்வரத்தில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் அருள் மிகு கோணேஸ்வரப்பெருமானின் தேவியார் மாதுமை அம்பாளின் ஆடிப்பூர பிரமோற்சவம் 07.08.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற உள்ளது.


15.08.2015 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இரதோற்சவமும் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு பாபநாச தீர்த்தக் கிணற்றில் தீர்த்ததோற்சவமும் இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து 17.08.2015 திங்கட்கிழமை திருகோணமலை கோணேஸ்வர ஆலய தொண்டர் சபையின் ஏற்பாட்டில் திருப்பூங்காவனம் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

# மாமாங்கேஸ்வரர் திருவிழா

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் இரண்டாம் நாள் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

நீர்பாசன திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த திருவிழா நடைபெற்றதுடன் ஆயிரக்கணக்கான அடியார்கள் இந்த உற்சவத்தில் கலந்துகொண்டனர்.




# இரத்ததானம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளையும், அதன் மொறவெவ பிரிவும், இளைஞர் பிரிவும் இணைந்து மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஹதிவுல்வெவ அரசினர் வைத்தியசாலை மண்டபத்தில் இரத்ததான முகாம் ஒன்றினை வெற்றிகரமாக நடாத்தினர்.

மொறவெவ பொலிஸ் நிலையப் கால்துறையினரும், மொறவெவ சிவில் பாதுகாப்புத் திணைக்கள ஊழியர்களும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளைத் தொண்டர்களும், பொதுமக்களும் பெருவாரியாகக் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.







பௌர்ணமி நிகழ்வின் தொடர் அமர்வு
"மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்"
மட்/ மாநகர சபையின் அனுசரணையுடன்
மகுடம் கலை இலக்கிய வட்டம் நடாத்தும்

**மகுடம்**
மூன்றாவது ஆண்டுமலர் (பிரமிள் சிறப்பிதழ்)

**வெளியீட்டு விழா**

காலம்
09.08.2015 ஞாயிறு
மாலை 4.15
இடம்
மட்/ பொதுநூலக கேட்போர் கூடம்

**தலைமை**
பேராசிரியர் சி.மௌனகுரு
(ஆலோசகர் - மகுடம் கலை இலக்கிய வட்டம்)

**பிரதம விருந்தினர்**
திரு.க.மகேசன்
(மேலதிக செயலாளர் - கொள்கை திட்டமிடல் பொருளாதார விவகார சிறுவர், இளைஞர், கலாசார அலுவல்கள் அமைச்சு)

**முன்னிலை**
திரு.மா. உதயகுமார்
(ஆணையாளர் - மட்/ மாநகர சபை)

**சிறப்புரை**
பேராசிரியர் செ.யோகராசா
(ஆலோசகர்- மகுடம் கலை இலக்கிய வட்டம்)

**வெளியீட்டு நிகழ்வு**

மங்கல விளக்கேற்றல்

வரவேற்புரை : கவிஞர் அ.ச. பாய்வா
(செயலாளர் - மகுடம் கலை இலக்கிய வட்டம்)

தலைமையுரை : பேராசிரியர் சி.மௌனகுரு

இதழ்வெளியீடு : முதல் பிரதி பெறுபவர்
திரு. வி. ரஞ்சிதமூர்த்தி
(இயக்குனர் நாயகம் - மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவாய சம்மேளனம் பொருளாளர் - மட்/ தமிழ்ச்சங்கம்)

அறிமுகஉரை : திரு.சு.சிவரெத்தினம்
(விரிவுரையாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம்)

சிறப்புரை : "பிரமிள் - நவீன தமிழ் இலக்கியத்தின் மாமேதை"
பேராசிரியர் செ. யோகராசா

பிரதம விருந்தினர் உரை: திரு.க. மகேசன்
(மேலதிக செயலாளர் - கொள்கை திட்டமிடல் பொருளாதார விவகார சிறுவர், இளைஞர் கலாசார அலுவல்கள் அமைச்சு)

நன்றியுரை : கவிஞர். வி. மைக்கல்கொலின்
(ஆசிரியர் - மகுடம்)

நிகழ்ச்சித்தொகுப்பு

ஆ.கி பிரான்சிஸ்

**சிறப்பு விருந்தினர்களும்**
**சிறப்பு பிரதி பெறுவோரும்**

திரு.சீ. கிரிதரன்
(மேலதிக அரசாங்க அதிபர் - மட்/ மாவட்ட செயலகம்)

திரு.இரா. நெடுஞ்செழியன்
(திட்டமிடல் பணிப்பாளர் - மட்/மாவட்ட செயலகம்)

சட்டத்தரணி மு. கணேசராசா
(ஆலணயாளர் - உள்நாட்டு இலறைவரித் திணைக்களம் தலைவர் - மட்/ தமிழ்ச் சங்கம்)

திரு.N. தனஞ்சயன்
(பிரதி ஆணையாளர் - மட்/மாநகர சபை)

திரு. பொன். செல்வநாயகம்
(தவிசாளர் - கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்வி பணியகம்)

கலாபூசணம் செ. எதிர்மன்னசிங்கம்
(முன்னாள் வட கிழக்கு மாகாண உதவிக்கலாசார பணிப்பாளர்)

திரு.S.V. சுவேந்திரன்
(முகாமையாளர் - மட்/ தேசிய சேமிப்பு வங்கி)

திரு.J.S ஜெயமாறன்
(பொறியியலாளர்)

செல்வி. தங்கேஸ்வரி கதிராமன்
(தொல்லியல் ஆய்வாளர்)

திரு.முருகு தயானந்தன்
(மட்டக்களப்பு வாசகர் வட்டம்)

திரு M.செல்வராசா
(உரிமையாளர் - ஈஸ்ட்லகூன் - உபதலைவர் - மட்/ தமிழ்ச் சங்கம்)

கவிஞர் கதிர்பாரதிதாசன்
(தலைவர் மட்/ தமிழ் நாடக மன்றம்)

திரு.S.சிவபாதசுந்தரம்
(உரிமையாளர் - சண்பன்சி ஹவுஸ்)

திரு.S. பாக்கியநேசன்
(கிராம சேவை உத்தியோகத்தர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனல் மின்...

வெளிக்காட்டியுள்ளதுடன் அச் செயற்பாடடுகளை எதிர்த்துத் தமிழ்க் காங்கிரஸ் தனது கடுமையான செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்பதையும் வலியுறுத்தியுள்ளது.

அவ்விஞ்ஞாபனத்தில் சம்பூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அனல் மின்நிலையத்தை உருவாக்கும் நடவடிக்கையின் மீதான எதிர்ப்பை "சம்பூரில் அமைக்கப்பட்டுவரும் அனல் மின் நிலையத்தினால் சுற்றுச் சூழல் பாதிப்பு உள்ளது என மக்களும், சமூக அமைப்புக்களும் மேற்கொண்டுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு நாம் வெளிப்படையான ஆதரவை வழங்குவதுடன் அவர்களுடன் இணைந்து செயற்படவும் தயாராக உள்ளோம்." வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கின் காணிப்பிரச்சனைகளையும் மையப் படுத்தியுள்ள அந்தத் தேர்தல் விஞ்ஞாபனமானது வல்லாதிக்கத்தின் ஊடாக தமிழர்களின் வாழ்விடங்களும் வாழ்வாதாரங்களும் பறிக்கப்பட்டுள்ள கிழக்கின் நிலங்களை மக்களுடன் சேர்ந்து விடுவிக்கப் போராடுவோம் என தெரியப்படுத்தியுள்ளது.

## கூட்டமைப்பி...

மாற்றுத்தலைவர்களை உருவாக்காமல் தமிழ் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நடைபெறப்போகும் தேர்தல் தமிழ் மக்களுக்கு முக்கியமான தேர்தலாகும்.எமது உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு மீண்டும் ஒருவாய்ப்புக்கிடைத்துள்ளது.

மட்டக்களப்பு மக்களாகிய நாம் விழிப்பாக இருக்கவேண்டும்.கடந்த பத்து வருடமாக என்னை அர்ப்பணித்து உங்களுக்கு சேவையாற்றியுள்ளேன்.

குறிப்பாக மின்சார தேவை குறிப்பிடத்தக்க அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.கல்வியில் பாரிய அபிவிருத்தினை கண்டுள்ளோம். சுகாதாரம் மேம்பட்ட நிலையில் இருப்பதுடன் கணிசமான வீடுகள் தேவையினையும் பூர்த்திசெய்துள்ளோம். அதேபோன்று குடிநீர்ப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது, விவசாய மேம்பாடு, குளங்கள் புனரமைப்பு என பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மண்முனைப்பாலத்தினையும் எனது காலத்தில் எனது முயற்சியினால் அமைத்துக்கொடுத்துள்ளதுடன் அதன் மூலம் படுவான்கரை பிரதேச மக்கள் மிகுந்த நன்மையடைந்துவருகின்றனர்.

இதற்கு மேலாக இந்த நாட்டில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்காக நிரந்தர அமைதியை ஏற்படுத்தி தந்துள்ளேன்.இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட காலப்பகுதியில் இரவு பகல் பாராது பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டு தேவையான உதவிகளை வழங்கியிருந்தேன்.

என்மீது தமிழ் மக்கள் தனிப்பட்ட ரீதியில் அன்பும் மரியாதையும் கொண்டுள்ளார்கள் என்பது எனக்கு தெரியும்.அதனால் நான் உங்களிடம் உரிமையுடன் இந்த விடயத்தினை கோருகின்றேன். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களாகிய நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு உங்களை அன்பாக கேட்டுக்கொள்கிறேன் எனத் தொடர்கின்றது.

## ஆதரவாளர்....

இவ்வாறான கடைநிலை அரசியல் செயற்பாடுகளை களத்திலுள்ள பிரபலமான தமிழக் கட்சியின் உறுப்பினர்களே முன்னெடுப் பதாகவும் அவர் தெரிவித்தார்.

"கடந்த வாரத்தில் தம்பலகாமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான திரு. சந்திரகுமார் (லிங்கன்) அவர்களை அனுகிய தமிழகட் கட்சியொன்றின் பிரதிநிதிகள் அவரை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் செயற்பாடுகளில் இருந்து விலகியிருக்குமாறும் அதற்காக பல லட்சங்களைத் தருவதாகவும் பேரம் பேசியிருந்தனர். எனினும் தமிழ்த் தேசமொன்றே தனது நோக்கு எனத் தெரிவித்திருந்த சந்திரகுமார் அவர்களது பேரம் பேசலை நிராகரித்திருந்தார்.

அடுத்து மூதூர் தெற்கைப் பிரதிநிதித்துவப் படுத்தி இத் தேர்தலில் போட்டியிடும் திரு.க தங்கேஸ்வரனை அணுகிய குறித்த தமிழ்க் கட்சியின் உறுப்பினர்கள் முயற்சித்த பேரம் பேசல் பலிக்காமையினால் அவர் தற்போது மேற்கொண்டுவரும் ஒப்பந்த வேலைகளை இழக்க வேண்டிவரும் என அச்சுறுத்தியுள்ளனர்.

கடந்த 5ம் திகதி இரவு பாலத்தடிச்சேனை தமிழ்க் காங்கிரஸ் செயற்பாட்டாளரான திரு. பிரபாகரன் அவர்கள் மூதூரில் பேருந்துக்குக் காத்திருந்த வேளையில் தனது மகிழுந்தில் வற்புறுத்தி ஏற்றிய இளைஞர் எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் ஆயதக்குழுவின் வேட்பாளரும் மூதூர் பிரதேசசபையின் உறுப்பினரொருவரும் அச் செயற்பாட்டாளரை காங்கிரஸ் செயற்பாடுகளில் இருந்து விலகியிருக்குமாறு அன்புக்கட்டளையிட்டுள்ளனர்.

நேற்று (7) அரசியல் பரப்புரைச் செயற்பாடுகளில் மக்கள் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்த மூதூர் கிழக்கைப் பிரதிநிதித்து-வப்படுத்தும் மூதூர் பிரசைகள் சங்கச் செயலாளர் திரு. ஜீவேந்திரன் அவர்களைக் கைத்தொலைபேசியின் ஊடாகத் தொடர்புகொண்ட மூதூர் பிரதேசசபையின் உறுப்பினர் கிழக்கு மாகாண அமைச்சரொருவர் அவரைச் சந்திக்க விரும்புவதாகவும் சந்திக்க வருமாறும் அழைப்பை விடுத்திருந்தார். எனினும் தான் தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் தேர்தல் முடிந்த மறுநாள் அமைச்சரைச் சந்திப்பதாகக் கூறி அவ்வழைப்பினைச் சாதுரியாக அவர் தவிர்த்திருந்தார்.

எனவே எதிரணியினரே! உங்களது இவ்வாறான இழிநிலை அரசியல் செயற்பாடுகளைக் கைவிடுமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்." எனத் தெரிவித்த இரா ஸ்ரீஞானேஸ்வரன் தமிழ்க் காங்கிரஸினராகிய நாங்கள் தேசம் என்ற கொள்கையில் தெளிவான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். எம்மைக் கருத்தியல் அடிப்படையில் எதிர் கொள்வதே தமிழர் விடுதலைக்கான அரசியல் செயற்பாடாக அமையும்

இனியும் இவ்வாறான செயற்பாடுகள் தொடருமாயின் அனைத்து ஆதாரங்களுடன் தேர்தல் செயலகத்தின் திருகோணமலை மற்றும் தலைமை அலுவலகங்களில் முறைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டிவரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் மக்கள்....

ரொறன்ரோவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (கனடா) ஒழுங்கு செய்த இரவு விருந்தில் தொலைபேசி வாயிலாக பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த இரவு விருந்து மார்க்கம் நியூ யஸ்மின் விருந்து மண்டபத்தில் ஓகஸ்ட் 2 ஆம் நாள் மாலை இடம் பெற்றது.

தொடர்ந்து பேசிய இரா. சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் பயணத்தை முடிக்க விரும்புகிறது. எம்மைப் பொறுத்தவரை எமது அரசியல் பயணத்தை தொடர்ந்தும் நீடிக்க முடியாது. அதனை முடிக்க விரும்புகிறோம். எதிர்வரும் ஓகஸ்ட் 17 இல் நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தல் ஆகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 20 ஆசனங்களை ததேகூ ப்பு பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு 20 ஆசனங்களை பெற்றுக்கொள்ளும் போது எங்களால் வலுவான நிலையில் இருந்து அரசாங்கத்தோடு பேசமுடியும்.

அதற்கு மக்கள் ஆதரவு எமக்கு வேண்டும். இந்தத் தேர்தல் மூலம் ஏற்படும் விளைவுகள் எதிர்காலத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே இந்தத் தேர்தலை எமது அரசியல் பயணத்தில் முக்கியமான மைல் கல்லாக கருதுகிறோம்.

"எமது இனப்பிரச்சினைக்கான தீர்வாக, ஒன்று பட்ட இலங்கைக்குள்ளே எம்மை நாமே ஆளக்கூடிய சம்'டி அரசியல் அமைப்பு முறையிலான அரசியல் தீர்வை 2016 ஆம் ஆண்டளவில் பெற்றுக்கொள்ள முடியும். என அவர் தெரிவித்துள்ளார்.

## விடுவிக்கப்பட்ட...

திடீரென மிதிவெடிப் பதாதைகள் படையினரால் இடப்பட்டதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

மிதிவெடி அபாயம் நிலவுவதாகக் காட்டி மக்களின் தன்னிச்சையான மீள்குடியேற்றத்தைத் தடுக்கும் அல்லது இன்னும் பலகாலம் பின்தள்ளும் செயற்பாடாகவே இந் நடவடிக்கைளைத் தாம் உணர்வதாக அம் மக்கள் தெரிவித்தனர்.

தன்னிச்சையாக மீள்குடியேறிய அம் மக்களின் நிலப்பகுதி ஊடாகவே சம்பூர் அனல் மின்நிலையத்திற்கான கொதிநீர் வெளியேற்றப்படும் குழாய்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் அதற்கு மேலும் சில ஏக்கர் காணிகளை அரசாங்கம் கையேற்கும் நிலை காணப்படுவதாகவும் அண்மையில் அங்கு வருகை தந்திருந்த மாவட்டச் செயலாளரின் தலைமையிலான குழுவினர் தெரிவித்திருந்தனர்.

காணிகள் குழாய்களை அமைப்பதற்காகச் சுவீகரிக்கப்படும் அச்சம் தமக்கு எழுந்துள்ளதாகக் குறிப்பிட்ட மக்கள் அவ்வாறு சுவீகரிக்கப்படுமாயின் அதனை எதிர்த்து தாம் போராடப் போவதாகவும் தெரிவித்தனர்.

## மூதூர் படு...

திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. இதனையடுத்து உலகையே அதிரவைத்த இக்கொலைகளுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் தற்போதுவரை அக் கொலைகளுக்கான நீதி கிடைக்-கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தலைப்..

திகதி சிறிய அளவிலான கவனயீர்ப்புப் போராட்டமொன்று சிவன் கோவிலுக்கு முன்பாகவுள்ள தேர்முட்டிப் பாதுகாப்பிடத்தில் நடைபெற்றது.

அனைத்துத் தமிழ் வேட்பாளர்களும் தம்மை ஏமாற்றிவிட்டதாகத் தெரிவித்த அமைப்பாளர் ஆஷா ஏமாற்றத்தினால் ஏற்பட்ட மனவுடைவாலேயே தாம் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகத் தீர்மானிக்கும் நிலையில் உள்ளதாகத் தெரிவித்தார்.

குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறைப் பிரதேசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இரண்டு மணி நேரம் நீடித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதம வேட்பாளர் இரா. ஸ்ரீஞானேஸ்வரன் காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறியும் போராட்டங்களில் தான் யாழப்பாணம் திருகோணமலை மற்றும் கல்முனைப் பிரதேசங்களில் நேரடியாகக் கலந்துகொண்டதைத் தெரியப்படுத்தியதுடன் தான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வானால் தனது முதலாவது நாடாளுமன்ற உரையில் இவ்விடயத்தை இரண்டாவது விடயமாகப் பேசுவேன் என்பதை உறுதிப்படுத்தினார்.

காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையானது சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த அறிக்கை இன்னமும் பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை என்பதால் அவ்வறிக்கையை வெளிப்படுத்தும்படி சனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கையை முன்னெடுப்பேன் என்றும் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்தார்.

வாக்குகள் என்பது மக்களின் மிக முக்கியமான ஆயுதம் எனத் தெரிவித்த அவர் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அந்த வாக்குகளை எதிர்வரும் 17ம் திகதியில் பிரயோகிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து போராடிய பெண்களிற்கு நீராகாரம் வழங்கப்பட்டதை அடுத்து போராட்டமானது முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# விளையாட்டு முரசு

## சைக்கிளோட்டப் போட்டி
### 41 போட்டியாளர்களுடன்

கழகங்களுக்கிடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சைக்கிளோட்டப் போட்டிகள், வெற்றிகரமானதாக நிறைவடைந்துள்ளன.

அதிகளவிலான சைக்கிளோட்டிகளின் பங்குபற்றலோடு இடம்பெற்ற இப்போட்டிகள், பார்வையாளர்களின் வரவேற்பையும் வென்றிருந்தன. விகாரமகாதேவி பூங்காவை அண்டிய, தட்டைக் களத்தில், 2.2 கிலோமீற்றர்களைக் கொண்டதாக இப்போட்டிகள் இடம்பெற்றன.

இத்தொடரில், ஆண்களுக்கான உயர் பிரிவில், விமானப்படையைச் சேர்ந்த ஜீவன் ஜெயசிங்க வெற்றிபெற்றார். 55:05:00 நிமிடங்களில் அத்தூரத்தைப் பூர்த்தி செய்தே, அவர் சம்பியனாகத் தெரிவாகியிருந்தார். துான் ராஜபக்ஷ, கிஹான் புஸ்பகுமார ஆகியோர் அடுத்த இடங்களைப் பெற்றுக் கொண்டனர். இப்பிரிவில் 41 பேர் பங்குபற்றியிருந்தனர்.



## ஜே.பி.எல் போட்டி

ஜே.பி.எல் என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகள் கடந்த 31.07.2015 முதல் யாழ்ப்பாணம் இந்து மற்றும் கொக்குவில் இந்து கல்லூரிகளின் மைதானங்களில் நடைபெறவுள்ளன. வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் இந்தச் சுற்றுப்போட்டி இம்முறை 3 வருடமாக லைக்கா மொபைல் அனுசரணையில் நடத்தப்படுகின்றது.

இம்முறை சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றுவதுடன், அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. கிறாஸ்கோப்பர்ஸ், சென்றலைட்ஸ், ஜொனியன்ஸ், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, திருநெல்வேலி கிரிக்கெட் அணி, ஹாட்லி ஆகியன ஒரு பிரிவாகவும், ஸ்கந்தா ஸ்ரார்ஸ், சென்ரல், யூனியன்ஸ், பற்றீசியன்ஸ், ஸ்ரீகாமாட்சி, விங்ஸ் ஆகிய அணிகள் ஒரு பிரிவாக போட்டிகளில் பங்குபற்றவுள்ளன. மொத்தமாக 38 போட்டிகள் நடைபெறவுள்ள இந்த சுற்றுப்போட்டியில், ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிப் போட்டிகளில் விளையாடும்.

## பெண்களுக்கான உலக கிண்ண வலைப்பந்தாட்டம்

சர்வதேச வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் மேற்பார்வையில் அவுஸ்திரேலிய வலைப் பந்தாட்ட சங்கம் முன்னின்று நடத்தும் 14ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டிகள் சிட்னி ஒலிம்பிக் பார்க் உள்ளக அரங்கில்



இன்று முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

10 தடவைகள் சம்பியனானதும் நடப்பு சம்பியனுமான அவுஸ்திரேலியா, முன்னாள் சம்பியன்களான நியூஸிலாந்து, ட்ரினிடாட் அண்ட் டுபாகோ ஆகியன உட்பட 16 நாடுகள் இவ்வருட உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

முன்னாள் ஆசிய சம்பியனான இலங்கை தனது முதலாவது போட்டியில் நடப்பு ஆசிய சம்பியன் சிங்கப்பூருடன் மோதியது.

## ஒலிம்பிக் இலச்சினை பிரதி செய்யப்பட்ட ஒன்றா!?




2020ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக், பராஒலிம்பிக் போட்டிகளுக்கான இலட்சினைகள், இன்னோர் இலட்சினையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை, அதன் வடிவமைப்பாளர் மறுத்துள்ளார்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒலிவியர் டேபி என்ற வடிவமைப்பாளர், லியாகே திரையரங்குக்கு தான் வடிவமைத்த இலட்சினையைப் போன்று காணப்படுவதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். எனினும், டோக்கியோ ஒலிம்பிக்குக்கான இலட்சினையை வடிவமைத்த கென்ஜிரோ சானோ, இந்த இலட்சினையானது தனது வாழ்வின் மிகச்சிறந்த வடிவமைப்பு எனவும், எந்த இலட்சினையையும் உதாரணமாகக் கொண்டு அதை வடிவமைத்திருக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வத் தகவலை ஒலிவியர் டேவி, டோக்கியோ 2020 ஏற்பாட்டாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதோடு, அதைப் பெற்றுக் கொண்டதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்தோடு, அவரது இலட்சினையானது காப்புரிமைக்கு உட்படுத்தப்படவில்லை என்பதால், பிரச்சினைகள் எவையும் கிடையாது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சுருண்டு வீழ்ந்தது அவஸ்திரேலியா

CRICKET AUSTRALIA

ஆஸ் தொடரின் 4வது டெஸ்டில், 8 விக்கெட்டை கைப்பற்றிய ஸ்டுவர்ட் புரோட்டின் "வேகத்தில்" சிதறிய அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 60 ஓட்டங்களுக்கு சுருண்டது. இங்கிலாந்து அவுஸ்திரேலியா அணிகள் மோதும் ஆஸ் தொடரின் 4வது டெஸ்ட் நோட்டிங்காமில் நேற்று தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து கப்டன் அலெஸ்டர் குக், களத்தடுப்பை தேர்வு செய்தார். முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி, ஸ்டுவர்ட் புரோட் வேகத்தில் சிதறியது. இவரது மிரட்டல் பந்துவீச்சில் பலர் ஆட்டமிழந்தனர். முதல் இனிங்சில் அவுஸ்திரேலிய அணி 60 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இங்கிலாந்து சார்பில் ஸ்டுவர்ட் புரோட் 8, மார்க் வுட், ஸ்ரீவன் பின் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

## சாது மிரண்டால் காடு கொள்ளாது

கால்பந்து களத்தில் பார்சிலோனா அணியின் துணை தலைவர் லயனல் மெஸ்ஸி எப்போதும் அமைதி போக்கையே கடைப்பிடிப்பவர். எதிரணி வீரர்கள் முன்கள வீரான இவரிடம்தான் தங்களது முரட்டு ஆட்டத்தை காட்டுவார்கள். தடுப்பாட்ட வீரர்களுக்கு தண்ணி காட்டுவதில் மெஸ்ஸி சளைக்காதவர். தற்போது பிரிசீஸன் நட்புரீதியிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் பார்சிலோனா அணியுடன் ஏ.எஸ். ரோமா அணி மோதியது.



போட்டியின் போது மெஸ்ஸிக்கும் ரோமா வீரர் மெபான்யான்காவுக்கு மிடையே மோதல் ஏற்பட்டது. அப்போது மெஸ்ஸி எதிரணி வீரரின் கழுத்தை நெரித்தார். இதனால் மைதானத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

## ஒரே சமயத்தில் டி – 20 போட்டிகள்

இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள **டி20 உலகக் கிண்ண கிரிக்கெட்** தொடருக்கான போட்டிகள் நடைபெறும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி ஆரம்பித்து ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த தொடருக்கான போட்டிகள் இந்தியாவின் எட்டு நகரங்களில் இடம்பெறும் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

டி20 இறுதிப் போட்டி கொல்கத்தா நகரின் ஈடன் கார்டன் மைதானத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொல்கத்தாவைத் தவிர சென்னை, பெங்களூர், தரம்சாலா, மொஹாலி, மும்பை, நாக்பூர் மற்றும் புதுடில்லியிலுள்ள விளையாட்டு மைதானங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டியில், ஆடவர் மற்றும் மகளிருக்கான போட்டிகள் ஒரே சமயத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




## இரு மலைகள் மோதல்
### செப்டம்பரில் ஆரம்பம்

ரொக்கி மார்சியானோவின் 49 பதிலில்லா வெற்றிகளை சமப்படுத்தும் முகமாக இதுவரை வெல்லப்படமுடியாதவராக இருக்கும் பிளயொட் மேவெதர், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி அன்ட்ரே பேர்ட்டோவை எதிர்கொள்ளவுள்ளார்.

முன்னாள் 63.5-67 கிலோ கிராம் பிரிவுச் சம்பியனான பேர்ட்டோ, இந்தப் போட்டிக்கு முன் 30 வெற்றிகளையும், 3 தோல்விகளையும் கொண்டுள்ளார்.

பிரித்தானியாவின் அமீர் கான், மேவெதருடன் செப்டெம்பரில் போட்டியிட விருப்பம் தெரிவித்த போதும், தனது இறுதி ஆறு போட்டிகளில் மூன்றில் தோல்வியைத் தழுவிய பேர்ட்டோவையே மேவெதர் போட்டியிட தெரிவு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

பொதுவாக தமிழர்களுக்கு 2ம் உலகப்போரின் பல விடயங்கள் தெரிய வந்ததே கடந்த தமிழர் போராட்டத்தின் வழிதான். உலக யுத்தத்தில் இடம்பெற்ற பல சம்பவங்கள் தமிழர் போரியலுடன் ஒப்பிடப்படுகிறது.

பல தமிழர்களின் தாக்குதல்கள் அவை சார்ந்த வடிவில் இருந்ததாக சொல்கிறார்கள்.

உதாரணமாக Operation Torch, Operation Overlord, Operation Cobra, Operation Normandy, Stalingrad, ஹிட்லரின் மின்னல்வேகத் தாக்குதல் முறை, பதுங்கு குழிகள் அமைக்கும் முறை, திகைப்புத் தாக்குதல், பதுங்கிச் சுடுதல் போன்ற உலகப்போர் சம்பவங்களுடன் ஒப்பிட்டு தாயகத்தில் ஆகாய கடல் வெளிச்சமர், ஆணையிரவுச் சமர், முல்லைச் சமர், இத்தாவில் தரையிறக்கம், ஜெயசிக்குறு எதிர்ச் சமர், கட்டுநாயகா, அனுராதபுரம் என்று பட்டியல் நீண்டு கொண்டே போனது.

2ம் உலகப்போரில் அமேரிக்கா நிகழ்த்திய இராணுவ நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தனி வரலாறாக பதியப் பட்டுள்ளன. அவற்றை தனித்தனிய பார்த்தால் நாம் இதற்குள்ளேயே சுற்றி சுற்றி செக்கு இழுக்க வேண்டியதுதான். நாம் இதனைக் கடந்து போய்கொண்டு இருப்போம். ஆங்காங்கு இந்த போரில் அமேரிக்கா பற்றி அறியலாம். ஏனென்றால் இன்றைய நவீன உலகத்தின் ஆணிவேர் இந்த 2ம் உலகப்போரில் இருந்துதான் ஆரம்பமாகிறது. ஆரோக்கியமான போட்டியா அல்லது அருவருப்பான போட்டியா என்று உலகம் அப்பொழுது சிந்தித்துக் கொண்டிருக்க வில்லை. போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து கொண்டே இருந்தது உலகம். கண்டு பிடித்ததை பயன்படுத்தியதும், பயன்படுத்தியதை மேம்படுத்தவும் இங்கிருந்துதான் உலகம் தொடங்குகிறது.

குறிப்பாக இந்த யுத்தத்தின் இறுதி அத்தியாயமும், என்னதான் ஜப்பான் மீது வெறுப்பு இருந்தாலும் மனதை கலங்க வைத்த விடயமுமான ஜப்பான் மீதான அணுக்குண்டு வீச்சு பற்றியும், வல்லரசு ஜப்பான் வாங்கிக் கட்டியதற்கான காரணமும் வருகிற தொடர்களில் ஆராயலாம்... ஏன்? திருகோணமலைக்கும் ஜப்பானுக்கும் கூட சம்பந்தமுண்டு. பலருக்குத் தெரிந்த விடயம். ஆனாலும் பார்க்கலாம்.

உலகமே அதிர்ந்தது. பூகோளமே பிளவுபட்டது. செயற்கை எரிமலைகள் திடீர் திடீர் என்று உலகெங்கும் வெடித்தன. பல நாடுகள் நட்பாகின, இன்னும் சில நாடுகள் பகை போல நடித்தன. எதிரிக்கு எதிரி நண்பனாகின. பழி வாங்கின. பலி கொண்டன. யுத்த களத்தில் ஆய்வுகள் செய்தன. மனிதர்களையும் மனித நேயங்களையும் கொன்று குவித்தன. நரகங்களை பூமியிலேயே உருவாக்கின. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் அதுதான் 2ம் உலக யுத்தம். நாம் அந்த யுத்தத்திற்குள் செல்ல தேவையில்லை. ஏனென்றால் அதன் சிறு பகுதியை யாவது நாம் நவீன வடிவில் எம்மண்ணில் கண்டுதான் இருக்கிறோம். உணர்ந்தும் இருக்கிறோம்.

1939 தொடங்கி 1945 வரை 6 வருடங்கள் தொடர்ந்த இந்த யுத்தத்தில் மட்டும் சுமார் 30 நாடுகளுக்கு மேற்பட்ட 100 மில்லியன் மக்கள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 11 மில்லியன் மக்கள் உலகெங்கிலும் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். 50 முதல் 85 மில்லியன் மக்கள் உலகெங்கிலும் மாண்டு போயிருக் கிறார்கள். அம்மாடியோவ்! இவ்வளவு பேரா? தலை சுற்றுகிறதல்லவா? அதற்குப் பின்னாவது இந்த உலக நாடுகள் திருந்தியதா என்றால் இல்லை. போர் செய்து கொண்டே இருக்கின்றன. மக்களும் செத்துப் போய்க் கொண்டே இருக்கிறார்கள்.


இந்த 2ம் உலக யுத்தமும் ஐரோப்பாவிலேயே மையம் கொண்டு இருந்தது. அதுவும் ஜெர்மனிதான் முக்கிய பங்கும் வகித்திருந்தது. அகண்ட பெரும் ஜேர்மன் ராச்சியக் கனவுடன் வந்த ஹிட்லரின் கைங்கரியத்தால்தான் அந்த போரே நடந்தது. ஆனாலும் ஹிட்லர் உலக மக்களால் வெறுக்கப் பட்டாலும், அவரை கதாநாயகனாகப் பார்ப்பவர்களும் அதிகமே. ஹிட்லரை விரும்பாதவர் கூட ஹிட்லர் மீசையுடன் திரியும் டீஆறு காரை அன்றும் இன்றும் என்றும் விரும்பி ஓடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். முன் முகப்பு ஹிட்லர் மீசை போல இருக்கும். ஒருபோதும் அந்த ஸ்டைல் மாற்றவே மாட்டார்கள்- அதனால் ஹிட்லர் உலகம் முழுக்க இப்பொழுதும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்.

அவை நிற்க ... 1 ம் உலகப் போர் தொடங்கி 2 ம் உலகப் போர் வரையான காலப்பகுதியில் அமெரிக்காவிற்குள் நடந்த சில வரலாற்று சம்பவங்களை தொட்டுக் கொண்டு வருவோம். ரசிய உள்நாட்டு போருக்குள்ளும் மூக்கை நுழைத்து இருக்கிறது. அதனை விட அமெரிக்க மாநிலங்களான யுட்டஹா, கொலராடோ பகுதிகளில் வசித்த அமெரிக்க பழங்குடியினருடன் இரத்த வெறி பிடித்தது போலவும் போர் செய்துதான் இருக்கிறார்கள். மேலும் அமெரிக்க வரலாற்றில் எங்குமே நிகழ்ந்திராத, என்றுமே நிகழாத ஒரு மிகப்பெரிய ஊழல் ஒன்று அதாவது "Teapot Dome Scandal" என வர்ணிக்கப்படும் 1923 இல் பெட்ரோலியத் துறையில் நிகழ்ந்த ஊழல். அடுத்தது 1929 இல் நிகழ்ந்த மாபெரும் அமெரிக்க பங்குச் சந்தை சரிவு. அதனால் ஒரு வல்லரசு நிலைக்குள் வந்ததாக பெருமை கொண்ட அமேரிக்கா நினைத்துப் பார்க்க முடியாத பொருளாதார நெருக்கடியையும் சுமார் பத்து வருடங்கள் கண்டுதான் வந்தது. "Great Depression" என்று உலகம் வர்ணிக்கும் அளவுக்கு அந்த நெருக்கடி அமெரிக்காவை துவள வைத்தது. அத்துடன் காலநிலை பிழைத்து நீண்ட வரட்சியையும் கூடவே பஞ்சம், பட்டினி வறுமை, வேலையின்மை, பணவீக்கம் என்று நெருக்கடிகள் ஏராளம். அதனால்தான் இன்று கூட பொருளாதார நெருக்கடிகள், தாழ்வுகள் வந்தால் கூட எதனையும் சமாளிக்கும் திறனை அந்த வரலாறு அவர்களுக்கு சொல்லிக் கொடுத்தது என்றால் பொய்யில்லை.

1920 இல் அமெரிக்க குடியுரிமை உள்ளவர்கள் பால் வேறுபாடு இன்றி அனைவருக்கும் வாக்களிக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டதால் முதன் முதல் அமெரிக்க பெண்களும் தேர்தல்களில் வாக்களித்த சம்பவம் குறிப்பிடத்தக்கது. அதனை விட பலரது கனவு வாகனம் "கார்" தொழிற்துறை யில் அமெரிக்காவின் புரட்சியும் அந்த காலப்பகுதியில்தான் நடந்தது. (இது ஒரு தனி வரலாறு முடிந்தால் பின்னர் பார்க்கலாம்) மேலும் ஆயுத தொழில்நுட்ப வளர்ச்சி, இராணுவ வளர்ச்சி, அணுஆயுதஆய்வுகள், விண்வெளி ஆய்வுகள், உலக வணிக மேலாண்மைகள் என்று அமெரிக்கா தன்னையும் புடம் போட்டுக் கொண்டதுதான் உண்மை. உள்நாட்டில் பொருளாதார சரிவு என்றாலும், உடன் அடுத்த யுத்தம் ஒன்றில் ஆதிக்கம் கொள்ளும் அளவிற்கு மிகவும் திட்டமிட்டது.

**வருகை - 08**

தொடரும்



வித்தியா சாகரன்

முகப்பகத்திலிருந்து...

## விநோதங்கள்

### திருமண கொண்டாட்டத்தில் நிகழ்ந்த விபரீதம்

திருமண கொண்டாட்டமொன்றின் போது வேடிக்கைக்காக தீர்க்கப்பட்ட துப்பாக்கி ரவையொன்று, அங்கிருந்து இரு மைல் தொலைவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியின் தலையில் பாய்ந்த சம்பவம் ஓமானில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் துப்பாக்கி ரவை பாய்ந்த நிலையில் அவசர சத்திரசிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர்கள், அவரது இடது கண்ணுக்குப் பின்புறமாக ஊடுருவியிருந்த துப்பாக்கி ரவையை பெரும் சிரமத்தின் மத்தியில் அகற்றியுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் திருமணங்கள் போன்ற வைபவங்களின் போது துப்பாக்கி ரவைகள் தீர்க்கப்படுவது வழமையாகும். கடந்த வருடம் மேற்படி சம்பவத்தையொத்த அனர்த்தங்களில் சிக்கி இரு ஓமானிய பிரஜைகள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 2வருட வாகன ஓட்டும் தடை

போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலையில் லொறி வெகுதூரம் பிழையான பாதையில் சென்று கொண்டிருந்தது. இதனால் எதிரே வந்த வாகன ஓட்டிகள் விபத்து நேராது தவிர்க்கும் பொருட்டு அச்சத்துடன் தங்கள் வாகனங்களை செலுத்தினர். இந்நிலையில் தகவலறிந்த காவல்துறையினர் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்தனர். இதனிடையே அவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

வாகனத்தை தவறான திசையில் செலுத்திய அந்த நபருக்கு 8 மாத சிறைத்தண்டனையும், வாகனம் ஓட்டுவதற்கு 2 ஆண்டுகள் தடையும் விதித்ததோடு மட்டுமல்லாமல் நீதிமன்ற செலவீனங்களுக்காக ரூ.18000 அபராதமாகவும் செலுத்த உத்தரவிட்டனர்.



### மது அருந்தியவர் விமானம் ஏற தடை

மது அருந்திவிட்டு விமானத்தில் உள்ள சக பயணிகள் மற்றும் பெண் விமான பணியாளர்களிடம் வரம்பு மீறி நடந்து வருவதும் தொடர்கதையாக உள்ளது. அத்துடன் பாலியல் ரீதியான தொந்தரவுகள் மட்டுமின்றி, விமானத்தில் பயணிக்கும் சக பயணிகளிடம் அடிதடிகளில் ஈடுபடுவது சமீபத்தில் அதிகரித்துள்ளது.

இதனை தடை செய்ய வேண்டும் என பிரித்தானிய பொலிசார் கோரிக்கை விடுத்துள்ளனர். பெரும்பாலான பயணிகள் விமான நிலையங்களில் அல்லது விமானங்களில் அமர்ந்து பின்னர் மது அருந்துவிட்டு பயணிப்பது தற்போது மிகவும் அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

- சர்வதேச பீர் தினம் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் முதல் வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகிறது. கலிபோர்னியாவில் உள்ள சாந்தா குரூஸ் என்ற இடத்தில் வைத்து 2007 ஆம் ஆண்டிலிருந்து இது சர்வதேச தினமாக கொண்டாடப்படுகின்றது.
- சீனாவின் பீஜிங் நகரிலுள்ள மலசலகூடமொன்றிலிருந்து புதிதாகப் பிறந்த பெண் குழந்தையொன்று அதிசயிக்கத்தக்க வகையில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. மேற்படி குழந்தையின் தாய் அந்தக் குழந்தையை மலசலகூடத்தில் பிரசவித்த பின் அதனைக் கைவிட்டு தலைமறைவாகியுள்ளார். இந்நிலையில் மலசலகூடக் குழாயில் தலை அடிபட விழுந்திருந்த குழந்தையின் அழுகைச் சத்தத்தைக் கேட்ட பொதுமக்கள் காவல்துறையினருக்கு அறிவித்ததையடுத்து, அந்தக் குழந்தை மீட்கப்பட்டுள்ளது.

இப்படியும் நடக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்ட காணிகளில் மிதிவெடி அபாயப் பதாதைகள்




சம்பூரில் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் காணிகளில் திடீரென மிதிவெடி அபாயப் பதாதைகள் இடப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவை அடுத்து சம்பூரில் உள்ள எண்ணூற்று பத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்களில் மக்கள் தன்னிச்சையாகக் குடியேறத் தொடங்கினர்.

போரினால் இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் தமது வாழ்விடங்களை இழந்து முகாம்களில் நிர்கதியாகி பத்து வருடங்கள் ஆகியுள்ள நிலையில் அவர்களது வாழ்விடக் காணிகள் காடு பற்றிப் போயிருந்தன.

அக்காட்டினை பிரதேசசபையின் உதவியுடன் இயந்திரங்கள் மூலம் அழித்து சிறிய கொட்டில்களை அமைத்து தற்போது மக்கள் வாழ்ந்து வரும் போது 21




## சைவ சமய
### வினாவிடைப் போட்டி

திருகோணமலை சிவநயனி நற்பணி மன்றம் சைவ சமய திறந்த வினாவிடைப் போட்டியொன்டறை நடாத்தவிருப்பதாக அச்சங்கத்தின் செயற்பாட்டாளர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

சைவசமய அறிவினை வளர்ப்பதற்காக நடாத்தப்படுகின்ற இவ் இலவச வினாவிடைப் போட்டியின் வினாக் கொத்துக்களை கோணேசர் ஆலயத்திலும் நகரத்திலுள்ள ஏனை ஆலயங்களின் பணிமனைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினாக்களுக்கு விடைகளை எழுதி எதிர்வரும் 16.08.2015ம் திகதிக்கு முன்னர் உரிய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் மூவருக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அறியத்தரப்படுகின்றது.

## விசேட பாதுகாப்பில் கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணத்திற்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பணிப்புரை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடியும் வரையில் கிழக்கு மாகாணத்திற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர், காவல்துறை மா அதிபர் என்.கே.இளங்கக்கோனுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளினால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் குழப்பம் விளைவித்த சம்பவமும் இவ்வாறு பணிப்புரை விடுக்க ஏதுவாகியது என தெரிவிக்கப்படுகிறது.




இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 08.08.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org